பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 17 சனிக்கிழமை 31.03.2018 கதிர் 146

## ரணிலை வீழ்த்த மைத்திரி இணக்கம்?

புதனன்று நாடாளுமன்றுக்கு வரும் நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை வீழ்த்த சு.க. தரப்பில் எடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன பச்சைக் கொடி காட்டி விட்டார் என்று நேற்றிரவு சு.கவுக்கு நெருக்கமான சில வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன. பக்கம் 18

### ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை

# ஜனாதிபதி – பிரதமர் பேசியும் தீர்வில்லை

### சு.கவுக்குள் குழப்பம் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 31

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்று முன்தினம் இரவு சுமார் மூன்று மணித்தியாலத்துக்கு மேல் கூடி ஆராய்ந்தனர்.

இந்தச் சந்திப்பில் சுமுகமான இணக்கத் தீர்வு காணப்பட்டதாக முதலில் செய்தி வெளியான போதும், அது பின்னர் அடியோடு மறுக்கப்பட்டது. ஜனாதிபதி தலைமையிலான சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்ட குழப்பமே இந்த மறுப்புக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. பக்கம் 03

## ஈழத் தமிழரில் கரிசனை கொண்டவர் ஐ.நா. உதவிச் செயலாளராகின்றார்

### அமெ. பிரதிநிதி றோஸ்மேரி டிகார்லோ நியமனம்



இலங்கையில் இறுதிப் போரில் சிக்குண்டுள்ள தமிழ் மக்களை மீட்க போர் நிறுத்தத்தை ஏற்படுத்த வேண்டும் என ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வாதிட்டவரும் போர் முடிவுக்கு வந்த பின் இலங்கை மீது போர்க்குற்ற விசாரணையைக் கொண்டு வரவேண்டும் என்பதில் உறுதியாகவிருந்த வருமான ஐ. நாவுக்கான அமெரிக்காவின் முன்னாள் பிரதித் தூதுவர் றோஸ்மேரி டிகார்லோ, ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பக்கம் 18

## இந்திய - சீனப் பலப்பரீட்சையை இங்கு தருவித்துள்ளது நல்லாட்சி


### கோட்டாபாய ராஜபக்ஷ விசனம்

கொழும்பு, மார்ச் 31

ஏட்டிக்குப் போட்டியாக நாட்டின் தேசிய சொத்துக்களை மாறி மாறி சீனாவுக்கும் இந்தியாவுக்கும் தாரைவார்த்ததன் மூலம் அந்நாடுகளின் பலப் பரீட்சைக்கான தளமாக இலங்கையை மாற்றியுள்ளது தற்போதைய அரசு.

–இவ்வாறு விசனம் தெரிவித் பக்கம் 18

## முதல்வர், அதிகாரிகளுடன் மங்கள கலந்துரையாடல்





2018ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கு முன்மொழியப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மீளாய்வு தொடர்பில், நிதிய மைச்சர் மங்கள சமரவீரவுக்கும் வடக்கு பக்கம் 18

## சந்திரிகா இன்று யாழ். வருகை




- எஸ்.நிதர்ஷன் -

நல்லிணக்க செயலணியின் தலைவியும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மூன்று நாள் விஜயமாக இன்று யாழ்ப்பாணத்திற்கு பக்கம் 18

## தமிழர் விருப்புக்கு மாறாக செயற்படுகின்றார் சம்பந்தன்

### யாழில் வாசுதேவ குற்றச்சாட்டு



- எஸ்.நிதர்ஷன் -

மைத்திரி–ரணில் கூட்டு அரசால் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட் பக்கம் 18

## புதுவருடத்துக்கு முன் அப்பாவை ஜனாதிபதி அனுப்பி வைப்பார்

### ஆனந்தசுதாகரனின் பிள்ளைகள் நம்பிக்கை

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், மார்ச் 31

அரசியல் கைதியான தங்களின் தந்தையார் ஆனந்தசுதாகரனை விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆனந்தசுதாகரனின் பிள்ளைகள் இருவரும் நன்றி தெரிவித்துள்ளனர். பக்கம் 18

## காணாமலாக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்தின் 400 ஆவது நாள்

### வடமாகாண சபை முன் நேற்றுக் கவனவீர்ப்பு



- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், மார்ச் 31

வலிந்து காணாமலாக்கப்பட்டோரைத் தேடிப் போராட்டம் நடத்தும் உறவு பக்கம் 18

## இனி அது ரகசியம் அல்ல!

வலிகாமம் தெற்குப் பிரதேச சபைக்கு நேற்று முன்தினம் நடந்த தவிசாளர் தெரிவின் போது தமிழ்க் கூட்டமைப்பின் குழப்பம் அம்பலத்துக்கு வந்தது தெரிந்ததே.

அங்கு நடந்த சுவாரஸியமான சம்பவம் இது. கட்சிகளின் நிலைப்பாடுகள் எப்படி பக்கம் 03

## நல்லிணக்கபுரத்தில் 25 வீடுகள்; இராணுவத் தளபதி கையளிப்பு



- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், மார்ச் 31

வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சின் உதவியில் பக்கம் 18

## சீனா பறந்தார் கோட்டாபய

கொழும்பு, மார்ச் 31

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ நேற்றுக் கொழும்பிலிருந்து சீனாவுக்குப் பயணமாகியுள்ளார்.

சீனாவில் உள்ள உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் பாதுகாப்பு மற்றும் பொருளாதார விடயங்கள் குறித்துத் தனது அனுபவங்களை விரிவுரைகளாகப் பகிரும் திட்டத்தின் கீழ் அவர் சீனா சென்றுள்ளார். பக்கம் 18

## அபாண்டமான குற்றச்சாட்டுக்களில் இருந்து ஈ.பி.டி.பியை விடுவித்துள்ளது கூட்டமைப்பு

### ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் பெருமிதம்

- எஸ்.நிதர்ஷன் -

ஈ.பி.டி.பி. கட்சியினரை ஒட்டுக் குழு என்றும், யுத்தக் குற்றம் புரிந்தவர்கள் என்றும், தமிழ் உறவுகளைக் காணாமல் ஆக்கியவர்கள் என்றும் பொய்யான குற்றச்சாட்டுக்களைக் கூறி பக்கம் 18

## பருத்தித்துறை - தொண்டமானாறு வீதி புத்தாண்டுடன் முழுமையாகத் திறப்பு

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், மார்ச் 31

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு முதல் தொண்டமானாறு – பருத்தித்துறை வீதி பொது மக்களினது முழுமையான பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ள பக்கம் 18

## யுத்தக் குற்றம், தமிழ்த் தேசியம் குறித்து பேசும் அருகதை சிறிதரனுக்கு இல்லை

### றெமிடியஸ் பாய்ச்சல்

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், மார்ச் 31

"யுத்தக் குற்றங்கள் குறித்தோ, தமிழ்த் தேசியம் குறித்தோ பேசுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுக்கு உரிமையில்லை."

– நேற்று யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஈ.பி.டி.பியின் ஊடகவியலா பக்கம் 18

# ‘கசூரினா’ கடற்கரையில் கண்காணிப்புக் கமெரா

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்ப்பாணத்தின் காரைநகரில் அமைந்துள்ள கசூரினா கடற்கரையில் கண்காணிப்புக் கமெராக்களைப் பொருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தக் கடற்கரையில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையை காரைநகர் பிரதேச சபை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

கசூரினா கடற்கரையைப் பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகள் சிலர், கடந்த தினத்தில் பிரதேச



சபையினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த கழிவறைகள் மற்றும் குளியலறைகளை சேதப்படுத்தியிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மதுபானம் அருந்துதல், போதைப் பொருள் பாவித்தல் மற்றும் பெண்களுடன் சேட்டைகள் புரிதல் போன்ற சமூக விரோதச் செயல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாகவே குறித்த கடற்கரையில் கண்காணிப்பு கெமராக்களை பொருத்த அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர் எனதெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கசூரினா கடற்கரையில் வட்டுக் கோட்டைப் பொலிஸாரின் தற்காலிக காவலரண் அமைந்து தினமும் இரண்டு பொலிஸ் உறுப்பினர் வீதம் காவல் கடமையில் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இருவேறு விபத்துக்களில் இருவர் பரிதாபமாக பலி

இலங்கையில் உள்ள இருவேறு பிரதேசங்களில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் நேற்றைய தினம் இரண்டு பேர் உயிரிழந்துள் ளனர். திஹாரிய மற்றும் மஹர ஆகிய பகுதிகளிலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

கொழும்பு நோக்கி, கொழும்பு கண்டி பிரதான வீதியின் திஹாரிய பிரதேசத்தில் பயணித்த லொறி ஒன்று எதிர்திசையில் வந்தமோட்டார் சைக்கிளில் மோதியுள்ளது. இதனால், அதில் பயணித்த ஒருவர் உயிரிழந்தார். இந்த விபத்தில், 30 வயதுடையயக்கல பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தகவல் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கடவத்தை – கிரிபத்கொடை வீதியின் மஹர – எக்சத் மாவத்தைக்கு அருகில் கார் ஒன்றும் மோ.சைக்கிள் ஒன்றும் மோதியுள்ளன.


இந்த விபத்தில் மோ.சைக்கிளில் வந்தவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த விபத்தில், 53 வயது டைய களனி பிரதேசத்தை சேர்ந்த நபரொருவரே உயிரிழந் துள்ளார் என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# போரில் குடும்பத்தை இழந்தும் 9ஏ பெற்று சாதித்த மாணவன்

முல்லைத்தீவு, மார்ச் 31

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் கல்வி பயின்று வரும் இராசேந்திரம் பிரதீபன் என்னும் மாணவன் கல்விப்பொதுத்தராதர சதாரணதரப் பரீட்சையில் 9 ஏ பெறுபேறுகளை பெற்று சித்தியடைந்துள்ளார்.

இறுதி யுத்தத்தின் போது தனது தாயும் மூன்று சகோதரர்களும் உயிரிழந்துள்ளனர். இந்த



துயரச் சம்பவம் தன் மனதை பெரிதும் பாதித்திருந்த நிலையில் தன் தந்தையின் அரவணைப்பாலும் அதிக ஊக்கத்தாலும் இன்று 9ஏ பெறுபேறு களை இந்த மாணவன் பெற்றுள்ளார்.

தொடர்ந்து கணிதத் துறையில் கல்வியை கற்று ஒரு விமானியாக ஆவதே தன் எதிர்கால லட்சியம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் தோற்றிய 12 மாணவர்களில் இரண்டு மாணவர்கள் 9ஏ பெறுபேறுகளை பெற்றுள்ளனர்.

அத்துடன், 8 மாணவர்கள் தொடர்ந்து உயர்தரத்தில் கற்பதற்கு தகுதி பெற்று, முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்திற்கு பெருமை சேர்த்துள் ளனர் என இந்தப் பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார்.

# புளியம்பொக்கணை ஆலயத்தை வந்தடைந்தன பண்டங்கள் சேகரிக்கப்பட்ட மாட்டு வண்டிகள்

முல்லைத்தீவு, மார்ச் 31

வரலாற்று சிறப்புமிக்க கிளிநொச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தர பொங்கல் நிகழ்வுக்குரிய பண்டங்கள் சேகரிக்கப்பட்ட மாட்டு வண்டிகள் நேற்று ஆலயத்தை வந்தடைந்தன.

வருடந்தோறும் பங்குனி உத்தர பொங்கல் நிகழ்வுக்கு எட்டு நாள்களுக்கு முன் விளக்கு வைக்கும் நிகழ்வு இடம்பெற்று பொங்கலுக்கான பண்டங்களைச் சேகரிக்கும் மாட்டு. வண்டிகள் யாழ்ப்பாணம் புத்தூர் நோக்கி புறப்படும்.

அவ்வாறு புறப்படும் மாட்டு வண்டிகள் பொங்கலுக்கான பண்டங்களைச் சேகரித்துக் கொண்டு பொங்கல் தினமான பங்குனி உத்தர நாள் காலை ஆலயத்தை வந்தடையும்.

அவ்வாறே நேற்று பண்டங்களை சேகரித்த மாட்டு வண்டிகள் புத்தூரிலிருந்து ஏ9 பிரதான வீதி





வழியாக பரந்தன் வந்தடைந்து, அங்கிருந்து பரந்தன் முல்லைத்தீவு வீதி ஊடாக புளியம்பொக்கணை ஆலயத்தைச் சென்றடைந்துள்ளன.

நேற்று ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தர பொங்கல் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (கு)

# ஹற்றன் – நுவரெலியா பிரதான வீதியில் விபத்து

கொழும்பு, மார்ச் 31

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியின் பத்தனை பகுதியில் இரு லொறிகள் நேருக்கு நேர் மோதி விபத்து நேர்ந்துள்ளது.

இந்த விபத்து திம்புல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டெவிசியார் தோட்டப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் சாரதி யொருவர்காயமடைந்த நிலையில் கொட்டகலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மனுக்கு கும்பாபிஷேகம்!

முல்லைத்தீவு, மார்ச் 31

வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய புனருத்தாபன மகா கும்பாபிஷேக பெருவிழா நேற்றைய தினம் சிறப்புற நடைபெற்றது.

கடந்தமூன்றுஆண்டுகளுக்கு முன் ஆலயம் பாலஸ்தானம் செய்யப்பட்டு ஆலய புனரமைப்பு பணிகள் பல கோடி ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டன.

குறிப்பாக இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட கருங் கல்லினால் ஆலய புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு அலங்கார வேலைகள் செய்யப்பட்டு நேற்று கும்பாபிஷேகம் நடைபெற்றது.





ஆரம்ப நிகழ்வாக கடந்த 26 ஆம் திகதி ஆலயத்தில் கிரிகைகள் இடம்பெற்று கடந்த 27 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை எண்ணெய்க்காப்புசத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மனுக்கு எண்ணெய் சாத்த இலங்கையின் பல பாகங்களிலும், சர்வதேச நாடுகளிலிருந்தும் பல லட்சக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து நேற்றுக் காலையில் ஆலயத் தில் வெகு விமர்சையாக கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதில் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் வருகை தந்து அம்மனை வழிபட்டனர். (கு-81)

# ஜனாதிபதியும் பிரதமரும் பிரிந்து நிற்கையில் ரணிலைக் காப்பாற்றுவதில் அர்த்தமில்லை

## இப்படிக் கூறுகின்றார் ஸ்ரீதரன் எம்.பி.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும்பிரதமர்ரணில்விக்கிரமசிங்கவும் ஒன்றாக இருந்தால் அந்த அரசுக்கு நாங்கள் ஆதரவு வழங்குவது எங்களுடையமக்களின்அரசியல்தீர்வை நோக்கிய பயணங்களுக்குச் சாதகமாக இருக்கும். ஆனால் அவர்கள்பிரிந்துநிற்க,நாங்கள் ரணில்விக்கிரமசிங்கவிற்குவாக்களிப்பதுஎன்பதுஎங்களுக்கான ஒருசாதகத்தன்மையைத்தரும் என்று நம்ப முடியாது.

– இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

பிரதமர்ரணில்விக்கிரமசிங்கவிற்கு எதிராக எதிர்வரும் நான்காம் திகதி நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவுவழங்குமாஎனநாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனிடம் நேற்று தொடர்பு கொண்டு கேட்டபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தப் பிரேரணை தொடர்பிலே 02ஆம் திகதி அல்லது 03ஆம் திகதி காலையில் எங்களது கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்று கூடி ஒரு முடிவை எடுப்பதற்குக் காத்திருக்கின்றோம்.

இணக்க அரசியலுக்கான ஆட்சியை அமைப்பதற்காகக் கடந்த 2015 ஆம் ஆண்டு தமிழர்களது பங்கைப் பெற்றுக் கொடுத்தவர்கள் என்ற வகையிலும், ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இரண்டு பேரும் இணைந்த வகையில் ஏற்படுகின்ற ஆட்சிக்குத்தான் நாங்கள்எங்களதுஆதரவைவழங்கியிருந்தோம்.தமிழ் மக் கள் ஒரு நிரந்தரமான, ஒரு கௌரவமான, நீடித்து நிலைக்கக்கூடியஒருசுயாட்சியைப்பெறுவதற்காக இந்த இரு பெரும் கட்சிகளும் இணைந்து ஒரு தீர்வை ஏற்படுத்தித் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு எங்களது ஆதரவை இதுவரை காலமும் வழங்கியிருந்தோம்.

ஆனால்அவர்கள்தமக்குள் இரண்டாகப் பிரிந்து நின்று பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்கு எதிராக ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருகின்றபோது, அத்தகைய தனி நபர் ஒருவருக்காக, தனிக் கட்சி சார்ந்த ஒருவரைக் காப்பாற்றுவதற்காக, நாங்கள் அவருக்குச் சார்பாக வாக்களிப்ப தென்பது ஒரு பொருத்தமான விடயமாக எங்களால் கொள்ளப்படவில்லை.

நிறைவேற்றப்பட்டவேண்டிய பலகருமங்களை இவர்கள் இருவரும் இணைந்திருந்தபோதும் நிறைவேற்றவில்லை.

தமிழ்மக்களின்நிலங்கள்இன்னமும் விடுவிக்கப்படவில்லை. அதேபோல சிறைகளிலே தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற அரசியல்கைதிகளின்விடுதலை தொடர்பில்அக்கறைசெலுத்தப்படவில்லை.வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கானதீர்வு எதுவும் வழங்கப்படாத நிலையில்அவர்கள்வீதியில்போராடிக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களது போராட்டத்தைக் கொச்சைப்படுத்துகின்றவகையிலேயே அரசுத் தரப்புடைய செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. உண்மைகளைக் கண்டறிந்து, நீதியை நிலைநாட்டி, பொறுப்புக்கூறலைஉறுதிப்படுத்தஇந்த அரசாங்கம் இன்னும் சரியான நிலைப்பாடு எதனையும் எடுக்கவில்லை.

ஒரு திறந்த வெளிச்சிறைச்சாலையில், வாழ்வாதாரங்கள் எதுவும் இன்றி, யுத்தத்திற்குப் பின்னர் பொருளாதார அபிவிருத்திகள் எவையும் முன்னெடுக்கப்படாத நிலையில், வடக்குக் கிழக்கில் தமிழ் மக்கள் ஒரு விரக்தி நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

அந்தச் சமயத்தில், ஒரு தேசியக் கட்சியை சார்ந்த ஒருவர்ஆட்சியமைப்பதற்காக நாங்கள்எங்களதுவாக்குகளைப்பிரயோகித்தல்என்பதுஎங்களுக்கு ஒருசாதகமானமுடிவாகஇருக்குமென நாங்கள் கருதவில்லை.

ஆனால்கடந்தகாலங்களில் திரைமறைவில் மேற்கொள்ளப்பட்டசிலசம்பவங்கள்பற்றிய அனுபவங்கள் எங்களுக்கு இருக்கின்றன.

1990களில் பிரேமதாச ஆட்சியில் இருந்த போது, சுயேச்சைக்குழுவாக இருந்த ஈரோஸ் இயக்கத்தினூடாகநாடாளுமன்றத்திற்குத்தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள்தங்களதுபதவிகளை இராஜினாமாச் செய்திருந்தார்கள்.

அப்போது பிரேமதாசாவின் பதவிக்குஆபத்துஏற்பட்டபோது அவரைக் காப்பாற்றுவதற்காக அந்த சுயேச்சைக்குழு நாடாளுமன்ற உறுப்பினர்களை மீண்டும் நாடாளுமன்றத்துக்கு அனுப்புவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

காரணம், அந்த அரசைத் தக்க வைத்து அதனூடாக ஓர் அரசியல் தீர்வை அல்லது சமாதானத்தைஏற்படுத்துவதற்கான ஒரு முயற்சி அப்போது எடுக்கப் பட்டிருந்தது.

அதேபோல, 2002 ஆம் ஆண்டிலிருந்து 2004ஆம் ஆண்டு வரைக்கும் ரணில் விக்கிரமசிங்க அரசோடுதமிழீழ விடுதலைப்புலிகள் பேசுகின்ற சமயத்தில்அன்ரன்பாலசிங்கம் அந்த அரசைக் காப்பற்ற வேண்டியதேவையிருக்கின்றது என்று சொன்னார். இந்த அரசோடு நாங்கள் பேச்சுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம், அதனால், இந்த அரசின் இருப்புத்தேவை, நாங்கள் எங்களது மக்களுக்கான அரசியல் தீர்வைப் பெறுவதற்குத் தேவையென்ற அடிப்படையில் இந்த அரசு தொடர இடமளிக்கவேண்டும்எனஅவர்குறிப்பிட்டிருந்தார்.

இந்த நகர்வுகள் கடந்த கால இராஜதந்திர நடவடிக்கைகளாக இருந்தாலும் இப்போது இருக்கின்ற களச் சூழல் வித்தியாசமானது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஓரணியாகச் செயற்படுவார்களாக இருந்தால் அவர்களின் அரசுக்கு நாங்கள் ஆதரவு வழங்குவதென்பது எங்களுடைய மக்களின் அரசியல் தீர்வைநோக்கியபயணங்களுக்குச் சாதகமாக இருக்கும். ஆனால், இவர்கள் பிரிந்து நிற்கும்போது நாங்கள்ஒருதரப்பான ரணில் விக்கிரமசிங்கவிற்கு வாக்களிப்பதுஎன்பதுஎங்களுக்கான ஒரு சாதகத்தன்மையைத் தரும்என்றுநாம்நம்பமுடியாது.

ரணில் விக்கிரமசிங்க இதயசுத்தியோடுதமிழ்மக்களின்பிரச்சினைகளைக்கையாள்வார்என்பதற்கோ அல்லதுதமிழர்களின் நீண்டகாலஅரசியல்அபிலாசைகளைத் தீர்ப்பார் என்பதற்கோ அல்லதுதற்போதிருக்கின்றபிரச்சினைகளைத் தீர்த்துவைக்க முயற்சிப்பார் என்பதற்கோ நம்பிக்கைதரும் சாத்தியங்கள் ஏதுமில்லை.

அந்த வகையில் இந்த அரசைக்காப்பாற்றுவதற்குநாங்கள் முயற்சிக்கப்போவதில்லை.–என அவர்மேலும்குறிப்பிட்டுள்ளார்.

### ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான இரகசியச்சந்திப்பு அமைச்சர் ராஜித சேனாரத்னவின் இல்லத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றதாகவும் இதன் போதுபிரச்சினைகளுக்குச்சுமுகமான தீர்வுகள் காணப்பட்டதாகவும் முதலில் அறிவிக்கப்பட்டது.

ரணிலுக்கு எதிரான பிரேரணையை சு.க. முற்றாக எதிர்க்கும் என இதன்போது ஜனாதிபதி பிரதமரிடம் உறுதியளித்துள்ளார் என்றும் கூறப்பட்டது.

மூன்று மணிநேரங்களுக்கு மேல் நீடித்த இந்த இரகசியச் சந்திப்பின்போது அனைத்துச் சிக்கல்களுக்கும் இணக்கப்பாடு எட்டப்பட்டதாக முதலில் வெளியான செய்திகளில் கூறப்பட்டது.

பிரதமர்ரணில்விக்கிரமசிங்கவுக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து தோற்கடிப்பது என்றும் இதன்போது தீர்மானிக்கப்பட்டதாகவும் உடன் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை இந்தச் செய்தி இணைய ஊடகங்களில் வெளியானமையை அடுத்து, ஜனாதிபதி செயலகத்தில் இருந்து ஒரு மறுப்புச் செய்தி தெரிவிக்கப்பட்டது.

அப்படி இணக்க நிலை ஏதும் எட்டப்படவேயில்லை என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி–பிரதமர்இடையே மேற்படி நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்கின்றமை குறித்து இணக்கம் ஏற்பட்டதான செய்தி சுதந்திரக் கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்தியதாகக்கருதப்பட்டதைஅடுத்தே இந்த மறுப்புத் தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பதவிவிலகக்கோரும்கோரிக்கை சு.க.தரப்பில் இருந்து முன்வைக்கப்பட்டது.

"பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலகாவிடின் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையேயான தேசிய அரசு உடன்படிக்கை முடிவுக்குக் கொண்டு வரப்படும். எதிர்வரும் 4ஆம் திகதி புதன்கிழமை இரவு 9 மணிக்கு சுதந்திரக் கட்சி நாடாளுமன்றில் தனித்து இயங்கி பிரதமர்ரணில்விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்கும்."

– இவ்வாறு அரச வளங்கள் மற்றும் தொழில் அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

கூட்டு அரசை நீடிக்க வேண்டுமாயின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலகவேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்று முன்தினம் இரவு சந்தித்துப் பேசினர். அமைச்சர் ராஜித சேனாரத்னவின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் எந்தவொரு உடன்பாடு எட்டப்படவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணையைத்தோற்கடிக்கசிறிலங்காசுதந்திரக்கட்சி ஆதரவளிக்கும் என்று ஜனாதிபதி உறுதியளித்தார் என்பது தவறானசெய்தியாகும்.–என்றார்.

இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் விவசாய அமைச்சருமான துமிந்த திசாநாயக்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான கூட்டு எதிரணியின் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவளிக்காது எனத் தெரிவித்துள்ளார். (உ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்தன என்பதை அறிவதற்காக வாசகர்களோடு இதனைப் பகிர்ந்து கொள்வது அவசியமாகின்றது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையை புளொட்டுக்கு விட்டுக் கொடுத்திருந்தது கூட்டமைப்பு. புளொட் தனது தவிசாளர் வேட்பாளராக தர்ஷனை நிறுத்தியது. ஆனால் கூட்டமைப்பில் தெரிவு செய்யப்பட்ட தமிழரசுக் கட்சி வேட்பாளரும், முன்னாள் தவிசாளருமானபிரகாஷ்அந்தத்தவிசாளர் பதவி தமக்கு வழங்கப்பட வேண்டும் என அடம்பிடித்தார்.

இணக்கநிலைஏற்படவில்லை. சுமந்திரனில் தொடங்கி, மாவையரின் செம்புதூக்கிகள் வரை பலர்பிரகாஷ்அணியைமிரட்டிப் பார்த்தனர்.

ஆனால் பிரகாஷ் அணி அடங்கவில்லை. இரண்டு தரப்பும் களத்தில் மோதியமையும், தமிழ்த்தேசியமக்கள்முன்னணி வழமை போல தனது தீண்டத்தகாத தரப்புக் கொள்கைப்படி வாக்களிப்பில் இருந்து ஒதுங்க, இரண்டு தரப்புகளுக்கும் சரிசமமாக பன்னிரண்டு வாக்குகள் விழ, இறுதியில் திருவுளச் சீட்டு மூலம் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வவேட்பாளர்தவிசாளராக, கூட்டமைப்புத் தரப்புகளுக்கு போன மூச்சு திரும்பி வந்தமையும் தெரிந்த சங்கதிகள்.

பதற்றத்தின் உச்சிக்குப் போன மாவையரின் 'செம்புதூக்கி' ஒருவர் வாக்களிப்பு முடிந்து, திருவுளச் சீட்டு முடிவு அறிவித்தகையோடுவாக்களிப்பில் பங்குபற்றிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நான்கு வேட்பாளர்களில் ஒருவரிடம் போனார். அவர் மீது பாய்ந்தார். ஒரு பிடிபிடித்தார்.

*"உதென்ன வேலை செய்திருக்கின்றீர்கள்? எங்கடை கட்சித் தலைமை உங்கடை கட்சித் தலைவரான ஜனாதிபதியோடை பேசினார்கள்; மாவட்டத்திலை மாவட்டத் தலைவர் அங்கஜனுடன் பேசினார்கள். அவை எல்லாம் ஓம் எண்டு எங்களுக்கு வாக்களிக்கச் சம்மதித்து, அதை உங்களுக்கும் அறிவித்தவையள். அப்படி இருக்க, எங்கடை கூட்டமைப்பின்ரை வேட்பாளருக்குப் போடாமல் எங்களை எதிர்த்தவையளுக்கு வாக்களிச்சிருக்கிறியள். உது சரியோ...?"* – என்று சீறினார் செம்புதூக்கி.

சம்பந்தப்பட்ட 'கை'க்கட்சிக்காரர் அமைதியாக – சாதுவாக – அதேநேரம் ஆணித்தரமாக – பதிலளித்தார்.

*"ஓம். உண்மை. உங்கடை தலைவர்மார் ஜனாதிபதியோடையும் அங்கஜனோடையும் தான் பேசினவையள். ஆனால் உங்களை எதிர்த்துக் கேட்ட பிரகாஷ், ஜனாதிபதியிட்டையோ, அங்கஜனிட்டையோ போய்ப் பேசாமல் வாக்களிக்கிற எங்களோடை எல்லவோ நேரிலை பேசினவர்...!"* – என்றார் மிகச் சாவகாசமாக...

இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த எனது நண்பர் ஒருவர் நேரடியாக வந்து என்னிடம் இரண்டு விடயங்களைச் சொன்னார்.

ஒன்று – கூட்டமைப்புத் தலைமை அதிகாரத்துக்காக எல்லாத்தரப்புடனும்எல்லா அதிகார மட்டத்தினருடனும் சமரசம் செய்து, இறங்கிப் போய்க் காய் நகர்த்துகின்றது.

இரண்டு – அதிகாரத் தரப்புகளை மட்டும் நம்பி கட்சிகளை கையாளலாம் என்ற அவர்களின்ரை சூத்திரம் எல்லாச் சமயத்திலும் வேலை செய்யும் என்று நம்ப முடியாது. – என்றார் அவர்.

–அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள்தாம் இவை.

**- மின்னல்-**

**பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு**
**தரம் 1 முதல் தரம் 11 வரையான**
**2018 இன் மாணவர் கணிப்பீட்டறிக்கை**
தேர்ச்சியறிக்கை வெளிவந்து விட்டது.
உடன் பெற்றுக் கொள்ளவும்.
**தயா அச்சகம்**
575, கே.எஸ்.வீதி (நாச்சிமார் கோவிலடி),
யாழ்ப்பாணம். 077 396 5214

காலைக்கதிர்
Kalaikkathir



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## கூட்டு எதிரணி போட்ட சுருக்குக் கயிறு

நல்லாட்சி அரசு, நாளை பிறக்கும் புதிய வாரத்தில் மீண்டும் ஒரு கண்டத்துக்குள் நுழைகின்றது.

போகின்ற போக்கில் இதுதான் இந்த நல்லாட்சி அரசின் ஆயுளின் கடைசி வாரமாக இருந்தாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது எதிர்வரும் 4 ஆம் திகதி - புதன் கிழமையன்று - இரவு 9.30 மணிக்கு நாடாளுமன்றத்தில் வாக்குகள் அளிக்கப்படுகின்றபோது, நல்லாட்சி அரசின் எதிர்காலம் குறித்தும் ஒரு தீர்மானம் எடுக்கப்படும் என எதிர்பார்க்கலாம்.

இந்த வாக்கெடுப்பில் வெல்லக் கூடிய வலுவான அரசியல் நிலையில்தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளார் என்பது பலரதும் கணிப்பு.

ஆனால், அவர் வென்றாலும் கூட, நல்லாட்சி அரசு தொடருமா அல்லது அன்றைய வாக்கெடுப்புக்குப் பின்னர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு அமையுமா என்ற கேள்வியும் கூட எழுந்துள்ளது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை கூட்டு எதிரணி சார்பில் முன்னாள் ஜனதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்து, முன்னகர்த்திய போதே இது பிரதமர் ரணிலுக்கு எதிரான அரசியல் நகர்வு மட்டுமல்ல, நல்லாட்சி அரசுக்கு எதிரான காய்நகர்த்தல் மட்டுமல்ல, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிரான பொறியும் கூடத்தான் என்று இப்பத்தியில் சுட்டிக்காட்டியிருந்தோம்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின் உடனடி விளைவு அப்படித்தான் அமையப் போகின்றது எனக் கொழும்புத் தகவல்கள் இப்போது தெரிவிக்கின்றன.

'பனையில் தேள் கொட்ட, தென்னையில் நெறி கட்டியது போன்று' - பிரதமர் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிக்கான இலக்கு என்ற பெயருடன் கொண்டுவரப்பட்ட இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின் விளைவு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்தான் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஐ.தே.கட்சியின் ஓரிரு 'பெருச்சாளிகள்' ஒப்பமிட்டுள்ள போதிலும், அந்தப் பிரேரணையைத் தோற்கடித்து, கட்சியின் செல்வாக்கை நிலைநிறுத்துவது என்பதில் ஐ.தே.கட்சி கட்டுக்கோப்பாகவும், இறுக்கமாகவும், ஐக்கியமாகவும், ஒன்றுபட்டும் இருப்பதாகத் தெரிகின்றது. பெரும் வெடிப்போ, உள்குழப்பங்களோ, அதிருப்திகளோ குறிப்பிடத்தக்களவு வெளிப்படையானவையாக இல்லை. ஓரிரு தினங்களுக்கு முன்னர் நடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பணிச் செயற்குழுவின் கூட்டத்தில் உட்கட்சிக் குழப்பங்கள் தீர்க்கப்பட்டு, இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரத்தை ஒன்றுபட்டு எதிர்ப்பது என்ற இணக்கம் ஓரளவுக்கு ஐக்கியமாக எட்டப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

ஆனால், மறுபுறத்தில் சு.கவுக்குள்ளோ, இந்தப் பிரேரணைக்கான நாள் நெருங்க, நெருங்க உள்குத்துவெட்டு மும்முரமடைந்து வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

ஏற்கனவே சு.க. பிளந்து கிடக்கின்றது. அதன் 96 எம்.பிக்களில் நல்லாட்சி அரசின் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் பதவிகளைப் பெற்றவர்கள் 44 பேர் மட்டும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கீழ் சு.கவில் தங்கியுள்ளனர். எஞ்சிய 52 எம்.பிக்களும் - முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவரின் மகன் நாமல் ராஜபக்ஷ, மஹிந்தவின் சகோதரர் சமல் ராஜபக்ஷ உட்பட மூத்த தலைவர்கள் பலரும் - கூட்டு எதிரணி என்ற பெயரில் எதிர்க்கட்சியாகச் செயற்படுகின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கீழ் இயங்கும் சு.க. எம்பிக்களான அமைச்சர்கள் மட்டத்தில் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் பெரும் குழப்பம் என்பது இப்போது பிந்திய தகவல். ஒரு சாரார் பிரேரணையை ஆதரிக்க வேண்டும் என்கின்றனர். மற்றொரு சாரார் எதிர்க்க வேண்டும் என்கின்றனர்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடக்கும்போது; சு.க. மேலும் இரண்டாகப் பிளந்து, ஜனாதிபதி பக்கத்திலிருந்து மற்றொரு குழு கூட்டு எதிரணிப் பக்கம் பாயும் சூழ்நிலையே காணப்படுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் பிரேரணை விடயத்தில் சு.க. எத்தகைய நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்று திட்டவட்டமான ஒரு வழிகாட்டல் முடிவை தீர்மானிக்க முடியாது சு.கவின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அல்லற்படுகின்றார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

'ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்' - என்ற மாதிரி பிரேரணை விடயத்தில் சு.க. தரப்புகள் எதிரெதிர் நிலைப்பாட்டை எடுத்து நிற்கின்றன.

இந்தப் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் பிரதமர் தப்பிப் பிழைப்பாரோ என்னவோ, மறுபக்கத்தில் சு.க. தப்பிப் பிழைப்பதுதான் கஷ்டம் என்கின்றனர் கொழும்பு அரசியல் அவதானிகள்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை மஹிந்த தரப்பு கொண்டு வந்தமை பிரதமர் ரணிலுக்குச் 'செக்' வைப்பதற்கு அல்ல, சுதந்திரக் கட்சி மீதான மைத்திரியின் அதிகாரத்துக்குச் 'செக்' வைப்பதற்குத்தான்.

இன்றைய நிலைமையில் அந்த இலக்கை நோக்கித்தான் அந்தப் பிரேரணையின் சுருக்குக் கயிறு நகர்ந்து கொண்டிருக்கின்றது என்பது போலவே தோன்றுகின்றது.

# கட்சியின் கட்டுப்பாட்டை மீறிய உறுப்பினர்கள் நீக்கப்படுவார்கள்

கட்சியின் கட்டுப்பாட்டை மீறி செயற்பட்டு, தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்த வலிகாமம் தெற்கு மற்றும் திருக்கோவில் பிரதேச சபை உறுப்பினர்களை கட்சியில் இருந்து நீக்கி, அவர்களின் வெற்றிடத்திற்கு வேறு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் நேற்று ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

எமது அணி உருவாக்கப்பட்டதன் நோக்கம் மற்றும் செயற்பாடுகள் சம்பந்தமாக நேரிலும், ஊடகங்கள் வாயிலாகவும் மற்றும் தனிப்பட்ட முறையில் கடிதங்கள் மூலமாகவும், எமது அணியைச் சார்ந்த அனைத்து உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கும் தெளிவாக கூறியுள்ளளோம். அந்த வகையில், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்கக் கூடாது



ஆனந்தசங்கரி தெரிவிப்பு

என்று எடுத்துக் கூறியிருந்தோம்.

அதையும் மீறி மேற்படி இரண்டு சபைகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் கட்சிக்கு விரோதமாகச் செயற்பட்டுள்ளனர். எனவே அவர்களை நீக்கி விட்டு வெகுவிரைவில் அவர்களுக்கு பதிலாக புதியவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

தமிழ் மக்களின் இன்றைய அவல நிலைக்கு காரணம் தமிழரசுக் கட்சி உள்ளடக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பதாலேயே, அதற்கு மாற்று அணியாக உதயசூரியன் சின்னத்தில் பல அமைப்புகள் ஒன்றிணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியில் தேர்தலில் போட்டியிட்டன.

இந்த நிலையில் எமது கட்சியில் வெற்றிபெற்று, தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை.

இதை நன்கு அறிந்திருந்தும் இவ்வாறு செயற்படுபவர்களை எந்த காலத்திலும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

நடைபெறவிருக்கும் ஏனைய உள்ளூராட்சி மன்ற தவிசாளர் மற்றும் உபதவிசாளர் தெரிவுகளில் எமது கட்சியின் உறுப்பினர்கள் எவரும் தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றோம். மீறினால் அவர்கள் மீதும் இவ்வாறான நடவடிக்கைகளே மேற்கொள்ள நேரிடும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# வவுனியா நாகபூசணி ஆலயத்தின் ஆராதனையின் போது நாக பாம்பு!

வவுனியா, மார்ச் 31

வவுனியா நாகபூசணி அம்மனின் ஆராதனையின் போது நாகபாம்பு ஒன்று தோன்றியுள்ளது.





வவுனியா செட்டிகுளம் முகத்தான் குளம் பகுதியில் உள்ள விநாயகர் ஆலயத்தின் வருடாந்த கும்பாபிஷேக நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்த ஆலயத்தில் வைக்கப்பட்ட நாகபூசணி அம்மனின் திருவுருவசிலைக்கு ஆராதனை செய்யும் பொழுது திடீரென அங்கு தோன்றிய நாக சர்ப்பம் அம்மனின் சொரூபத்தில் ஏறி ஆராதனை முடியும் வரை காட்சியளித்துள்ளது.

மேலும் ஆராதனை முடிந்தவுடன் அந்த இடத்தை விட்டு அகன்று சென்றுவிட்டது. இந்தச் சம்பவத்தை கேள்விப்பட்ட மக்கள் இந்தஅதிசயத்தை காண்பதற்கு கோவிலுக்கு படையெடுத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(க)

# தந்தையும் தாயும் சிறை சென்ற போதிலும் பரீட்சையில் சாதனை படைத்த விமலின் மகள்!





கொழும்பு, மார்ச் 31

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ வின் மகள் சாதாரண தரப்பரீட்சையில் சிறப்பான சித்தியைப் பெற்றுள்ளார்.

2017ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் சாதாரண தர பரீட்சை எழுதிய விமல் வீரவன்ஸவின் மகள், விமாஷா விஷ்வாதரி வீரவன்ஸ அனைத்து பாடங்களிலும் சித்தியடைந்துள்ளார்.

கடந்த புதன் கிழமை வெளியான பரீட்சை முடிவு களுக்கமைய அவர்அனைத்து பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளார்.

கொழும்பு விஷாகா பாடசாலையில் அவர் கல்வி கற்றுள்ளார். தனது தந்தை 3 மாதங்கள் சிறைச்சாலையிலும், தாயாரும் அந்த காலப் பகுதியில் சிறைச்சாலை யில் இருந்த போதிலும் அவர் பரீட்சைக்குத் தன்னைத் தயார்படுத்தி சிறப்பாகபரீட்சைஎழுதியுள்ளார் என ஊடகங்கள் பாராட்டுத் தெரிவித்துள்ளன.

## நாளை

01.04.2018
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம் : அத்தம் கா. 6.24 வரை
திதி : பிரதமை பி.ப. 5.55 வரை
சுபநேரம் : 9.11 – 10.41 வரை
இராகுகாலம் : 4.41 – 6.11 வரை

# காணி விடுவிப்பு: இராணுவத் தளபதி உறுதி தெரிவிப்பு

- எஸ்.நிதர்ஷன் -

வடக்கு மாகாணத்தில் இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்திருக்கின்ற – பொது மக்களுக்குச் சொந்தமான – காணிகள் அனைத்தும் மிக விரைவில் விடுவிக்கப்படுமென இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்க தமக்கு உறுதியளித்துள்ளார் என முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த இராணுவத்தளபதி நேற்றுமுன்தினம் மாலை கைதடியிலுள்ள முதலமைச்சரின் அலுவலகத்தில் முதலமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இந்தச் சந்திப்பு குறித்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலையே இத்தகவலை வெளியிட்டார்.

படையினர் வசமுள்ள பொது மக்களின் காணிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகின்றன எனவும் தற்போது நான் முன்வைத்த கோரிக்கைகளை சாதகமாகப் பரிசீலனை செய்து அவற்றை விரைவில் விடுவிக்க தாம் நடவடிக்கை எடுப்பார் எனவும் இராணுவத்தளபதி தன்னிடம் கூறினார் என முதலமைச்சர் தெரிவித்தார். (உ)

சிறந்த நூற் பரிசுத் தேர்வு:

## எழுத்தாளர்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,மார்ச் 31

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வட மாகாண எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் சிறந்த நூற் பரிசுத் தேர்வுப் போட்டியை நடத்தி வருகின்றது. 2017 இல் அச்சில் வெளிவந்தவையாகவும் முதல் பதிப்பாகவும் தங்கள் நூல்களை வெளியிட்ட யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவை நிரந்த வதிவிடமாகக் கொண்ட எழுத்தாளர்கள் இப் போட்டிக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விவரங்களை பிரதேச செயலக கலாசார பிரிவில் பெற்றுக் கொண்டு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என்று பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ)

# சுயமாக தேர்தலை சந்திப்பதற்கு ஐ.தே.கவுக்கு தைரியம் இல்லை

### சு.க அமைச்சர் பைஸர் முஸ்தபா சுட்டிக்காட்டு



கொழும்பு, மார்ச் 31

ஐக்கிய தேசியக் கட்சிக்கு சுயமாக தேர்தலை சந்திக்க எந்தத் தைரியமும் இல்லை. கட்சி வேட்பாளரை களமிறக்கி ஐக்கிய தேசியக் கட்சியினால் ஒருபோதும் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது. தைரியம் இருக்குமாயின் அவர்கள் கட்சி வேட்பாளரை களமிறக்கி ஆட்சியைக் கைப்பற்றிக் காட்டட்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் கட்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐக்கிய தேசியக் கட்சியினர் இந்த அரசில் இருந்துகொண்டு வெறும் வாய் வார்த்தைகளினால் கதைகளைக் கூறிக் கொண்டுள்ளனர். எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இல்லாமல் அவர்களினால் ஆட்சியில் அங்கம் வகிக்கவே முடியாது.

அடுத்த தேர்தலில் அவர்கள் தனி அரசை அமைக்க வுள்ளோம் என்றும் பொது வேட்பாளர் இல்லாமல் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரை வேட்பாளராக்கும் தீர்மானத்தை எடுத்துள்ளோம் என்றும் கூறுகின்றனர்.

ஆனால், அவர்களால் கட்சி வேட்பாளரைக் கொண்டு ஒரு போதும் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது.

அவ்வாறு முடிந்திருந்தால் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்க முயற்சித்திருக்க மாட்டார்கள். மேலும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேனவை களமிறக்க அவர்மீது இருந்த பாசமோ பற்றோ காரணம் அல்ல. அப்போதிருந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வரவேண்டும் என்ற நோக்கமே அதற்கான காரணமாகும். அதற்கான சரியான தெரிவாக மைத்திரிபால சிறிசேன இருந்தமையினாலேயே அவரை பொது வேட்பாளராக்கினர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற அடிப்படையிலேயே போட்டி நிலவியது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் வெற்றி பெறுவாரா அல்லது கட்சியின் செயலாளர் வெற்றி பெறுவாரா என்பதே போட்டியாக இருந்தது.

இதில் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தோளில் தொங்கிக்கொண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியினர் இன்று தமது வீர வார்த்தைகளை வெளிப்படுத்தி வருகின்றமை எமக்கு வேடிக்கையாக உள்ளது.

கடந்த பொதுத் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு பெரும்பான்மை ஆதரவு கிடைக்கவில்லை. ஒருவேளை அவ்வாறு பெரும்பான்மை ஆதரவு கிடைத்திருந்தால் அவர்கள் தேசிய அரசாங்கத்தை கலைத்து தனி ஆட்சியை உருவாக்கியிருப்பார்கள். அவர்களின் சுயரூபம் வெளிப்பட்டிருக்கும்.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சுயமாக தேர்தலை சந்திக்க எந்த தைரியமும் இல்லை. கடந்த இரண்டு தேர்தல்களின் போதும் அவர்களினால் பொது வேட்பாளர் ஒருவரையே நம்பியிருக்க வேண்டிய நிலைமை இருந்தது.

இனியும் அவ்வாறே அமையும். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைகளுக்கு முதுகெலும்பு இருக்குமாயின் அவர்கள் தனி வேட்பாளரை களமிறக்கி ஆட்சியைக் கைப்பற்றட்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# மன்னார் நானாட்டான் ம.வியில் 9 ‘ஏ’ பெற்ற இரு மாணவர்கள்!





மன்னார், மார்ச் 31

2017 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்வி பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் கடந்த புதன் கிழமை இணையத்தில் வெளியாகியுள்ள நிலையில் மன்னார், நானாட்டான் மகா வித்தியாலய மாணவர்கள் இருவர் 9 ஏ சித்தியைப்பெற்று சாதனை படைத்துள்ளனர்.

நானாட்டான் மகா வித்தியாலய மாணவர்களான ஜீவா ஜெயதீசன் அனோஜெயந் மற்றும் அருட்பிரகாசம் டினேசியஸ் ஆகிய மாணவர்கள் 9 ஏ சித்திகளைப் பெற்று நானாடான் மகா வித்தியாலயத்தில் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

# வெள்ளவத்தையில் ரயிலுடன் மோதுண்டு யாழ். இளைஞர் சாவு

கொழும்பு, மார்ச் 30

கொழும்பு, வெள்ளவத்தையில் நேற்றுமுன்தினம் ரயிலுடன் மோதுண்டு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார்.


வெள்ளவத்தை ரயில் நிலையத்துக்கு அருகில் இடம்பெற்ற இந்த விபத்தில் கணேஷ் சிவாதீஸ் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

வெள்ளவத்தை, குளோபல் டவர் ஹோட்டலில் வாடகைக்குத் தங்கியிருந்த இந்த இளைஞர், வெளியில் சென்றபோதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சாவுக்குச் சவாலாக சரித்திரம் எழுதுங்கள்!

சாவு வெற்றி கொண்டதாக சரித்திரம் எழுத முற்பட்ட அரசியல் தலைவர்களின் கொலைவெறிக்கு சிலுவை சாவை ஏற்று இறைமகன் இயேசுவுக்கு இரவல் கல்லறைதான் பரிசானது. அவர் இறைமகனாக இருந்தும், துன்பங்கள் வழியே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார். அவர் நிறைவுள்ளவராகி தமக்குக் கீழ்ப் படிவோர் அனைவரும் என்றென்றும் மீட்படைய காரணமானார். அவரது சாவு சாதாரணமானது அல்ல சரித்திரமானது. சாவே உன் கொடுக்கு எங்கே எனச் சாவுக்குச் சவாலான இயேசுவின் இறப்பு அவ் அரசுக்கே சவாலானது.



தவக்கால சிந்தனை

இன்று எமது வாழ்வும் வரலாறாக எமக்கு ஏற்படும் சவால்களை வெல்வோரின் சரித்திரங்கள் எமக்குப் பாடம் கற்பிக்கின்றன. பிறந்தோம், இறந்தோம் என வாழாது சாதிக்கும் காலத்தை பயன்படுத்திச் சரித்திர நாயகன் இயேசுவின் பாதை எமக்குக் கற்றுத் தந்த பாடத்தை எமது வாழ்வில் கடைப்பிடிக்க எமது பதவி, பட்டங்கள், தலைமைப் பொறுப்புகள் குடும்பத் தலைமைகள், துறவற வாழ்விலும் எம்மில் இருந்து இறக்க வேண்டிய தீயவற்றில் இறந்தாலே நாமும் உயிர்ப்பில் மகிழ்வடையலாம். எம்மை அறிதல் எமது தவறுகளை உணர்தல், களைதல், புதுவாழ்வுக்கு உயிர்ப்புடன் எழுவதே சாட்சிய வாழ்வாகும்.

அவர் இறந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து இறந்தோமெனில் அவர் உயிர்தெழுந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த் தெழுவோம். நாம் பாவத்துக்கு அடிமையாகாதபடி நம்முடைய பழைய மனித இயல்பு அவரோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவோடு நாம் இறந்தோமெனில் அவரோடு வாழ்வோம் என்பதே எமது நம்பிக்கை வாழ்வாக்க முயல்வோம்.

இன்று துயரங்கள் உங்களைச் சூழ்ந்த போதும் நம்பிக்கையை தளரவிடாது புதுவாழ்வுக்கு உயிர்ப்பு வாழ்வுக்கு உரிமையுள்ளவராக வாழ பழையன கழிதலும் புதியன புகுதலும் வாழ்வின் உயிர்ப்புக்குச் சாட்சியாக இன்றே எமது வாழ்வை புதுப்பிப்போம். சாவுக்கு முன் சரித்திரம் படைத்தோர் வரிசையில் உங்கள் சொல் செயல் வாழ்வு கல்லறைகளோடு முடிவதில்லை. சாதனையாளராக சரித்திரம் எழுத இயேசுவோடு உயிர்க்க அர்ப்பணிப்போம்.

செ.யோசப்பாலா

# பொகவந்தலாவவில் காணி பிரிப்புக்கு எதிராகச் சத்தியாக்கிரகப் போராட்டம்

கொழும்பு, மார்ச் 31

பொகவந்தலாவ ரொப்கில் தோட்டத்தின் டன்பார் பிரிவில் கடந்த இரண்டு நாள்களாக மக்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தாம் காலம் காலமாக தொழில் செய்த தேயிலை மலையை பிரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த தோட்டத்தில் தொழில் புரியும் 75 பேருக்கு தோட்டத்தின் தேயிலைக் காணிகள் அரை ஏக்கர் வீதம் பிரித்துக் கொடுப்பதற்கு முகாமைத்துவம் எடுத்த முடிவுக்கு இவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.



இவ்வாறு காணியை பிரிப்பதற்கு தோட்டத்தின் முகாமையாளரும் கள உத்தியோகத்தரும் பல சூழ்ச்சிகளைச் செய்துள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# முஸ்லிம்களின் கல்விப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு



முஸ்லிம்களின் கல்விப் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு கிடைக்கும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் உறுதி வழங்கியுள்ளார்.

மௌலவி ஆசிரிய நியமனம், கல்விக் கல்லூரிகளில் முஸ்லிம் மாணவர்களின் அனுமதி, தர்கா நகர் கல்விக் கல்லூரியின் கவனிப்பாரற்ற நிலை தொடர்பாக அகில இலங்கை முஸ்லிம் கல்வி மகாநாட்டின் தூதுக்குழு ஒன்று கல்வி அமைச்சின் செயலாளர் காமினி ஹெட்டி ஆராச்சியைச் சந்தித்து விளக்கியுள்ளது.

கல்வி அமைச்சில் இடம் பெற்ற இந்த கலந்துரையாடலில் நீண்டகாலமாக மௌலவி ஆசிரியர் நியமனம் வழங்கப் படாதிருப்பது, சிங்கள மொழி மூல மான மௌலவி ஆசிரியர்களை நியமிப்பது, தர்கா நகர் கல்விக் கல்லூரிக்கு பெண் அதிபர் ஒருவரை நியமிப்பது, தர்காநகர் கல்விக் கல்லூரியின் முஸ்லிம் மாணவிகளின் அனுமதி படிப்படியாகக் குறைந்து வருகின்றமை முஸ்லிம் பாடசாலைகளில் விஞ்ஞான கல்வியைப் போதிப்பதற்கான வசதிகளை அதிகரிப்பது தொடர்பாக முஸ்லிம் கல்வி மாநாடு செயலாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்தது.

தர்காநகர் கல்விக் கல்லூரியை கையளிக்கும் போது சேர்க்கும் மாணவிகள் 90 வீத முஸ்லிம் மாணவிகளாக இருக்க வேண்டும் என உலக வங்கி வழங்கிய நிபந்தனை படிப்படியாக முஸ்லிம் மாணவிகள் அனுமதிப்பது குறைந்திருக்கின்றமை குறித்து தூதுக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

முஸ்லிம் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையைக் கருத்தில் கொண்டு ஆசிரியர் சேவைக்கு கூடுதலானவர்களைச் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் தூதுக் குழுவினர் கேட்டுக் கொண்டனர்.

தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களை அறிவிப்பதில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அக்கறை காட்டாததனால் இப்பாடசாலைகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தடையாக இருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

கோரிக்கைகளுக்கு பதிலளித்த அமைச்சின் செயலாளர் பின்வரும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக உறுதி தெரிவித்துள்ளார். மௌலவி ஆசிரியர் வெற்றி டங்களை நிரப்புவதற்கு விரைவில் விண்ணப்பம் கோரப்படும். அதன்போது சிங்கள மொழி மூலமும் மௌலவி ஆசிரியர்களை நியமிப்பதற்காக விண்ணப்பம் கோரப்படும்.

தர்காநகர் கல்விக் கல்லூரிக்கு பெண் பீடாதிபதி ஒருவரை நியமிப்பதற்கு விரைவில் விண்ணப்பம் கோரப்படும். போதிய விரிவுரையாளர்களும் நியமிக்கப்படுவர். தமிழ், முஸ்லிம் பாடசாலைகளின் வெற்றிடங்கள் தொடர்பான விவரங்களை அமைச்சுக்கு பெற்றுக் கொள்வதற்கு புறம்பான சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பி வைக்குமாறு செயலாளர் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

விஞ்ஞான ஆய்வுகூடம் மற்றும் வசதிகள் இல்லாத பாடசாலைகளுக்கு அவற்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் செயலாளர் அதிகாரிகளுக்கு உத்தர விட்டார். அமைச்சில் போதுமான நிதி இருப்பதனால் அது குறித்து நடவடிக்கை எடுக்க முடியும் என்றார்.

தர்காநகர் கல்விக் கல்லூரியின் வசதிகளை அதிகரிப்பது, ஆணையாளரை நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கல்லூரியின் தற்போதைய நிலை மிக மோசமாக இருப்பதாகவும் தான் எவ்வித அறிவித்தலுமின்றி இருமுறை விஜயம் செய்ததாகவும் செயலாளர் தெரிவித்தார்.

தூதுக்குழுவினர் கல்விக் கல்லூரி ஆணையாளர் பண்டார வைப்புறம்பாகச் சந்தித்து கல்விக் கல்லூரி தொடர்பான பிரச்சினைகள் பற்றி எடுத்து விளக்கினார்.

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் தலைவர் பேராசிரியர் ஏ.ஜி.ஹுஸைன் இஸ்மாயிலின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்தக் கலந்து ரையாடலில் மாநாட்டின் தவிசாளர் பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ், உப தலைவர் என்.எம். அமீன், செயலாளர் சட்டத்தரணி ரசித் எம்.இம்தியாஸ், உதவிச் செயலாளர் எம்.எம்.எம்.நிழ்வான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அமைச்சின் சார்பில் கல்விக் கல்லூரிகள் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் திருமதி சந்தமாலி, முஸ்லிம் கல்விப் பிரிவின் பணிப்பாளர் எம்.தாஜுதீன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் 51 வீதமான மாணவர்கள் சித்தி!

மட்டக்களப்பு, மார்ச் 31

மட்டக்களப்பு மேற்கு வலயத்தில் 51 வீதமான மாணவர்கள் இம்முறை க.பொ.த சாதாரணதர பரீட்சையில் சித்தி பெற்றுள்ளனர் என மட்டக்களப்புமேற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அகிலா கனக சூரியம் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவைவருமாறு:-

கடந்த வருடம் 2016 க.பொ.த சாதாரணதரப் பரீட்சை பெறுபேறின் அடிப்படையில் மட்டக்களப்பு மேற்கு வலயத்தில் 21 வீதமான மாணவர்கள் மட்டுமே சித்திபெற்று உயர்தர வகுப்பு படிப்பதற்கு தகுதி பெற்றனர். ஆனால் இந்தமுறை 51 வீதமான மாணவர்கள் உயர்தர வகுப்பில் கல்வி கற்கத் தகுதி பெற்றுள்ளனர்.

கடந்த வருடத்தைவிட இவ்வருடம் சித்திபெற்ற மாணவர்கள் 30 வீதம் அதிகரித்துள்ளமையை காணமுடிகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்தகால முப்பது வருட ஆயுதப் போராட்டம் இடம்பெற்ற காலத்தில் இப்பகுதி முழுமையாக இராணுவத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசம். பல உயிர் இழப்புக்களையும் தியாகங்களையும் சந்தித்தது மட்டு மன்றி வறுமைக்கோட்டில் மக்கள் வாழும் ஒரு பிரதேசமுமாகும்.

இதேவேளை, மண்முனை தென்மேற்கு கோட்டத்திற்குட்பட்ட மாணவர்கள் வரலாற்று சாதனையை நிலை நாட்டியுள்ளனர்.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் உருவாக்கப்பட்டதன் பின்பு, மண்முனை தென்மேற்கு கோட்டத்தில் ஓரிரு 8ஏ தர சித்திகளும் ஏனைய ஒரு தரச் சித்தியும் இதுவரை பெறப்பட்டு வந்துள்ளன.

இந்தக் கோட்டத்தில் ஒன்பது க.பொ.த சாதாரண தரத்தினைக் கொண்ட பாடசாலைகள் உள்ளன.

இவற்றில் வெளியாகியுள்ள பரீட்சை பெறுபேறின் அடிப் படையில் 6 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் 8ஏ தர சித்திகளுக்கு மேல் பெற்று சாதனை படைத்துள்ளனர் என தெரிவித்துள்ளார்.

# உலக தொழிலாளர் தினத்தை ஒத்திவைப்பதை ஏற்கமுடியாது

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன்

மட்டக்களப்பு, மார்ச் 31

உலகத் தொழிலாளர் தினத்தில் அனைத்துலக தொழிலாளர்களையும் அவர்களின் உழைப்பையும், உரிமையையும் வேண்டி குரல் கொடுக்கும் அதே நாளில் நினைவு கூர்ந்து விழா எடுப்பதே தொழிலாளர்களுக்கு பெருமை என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இம்முறை வெசாக் தினத்தை முன்னிட்டு அரசாங்கத்தால் மே தினம் எதிர்வரும் 7ஆம் திகதி பிற்போடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வெசாக் தினம் ஒரு மதம் சம்பந்தமான வருடாந்த விழா. அதை அந்த மதத்தில் உள்ளவர்கள் கொண்டாடுவது அவர்களின் கடமை, விருப்பம்.

அதற்காக உலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேசத் தொழிலாளர் தினத்தை மே மாதம் 1ஆம் திகதி



நடத்தாமல் பிற்போடுவது என்பது தொழிலாளர்களை அவமதிக்கும் செயலாகவே பார்க்க முடிகிறது.

ஒவ்வொரு தினங்களும் அந்தந்த நாளில்தான் அனுஷ்டிக்க வேண்டுமே தவிர, அதை பிற்போடுவதை ஏற்கமுடியாது. வெசாக் இலங்கையில் பௌத்த மதத்தவர்களுக்கு முக்கியமான நாள் என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

ஒரே நாளில் இரண்டு நிகழ்வுகள் இடம்பெறுவதில் எந்த தப்பும் இல்லை. மேதினம் கொண்டாடுபவர்கள் அதனை செய்ய வேண்டும்.

வெசாக் அனுஷ்டிப்பவர்கள் அதனைச் செய்யலாம். ஒரு மத வழிபாட்டுவிழாவுக்காக தொழிலாளர் தினத்தை ஒத்தி வைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

வெசாக் விழா 24 மணித்தியாலங்களும் செய்யக்கூடிய நிகழ்வு. ஆனால் தொழிலாளர் தினம் ஓரிரு மணித்தியாலங்கள் மட்டுமே செய்யும் நிகழ்வு. இரு நிழ்வுகளும் ஒரே நாளில் இடம்பெறுவதில் என்ன தவறு உள்ளது.

இதனைப் புரிந்து கொண்டு வெசாக் தினத்திற்கு அதன் சம்பிரதாயம்பாரம்பரியங்களுக்குஇடையூறு ஏற்படாவண்ணம்செய்வதேநல்லது எனத் தெரிவித்துள்ளார்.

# 103 மாணவர்கள் 9 ஏ சித்தி பெற்று சாதனை படைத்த கல்முனை வலயம்

கொழும்பு, மார்ச் 31

கல்முனை வலயத்தில் 103 மாணவர்களுக்கு 9 ஏ தர சித்தி கிடைத்துள்ளது. குறிப்பாக கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையில் அதிகமான மாணவர்கள் ஏ தர சித்தி பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கல்விப் பொதுத்தரா தர சாதாரணதரப் பரீட்சை முடிவு கள் நேற்று வெளிதராயாகியிருந்தன. இதில் கல்முனை கல்வி வலயத்தில் 103 மாணவர்கள் சகல பாடங்களிலும் ஏ தரச் சித்தி பெற்றுள்ளார்கள்.

கல்முனை முஸ்லிம் கோட்டத்தில் 40 மாணவர்களும், கல்முனை தமிழ்க் கோட்டத்தில் 31 மாணவர்களும், காரைதீவு கோட்டத்தில் 07 மாணவர்களும், நிந்தவூர் கோட்டத்தில் 12 மாணவர்களும், சாய்ந்தமருது கோட்டத்தில் 13 மாணவர்களும் 9 ஏ தரச் சித்தி பெற்றுள்ளனர்.

கல்முனை கார்மேல் பற்றிமா பாடசாலையில் 26 மாணவர்களும் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் 25 மாணவர்களும் 9ஏ தரச் சித்தி பெற்றுள்ளனர்.

கல்முனை பற்றிமாவில் 26 மாணவர் 9 ஏ தரச் சித்திகளையும், 20 மாணவர் 8ஏ பி தர சித்திகளையும் பெற்றுள்ளடமயுடன், பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ரணிலுடனான கலந்துரையாடலில் தீர்க்கமான முடிவு எடுக்கப்படவில்லை

## அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 31

ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளி கட்சிகளுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்க்கமான முடிவுகள் எவையும் எடுக்கப்படவில்லை என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.


நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க ஐக்கிய தேசிய முன்னணியின் கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளன என சகோதர மொழி ஊடகம்ஒன்று செய்தி வெளியிட்டுள்ள நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் நேற்று முன்தினம் கூட்டத்தில் வைத்து கலந் துரையாடப்பட்டுள்ளதாகவும், எனி னும் இந்தப் பிரேரணைக்கு ஆதரவளிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் பிரேரணை முன்வைக்கப்படும் தினத்திலேயே முடிவு செய்யப்படும் என்று பங்காளி கட்சிகள் தெரிவித்தன என கூறப்படுகிறது.

அதேவேளை, குறித்த கலந் துரையாடலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியன கலந்து கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(க)

# சிதைந்த நாணயத்தாள்களை மாற்றுவதற்கு தொடர்ந்தும் வசதி




கொழும்பு, மார்ச் 31

சேதப்படுத்தப்பட்ட நாணய நோட்டுக்களை மாற்றும் சேவையை இன்றைய தினத்திற்கு பின்னரும் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளவை வருமாறு:-

வேண்டுமென்று சேதப்படுத்தப்பட்ட நாணயத்தாள்களை இன்றைக்குப் பின்னர் மாற்றிக்கொள்வது தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ள பெருமளவவான கோரிக்கைகளையும் பொதுமக்கள் எதிர் கொள்கின்ற பிரச்சினைகளையும் கருத்திற்கொண்டு இலங்கை மத்திய வங்கி சேதப்படுத்தப்பட்ட நாணயத்தாள்களை மாற்றும் சேவையை மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, அத்தகைய நாணயத்தாள்களை இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்தில் அல்லது அனுராதபுரம், மாத்தளை, மாத்தறை, திருகோணமலை, நுவரெலியா மற்றும் கிளி நொச்சி ஆகிய இடங்களில் அமையப் பெற்றுள்ள பிரதேச அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறு அல்லது முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப் பப்படிவத்துடன் சேர்த்து பின்வரும் விலாசத்திற்கு அத்தகைய நாணயத்தாள்களை பதிவுத் தபால் மூலம் அனுப்புமாறு பொது மக்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

தொடர்புடைய விண்ணப்பப் படிவத்தினை இலங்கை மத்திய வங்கியின்இணையத்தளத்திலிருந்து (www.cbsl.gov.lk) பிரதேச அலுவலகங்களிலிருந்து அல்லது ஏதேனும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிக் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும், சிறிய புள்ளியொன்றின் அல்லது கோடு ஒன்றின் வடிவில் அடையாளமிடப்பட்டுள்ள நாணயத்தாள்கள் வேண்டுமென்று உருச்சிதைக்கப்பட்ட நாண யத் தாள்களாக கருத்திற் கொள்ளப்படமாட்டா என்பதுடன் அத்தகைய நாண யத்தாள்களை கொடுக்கல் வாங்கல்களுக்காக தொடர்ந்தும் பயன்படுத்த முடியும்.

சாதாரணமாகத் தேய்வடைதல், சாதாரணமாக கிழிதல் அல்லது இயற்கை அனர்த்தங்களின் காரணமாக சேதமடைந்த நாணயத்தாள்களை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் பெற்றுக்கொள்ளும் சேவை எவ்வித மாற்றங்களுமின்றி தொடர்ந்தும் இடம்பெறும்.

மேலும், வேண்டுமென்று சேதமாக்கப்பட்ட மற்றும் உருச்சிதைக்கப்பட்ட நாணயத்தாள்களை கண்டுபிடிப்பதற்காக நாணயத்தாள் செயன்முறைப்படுத்தல் இயந்திரங்களை அளவுத் திருத்தம் செய்வதற்கு அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

எனினும், தன்னியக்கக் கூறுப் பொறி (ATM) அல்லது வேறு நாணயத்தாள் கையாளுகின்ற இயந்திரங்களிலிருந்து பொதுமக்கள் உருச்சிதைக்கப்பட்ட நாணயத்தாளொன்றைப் பெற்றுக் கொள்கின்ற சந்தர்ப்பங்களில் அத்தகைய நாணயத்தாளை அருகிலுள்ள வங்கிக் கிளையில் மாற்றிக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேசிய பாடசாலைகளின் ஆசிரியருக்கு இடமாற்றம்

கொழும்பு, மார்ச் 31

இலங்கையிலுள்ள தேசிய பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான முக்கிய மாற்றம் ஒன்றை அரசு மேற்கொண்டுள்ளது என தகவல் கிடைத்துள்ளது.

அதன்படி நாடுமுழுவதிலும் உள்ள ஆசிரியர்களது இடமாற்றங்களுடன் தொடர்புடைய கடிதங்கள் அந்தந்த பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இலங்கையிலுள்ள தேசியப் பாடசாலைகளின்படி, நீண்டகாலமாக ஒரே பாடசாலையில் கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவுள்ளது.

இந்தப் பாடசாலைகளில் தரம் ஆறு தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புக்களில் கல்வி கற்பிக்கும் மூவாயிரத்து 766 ஆசிரியர்கள் தொடர்பான இடமாற்றக் கடிதங்கள் நேற்றுமுன்தினம் கையளிக்கப் பட்டன.

அந்த வகையில் ஒரே பாடசாலையில் பத்து வருடங்களுக்கு மேலாக கடமையாற்றிய ஆசிரியர்கள்இடமாற்றம்பெறுகின்றனர்.

(க)

# நல்லிணக்க அமைச்சுக்கு ஜனாதிபதி மைத்திரி விஜயம்



கொழும்பு, மார்ச் 31

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் கொழும்பு நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சுக்கு விஜயம் செய்தார்.

இந்த விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில், அதன் செயற்பாடுகளை நேரில் கண்காணிப்பது ஜனாதிபதியின் நோக்கமாகும்.

அத்துடன், அமைச்சின் கடந்த கால செயற்பாடுகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் ஜனாதிபதி கேட்டறிந்துகொண்டார்.

கடந்த மூன்றாண்டுகளில் அமைச்சு அமுலாக்கிய தேசிய மட்டத்திலான வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள், எதிர்காலத் திட்டங்கள் போன்றவை பற்றிய ஆவணங்களையும் ஜனாதிபதி சோதனையிட்டார்.

# சட்டவிரோதமாகத் தங்கியிருந்த ஆறு இந்திய பிரஜைகள் கைது

கொழும்பு, மார்ச் 31

சட்டவிரோதமாக நாட்டில் தங்கியிருந்த இந்தியப் பிரஜைகள் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம் பிரதேசத்தில் ஹோட்டல் ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் 22 இற்கும் 38 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்று தெரியவந்துள்ளது.

அவர்கள் நாட்டில் சட்டவிரோதமாக தங்கியிருப்பதற்கு உதவிய குற்றச்சாட்டில் ஹோட்டல் உரிமையாளரும்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் 28 வயதுடைய முந்தல் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் சிலாபம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப் பட்டதையடுத்து அடுத்த மாதம் 2ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# தேசிய நுளம்பு ஒழிப்பு வாரம்

கொழும்பு, மார்ச் 31


அடுத்த மாதம் மூன்றாம் திகதி தொடக்கம் ஒன்பதாம் திகதி வரை தேசிய நுளம்பு ஒழிப்பு வாரம் முன்னெடுக்கப் படவுள்ளது.

பருவ மழை ஆரம்பித்துள்ள நிலையில் நாடெங்கிலும் டெங்கு நுளம்புகள் வேகமாக பரவக் கூடிய வாய்ப்பு உள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு நுளம்பு ஒழிப்புத் திட்டங்களை அமுலாக்குவது திட்டத்தின் நோக்கமாகும்.

இந்தத்திட்டத்தில் கல்வி, சுகாதார அமைச்சுகளும், டெங்கு ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியும் இணைந்துள்ளன.



# சாயி நிறுவனத்தில் பௌர்ணமி நாள் நிகழ்வுகள்



யாழ். திருநெல்வேலி இராமநாதன் வீதி பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவனத்தில் இன்று பௌர்ணமி நாளில் விசேட நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

அதிகாலை 4.45 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகும் நிகழ்வுகள் பிற்பகல் 12.45 மணிக்கு நாராயண சேவையுடன் முடிவுறும்.

முற்பகல் 11.15 மணிக்கு 'சத்தியசாயி பாபாவின் ஆன்மிகப் பாதை' என்ற தலைப்பில் சிறப்புரை இடம்பெறும். சிறப்புரையை யாழ். சத்திய சாயி நிறுவன செயலாளர் இராசேந்திரம் அபிஷேக் ஆற்றுவார். (இ)

# வெசாக் பௌர்ணமி தினத்தன்று தோரணங்கள் காட்சிப்படுத்த தடை

கொழும்பு, மார்ச் 31

வெசாக் பௌர்ணமி தினத்தில் தோரணங்கள் காட்சிப்படுத்தப்படுகின்றமையை முற்றாகத் தடை செய்யப் புத்த சாசன அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

மிகவும் முக்கியமான இந்த பௌர்ணமி தினத்தில் இளைஞர், யுவதிகள் பௌத்த விகாரைகளுக்கு வருகை தருவதில்லை என்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாலை நேரங்களில் சமய வழிபாடுகளில் மூத்தவர்களை தவிர வேறு எவரும் பௌத்த விகாரைகளுக்குச் சமுகம் கொடுக்கிறார்கள் இல்லை என்பதால், பௌர்ணமி தினம் முடிந்த பின்னர் தோரணங்களைக் காட்சிப்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளதாக புத்த சாசன அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

அமரபுர சிறி சத்தம்மவங்ச பௌத்த பீடத்தின் பிரதான சங்க நாயக்கராக நியமிக்கப்பட்டுள்ள கல்வேஹெர விமலசிறி தேரரிடம் நியமனப்பத்திரத்தை வழங்கும் நிகழ்வில் அமைச்சர் இதனை கூறியுள்ளார். (கு)

## தினசரி ராசி பலன்
(31.03.2018)

2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் பங்குனித்திங்கள் 17ஆம் நாள் சனிக்கிழமை பூரணைத்திதி மாலை 6.07 மணிவரை. பின்னர் பிரதமை. நட்சத்திரம்: உத்தரம் காலை 6.30 மணிவரை. அதன்மேல் அத்தம் பி.இ. 5.56 மணிவரை. பின்னர் சித்திரை. மரணயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - காலை 9.12 மணிமுதல் 10.43 மணிவரை
**சுபநேரம்** - மாலை 3.04 மணிமுதல் 4.34 மணிவரை
**திவசம் செய்ய வேண்டிய திதி** - பங்குனி மாத பூரணை
**பிறந்த நட்சத்திர வழிபாடு:** அத்தம்

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** - நன்மையான நாள். புதிய முயற்சிகள் வெற்றியடையும். வருமானம் வளமாக இருக்கும். இன்னல் விலகும். ஏற்றம் பெருகும். மாணவர்கள் உயர் கல்வி கற்பதற்கு நிதி உதவிகள் கிட்டும்.

**ரிஷபம்** - ஆக்கபூர்வமான நாள். பணவரவு அதிகரிக்கும். சிலருக்குப் பதவி உயர்வு கிட்டும். எண்ணிய எண்ணங்கள் ஈடேறும். அரசு வழி அனுகூலம் தேடி வரும். தூரதேசத்திலிருந்து நற்செய்திகள் வரும்.

**மிதுனம்** - கவலையான நாள். வருமானம் குறையும். மாணவர்கள் தேர்வில் தோல்வி அடைவார்கள். வியாபாரத்தில் தேக்கநிலை உண்டாகும். தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகள் குறையும்.

**கடகம்** - சம பலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சரிசமமாக இருக்கும். நினைக்கும் காரியம் தாமதமாகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச்சுமை அதிகரிக்கும். தொழில் உயர்வுகள் தாமதமாகும்.

**சிம்மம்** - உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். செய்யும் தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். சமூக அந்தஸ்து உயர்வடையும். சகோதர வழியால் நன்மைகள் உண்டாகும்.

**கன்னி** - நன்மையான நாள். பொருளாதாரம் உயர்வடையும். விருப்பங்கள் நிறைவேறும். ஏற்றுமதி, இறக்குமதி வாணிபம் புரிவோர் மிகுந்த அனுகூலம் அடைவார்கள். சகோதர வழியால் உதவிகள் கிடைக்கும்.

**துலாம்** - சஞ்சலமான நாள். பணவரவு குறையும். உடல்நலம் பாதிப்படையும். தேவையற்ற பிரயாணங்களைத் தவிர்த்தல் நலம். எதிர்பாராத செலவுகள் வரும். மன இறுக்கம் உண்டாகும்.

**விருச்சிகம்** - மகிழ்ச்சியான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். வழக்குகளில் நல்ல தீர்ப்புக் கிட்டும். தெய்வீகப் பிரார்த்தனைகள் நிறைவேறும். சிலர் வெளிநாடுகளுக்குச் செல்ல வாய்ப்புகள் தேடிவரும்.

**தனுசு** - சம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். உறவினர் வழியால் சுபச் செலவுகள் வரும். யாருக்கும் பிணைக் கையெழுத்துப் போடவேண்டாம்.

**மகரம்** - இனிமையான நாள். வருமானம் வளமாக இருக்கும். இல்லத்தில் இனிமை கொலுவிருக்கும். செய்தொழிலில் மிகுந்த முன்னேற்றம் காணலாம். சிலர் வெளிநாட்டுத் தொடர்பால் புதிய பணியை ஏற்க நேரிடும்.

**கும்பம்** - துயரமான நாள். பணவரவு குறையும். செலவுகள் அதிகரிப்பால் கடன்பட நேரும். வியாபாரம் சுறுசுறுப்பின்றித் தேங்கி இருக்கும். பிரயாணத்தின் போது விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

**மீனம்** - விருத்தியான நாள். பொருளாதாரம் மேன்மை அடையும். வியாபாரத்தில் வளர்ச்சி காணப்படும். உத்தியோகத்தர்களின் விருப்பங்கள் நிறைவேறும். புத்திர வழியால் நன்மைகள் உண்டாகும்.

**சந்திராட்டம நாள்: அவிட்டம் 3 ஆம், 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி முதலாம், 2 ஆம், 3 ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

### முதலமைச்சர் விருது:
## கலைஞர்களுக்கு அறிவுறுத்தல்

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்டு வரும் 'முதலமைச்சர் விருது – 2018' இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில், வலி. தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அறுபது வயதுக்கு மேற்பட்ட துறைசார் கலைஞர்கள் எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் வலி. தென்மேற்குப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

★ ★ ★

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வழங்கப்படும் விருதான 'கௌரவ முதலமைச்சர் விருது – 2018' இற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் நிரந்தரமக வசித்து வரும் 2017.12.31 இல் 60 வயதைப் பூர்த்தி செய்த கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியும்.

மேலும் இளம் கலைஞர்கள் ஊக்குவிப்புப் பரிசு – இற்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன. 2017.12.31 இல் 40 வயதினைப் பூர்த்தியாகாத யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் நிரந்தரமாக வசித்து வரும் இளம் கலைஞர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப் படிவம் மற்றும் விவரங்களை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்றுக்கொண்டு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும். – என்று பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ)

## நாளை மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியில் இருந்து மாலை 5.30 மணிவரை –

**யாழ். பிரதேசத்தில்** - சட்டநாதர் வீதி, பருத்தித்துறை வீதியில் கல்வியங்காட்டு சந்தையிலிருந்து நல்லூர் கோவில் வரை, நல்லூர் குறுக்கு வீதி, செம்மணி வீதி, கச்சேரி நல்லூர் வீதி, கனகரட்ணம் வீதி, திருமகள் வீதி, மலர்மகள் வீதி, கலைமகள் வீதி, பூமகள் வீதி, சாஸ்திரியார் வீதி, நடுத்தெருலேன், நாவலர் வீதி, நொத்தாரிஸ் லேன், வேலப்பர் வீதி, புவனேஸ்வரி அம்மாள் வீதி, புறூடி லேன், ஸ்ரான்லி கல்லூரி வீதி, சுப்பிரமணியம் வீதி, முதலியார் வீதி, பாரதி லேன், புங்கன்குளம் வீதி ரயில் கடவை வரை, நாயன்மார் வீதி, குகன் வீதி, பொன்னம்பலம் வீதி, நாவலர் வீதியில் மாம்பழம் சந்தியிலிருந்து நல்லூர் குறுக்கு வீதி வரை, A9 வீதியில் பாரதி வீதியிலிருந்து செம்மணி வளைவு வரை, நெடுங்குளம் வீதி ரயில் கடவை வரை, முள்ளி, நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, பளை ஒரு பகுதி, அரசர்கேணி, கச்சாய்வெளி, தர்மகேணி, முகமாலை, இத்தாவில், எழுதுமட்டுவாழ், உசன், விடத்தற்பளை, கெற்பேலி, மிருசுவில் தெற்கு, தவசிக்குளம், நாவலடி, இணுவில் ஒரு பகுதி, மல்வம், உடுவில், சங்குவேலி, பிப்பிலி, கட்டுடை, மானிப்பாய், ஆனைக்கோட்டை ஒரு பகுதி, மானிப்பாய் Gargills Food City, Cey - Nor பவுண்டேஷன் லிமிற்ரெட், மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், கனகரத்தினம் மத்திய மகாவித்தி யாலயம், SOS சிறுவர் பூங்கா, அரியாலை டீசல் அன்ட் மோட்டார் என்ஜினியறிங் பி.எல்.சி., நாயன்மார்கட்டு Carlton Sports Network (CSN) ஆகிய பிரதேசங் களிலும் –

மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## பொற்பதி அறிவாலயம் ஆண்டுவிழா இன்று

கொக்குவில் கிழக்கு பொற்பதி அறிவாலயத்தின் 6 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வும் சரஸ்வதி முன்பள்ளியின் 33 ஆவது கால்கோள் விழாவும் சண்.வாமதேவன் தலைமையில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளன.

கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியிலுள்ள பொற்பதி அறிவாலயத்தில் நடைபெறவுள்ள இவ்வைபவங்களின் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் சிறப்பு விருந்தினர்களாக சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராஜா, யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் பி.ஜெசிதரன், வினோ நகைப்பூங்கா உரிமையாளர் எஸ்.மகிந்தன், ராஜா கிறீம் ஹவுஸ் உரிமையாளர் எஸ்.சண்முகநாதன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் சு.விஜயகுமார், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி ஆர்.காந்திகா ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.

மாணவர் கௌரவிப்பு மற்றும் கலை நிகழ்வுகள் உட்பட வேறுபல நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (இ)

## வட்டு. தெக்கணப்பாய் கண்ணகை உற்சவம்

வட்டுக்கோட்டை, மார்ச் 31

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகை அம் மன் ஆலய வருடாந்த அலங் கார உற்சவம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி 10 தினங்கள் நடை பெறவுள்ளது.

சப்பறம் எதிர்வரும் 7 ஆம் திகதியும் தேர்த்திருவிழா 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கும், தீர்த்தத் திருவிழா மறுநாள் திங்கட் கிழமை ஆலயப் பித்தர் கேணியில் மாலை 5 மணிக்கும் நடைபெறும்.

தேர், தீர்த்தத் திருவிழா நாள்களில் பிற்பகல் 3.30 மணிக்கும் ஏனைய தினங்களில் மாலை 5.30 மணிக்கும் வசந்த மண்டபப் பூசை ஆரம்பமாகும். (இ)

## பாராட்டு விழா

கோண்டாவில் மக்களுடன் கே.ரி.சி. கல்வி நிறுவனம், கைகொடுப்போம் அமையம் மற்றும் நலன் விரும்பிகள் இணைந்து நடத்தும் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கு.மதுசுதனுக்கான பாராட்டு விழா –

நாளை ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு கோண்டாவில் ரயில் கடவைக்கு அருகில் உள்ள சிவநேசன் திறந்த அரங்கில் இடம்பெறும்.

ஆசிரியர் ஞானதிருக்கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு அரசியல் பிரமுகர்கள் பலரும் வருகை தரவுள்ளனர். (இ)

பாடும்மீன் சட்டத்தரணி சு.ஸ்ரீகந்தராசா

**இன்று 2018, மார்ச் மாதம் 31 ஆம் திகதி தந்தை செல்வா அவர்களின் 120 ஆவது பிறந்த தினம் ஆகும். அதையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகின்றது.**



# தமிழ் இனத்தின் இணையற்ற தலைவர் தந்தை செல்வா

இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்கள் அனைவரும் சகல உரிமைகளுடனும் முற்று முழுதான சுதந்திரத்துடனும் வாழ்வதற்கான பாதையினை வகுப்பதில் தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துச் செயற்பட்ட மாபெரும் தலைவர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப் பிள்ளை செல்வநாயகம் அவர்கள். தமிழ் மக்களால் தந்தை செல்வா என்று பாசத்துடனும், மதிப்புடனும் போற்றப்படுகின்ற ஒரே தலைவர் அவரே. தொலை நோக்குப் பார்வையுடன் தூய்மையான அரசியல் தலைவராக விளங்கிய அவர் ஒரு தீர்க்கதரிசி ஆவார்.

தந்தை செல்வா அவர்களின் செயற்பாடுகள் சிங்கள அரசுத் தலைவர்களுக்கு மிகப்பெரிய சவாலாக அமைந்திருந்தபோதும், மாற்றுக்கட்சித் தலைவர்களாலும் மதிப்போடு நடத்தப்பட்ட மாண்புமிக்க பெருந்தகையாளராகவே அவர் விளங்கினார்.

இற்றைக்கு அறுபத்தியைந்து வருடங்களுக்கு முன்னர் இருந்து இறக்கும் வரை அவர் தூவிய அரசியல் கருத்துக்களே இன்னமும் இலங்கைத் தமிழ் இனத்தின் அரசியல் பாதையைச் செப்பனிடும் தாரக மந்திரங்களாக விளங்குகின்றன. அவர் ஆரம்பித்த தமிழ் அரசுக் கட்சியே இலங்கைத் தமிழ் மக்களிடம் அமோகமான செல்வாக்குச் செலுத்தும் அரசியல் கட்சியாக இலங்குகின்றது. இவற்றிலிருந்து தந்தை செல்வா அவர்களின் தன்னிகரற்ற தலைமைத்துவத்தின் முக்கியத்துவம் நன்கு துலங்குகின்றது.

வாழத்துடிக்கின்ற ஈழத்தமிழினத்திற்காக வாராது வந்துதித்த மாமனிதரான தந்தை செல்வா, யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக்கொண்ட சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை– அன்னம்மா கணபதிப்பிள்ளை தம்பதிகளின் முதலாவது குழந்தையாக, மலேசிய நாட்டில் ஈப்போ என்னும் நகரில் 1898 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி அவதரித்தார்.

அக்காலத்தில் மலேசியாவைவிட, இலங்கையில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கல்வி வசதிகள் மிகவும் சிறப்புற்றோங்கியிருந்தன. செல்வநாயகத்தின் பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு நல்ல கல்வியை ஊட்ட வேண்டும் என்று விரும்பியமையால் அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வரவேண்டியதாயிற்று.

**யாழ்ப்பாணம் வருகை**

பெற்றோரின் விருப்பத்தினாலும், இலங்கைத்தமிழினம் செய்த மாதவத்தினாலும் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் தனது நான்காவது வயதிலே தாயாருடனும், இரண்டு தம்பிகளுடனும், தங்கையுடனும் யாழ்ப்பாணத்தில் வந்திறங்கினார். யாழ்ப்பாணத்தில், தெல்லிப்பழை அமெரிக்க மிஷன் பாடசாலையில் (இப்போதைய யூனியன் கல்லூரி) தனது ஆரம்பக் கல்வியைப் பெற்றுகொண்ட சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்கள், பின்னர் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியிலும், கொழும்பு சென். தோமஸ் கல்லூரியிலும் தனது கல்வியைத் தொடர்ந்து, அதன் பெறுபேறாக 1917 ஆம் ஆண்டு ஆசிரியப் பணியில் சேர்ந்தார்.

அதேவேளை லண்டன் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானத்துறையில் வெளிவாரி மாணவனாகவும் தனது கல்வியினைத் தொடர்ந்து கொண்டிருந்த அவர் 1918 ஆம் ஆண்டு ஒரு விஞ்ஞானப் பட்டதாரியானார். தனது ஆசிரியப் பணியில் மாணவர்களதும், பெற்றோர்களதும் பெருமதிப்பைப் பெற்றுச் சிறந்ததோர் ஆசிரியராகத் திகழ்ந்தார். அதே காலத்தில் இலங்கை சட்டக்கல்லூரியில் சட்டப்படிப்பையும் மேற்கொண்டு 1924 ஆம் ஆண்டு ஒரு சட்டத்தரணியானார்.

தனது திறமையினால் குடியியல் சட்டத்துறையில் மிகச்சிறந்த சட்டத்தரணியாக வளர்ந்து அவரது காலத்தில் புகழ்பூத்த சட்டவல்லுநர்களில் ஒருவராகப் பெயர்பெற்றார். இராணி வழக்கறிஞராகவும் (Queen Counselar) கௌரவம் பெற்றார். சா.ஜே.வே. செல்வநாய கம் அவர்களிடம், சட்ட இளவல்களாகச் சேர்ந்து, பயிற்சி பெற்றவர்கள்பிற்காலத்தில்இலங்கையின் பிரதம நீதியரசர் களாகவும், பிரபலம் மிக்க சட்டவல்லுநர்களாகவும் கொடி கட்டிப் பறந்தார் கள். இதற்கெல்லாம் காரணங்கள் அவ ரது சட்டப்புலமையும், வாதத் திறமை யும் மட்டுமன்றி அவர் கடைப்பிடித்த ஒழுக் கமும், நேர்மையும் ஆகும்.

**அரசியல் நாட்டம்**

தந்தை செல்வா அவர்களுக்கு, இளமைக் காலத்தில் அரசியலில் அவ் வளவு நாட்டம் இருந்ததில்லை. ஆனால், 1944 ஆம் ஆண்டு சோல்பரி ஆணைக் குழு அமைக்கப்பட்டபோது, தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய தேவை எழுந்தபோதுதான் அவரது கவனம் அரசியலை நோக்கித் திரும்பியது.

அக்காலத்தில் குற்றவியல் சட்டத்தில் மிகப் புகழ்பெற்று விளங்கியவரும், அரசாங்க சபையில் பருத்தித்துறைத் தொகுதி உறுப்பினராக இருந்தவருமானஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களின் தலைமையில் 29.08.1944 ஆம் திகதி அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்னும் அரசியல் கட்சி உருவானது. அக்கட்சியின் ஆரம்பக்கூட்டத்தில் தந்தை செல்வாவும் கலந்து கொண்டார்.

அகில இலங்கத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவரான ஜி.ஜி. பொன்னம்பலம் அக்கட்சியின்பிரதித்தலைவர் என்ற வகையில் தந்தை செல்வா சோல்பரி ஆணைக்குழுவின் முன்னிலையில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்திச் சாட்சியமளிப்பதில் அரும்பங்காற்றினார்.

சோல்பரி ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1947 ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெற்றது. அந்தத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் பெருவெற்றி பெற்றது. தந்தை செல்வா காங்கேசன் துறையில் போட்டி போட்டு வெற்றி பெற்றார். வடக்கிலும் கிழக்கிலும் இருந்து ஒன்பது உறுப்பினர்கள் தெரிவுசெய்யப் பட்டார்கள். அந்த வெற்றியில் தந்தை செல்வாவின் பங்களிப்பு மிகவும் மகத்தானது. அந்தத் தேர்தல் இலங்கைத் தமிழ் மக்களிடையே அவருக்கு அரசியல் ரீதியான மிகப்பெரும் அங்கீகாரத்தைப் பதிவுசெய் தது.

1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கை சுதந்திரம் பெற்ற தற்குப் பிறகு, டி.எஸ்.சேனநாயக்கவின் தலைமையில் அமைக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது அரசாங்கத்தில் சட்டவாக்க ஏற்பாடுகள் மூலம் இலங்கைத் தமிழ் மக்களை ஒட்டு மொத்தமாக ஒடுக்குவதற்கான நடவடிக் கைகளுக்குக் கால்கோள் இடப்பட்டது. 1948 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி, 18 ஆம் இலக்க இலங்கைக் குடியுரிமைச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்திய வம்சாவளித் தமிழர்களின் குடியுரிமையினை மறுத்து, அவர்களை நாடற்றவராக்கும் நோக்குடன் கொண்டு வரப்பட்ட அந்தச் சட்டம் 1948 நவம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்தது.

அந்தச் சட்டத்திற்கு எதிராக தமிழ் காங்கிரஸ் கட்சி வாக்களித்திருந்தது. தந்தை செல்வா நாடாளுமன்றத்தில் அந்தச் சட்டத்தை மிகக்கடுமையாக எதிர்த்துப்பேசினார். இன்று மலைநாட்டுத் தமிழர்களது கழுத்துக்கு கத்தி விழுந்துள்ளது. நாளை ஆட்சிமொழிபற்றி முடிவு செய்யும் நேரம் வரும்போது இலங்கைத் தமிழர்களுக்கும் இதே கதிதான் ஏற்படும் என்று அவர் எச்சரித்தார்.

1956 ஆம் ஆண்டு பிரதமராகப் பதவிக்கு வந்த எஸ்..டபிள்யூ. ஆர்.டீ. பண்டார நாயக்கா, ஜுன் மாதம் 15 ஆம் திகதி சிங்களம் மட்டும் சட்டத்தை நாடாளுமன்றத்திலே நிறைவேற்றினார். அந்தச் சட்டத்திற்கு எதிராக தந்தை செல்வா காலிமுகத்திடலிலே சத்தியாக்கிரகப் போராட்டத்தினை மேற்கொண்டார். அந்தச் சாத்விகப் போராட்டத்திற்கு எதிராக அரசாங்கத்தால் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது.

**ஸ்ரீ போராட்டமும் சிறைவாசமும்**

1957 இல் சிங்கள ஸ்ரீ யை வாகனங்களில் பொறிக்கும் நடவடிக்கைக்கு எதிராக தமிழ்ப் பகுதிகள் எங்கும் தந்தை செல்வா அவர்களது தலைமையிலே போராட்டங்கள் இடம்பெற்றன. அந்தப் போராட்டத்தின்போது தந்தை செல்வா, தண்டனை பெற்று ஒரு வாரகாலம் மட்டக்களப்பு சிறைச்சாலையில் சிறைவாசம் அனுபவித்துள்ளார்.

தந்தை செல்வாவுடன் ஓர் ஒப்பந்தத்தைச் செய்ய பண்டாரநாயக்க முன்வந்தார். 1957 ஜுலை 26 ஆம் திகதி நள்ளிரவில் பண்டா – செல்வா ஒப்பந்தம் கையொப்பமானது. ஆனால், அந்த ஒப்பந்தத்தை தந்தை செல்வா அவர்களுக்குச் சொல்லாமலே, 1958 ஏப்ரல்மாதம்8ஆம்திகதிபண்டாரநாயக்க தன்னிச்சையாக இரத்துச்செய்தார்.

1961இல் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நிர்வாகத்தினைச் சிங்கள மயமாக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப் பட்ட போது அதற்கெதிரான சத்தியாக்கிரகப் போராட்டத்தினைத் தந்தை செல்வா தலைமையில் தமிழ் மக்கள் மேற்கொண்டனர். தமிழ்மக்கள் செறிந்து வாழும் ஐந்து மாவட்டங்களில் அரசு நிர்வாகம் செயலிழந்தது. ஆட்சியினரால்அவசரகாலச்சட்டம்பிரகடனப்படுத்தப் பட்டது, 17.04.1961 இல் சத்தியாக்கிரகப் போராட்டம் முறியடிக்கப்பட்டது. தந்தை செல்வா கைதுசெய்யப்பட்டார். செல்வநாயகத்துடன் ஏனைய தலைவர்களும், தொண்டர்களுமாக 74 பேர் தடுப்புக் காவலில் 6 மாதங்கள் தடுத்து வைக்கப் பட்டனர்.1965 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியின் ஆதரவுடன் ஆட்சியை அமைத்த டட்லி சேனாநாயக்காவுடன் தந்தை செல்வா மற்றுமொரு ஒப்பந்தத் தைச் செய்தார். 1965 மார்ச் மாதம் 24 ஆம் திகதி இருவராலும் கையொப்ப மிடப்பட்ட அந்த ஒப்பந்தமும் நிறைவேற்றப்படாமல் கைவிடப்பட்டது.

## சமஷ்டி ஆட்சியே உகந்தது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தவர்

**அரசுக்குச் சவால்**

இறுதியாக 1970 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஸ்ரீமாவோ பண்டார நாயக்க 1972 ஆம் ஆண்டு இலங் கையைக் குடியரசாக்கும் புதிய அரசமைப் பை கொண்டுவந்து, முன்னைய அர சமைப்பில் இருந்த கொஞ்ச நஞ்ச உரிமைகளையும்குழிதோண்டிப்புதைத்த போது, தந்தை செல்வாவால் பொறுக்க முடியவில்லை. தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினா மாச் செய்து, தமிழ்மக்களின் ஆதரவு தனது கட்சியின்கொள்கைக்குஉண்டுஎன்பதை நிரூபிக்கு முகமாக முடியு மானால் இடைத்தேர்தலை வைத்து என்னை வென்று காட்டுங்கள் என்று அரசுக்குச் சவால் விட்டு நாடாளுமன்றத்திலிருந்து வெளியேறினார்.

(12 ஆம் பக்கம் பார்க்க...)



# கண்டிக் கலவரங்கள்: சுற்றுலாத்துறை மீண்டும் நிமிர்கிறது

இலங்கையின் சுற்றுலா வரைபடத்தில் முக்கிய இடத்தில் உள்ள கண்டி, சமீபத்திய கலவரங்களால் திகைத்துப்போயிருக்கிறது. வன்முறைச் சம்பவங்கள் நடந்த அடுத்த சில தினங்களில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்திருக்கிறது என்கிறார்கள் அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள்.

கண்டியில் உள்ள சுற்றுலா தகவல் மையத்தை அணுகி, சுற்றுலாப் பயணிகளின் வருகை குறித்துக் கேட்டால் சற்று சங்கடமான புன்னகையுடனேயே பேச ஆரம்பிக்கிறார்கள். பொதுவாக பெரிய அளவில் பாதிப்பு என்று சொல்ல முடியாது. ஆனால், சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்திருக்கிறது என்கிறார் அந்த மையத்தின் தகவல் அதிகாரியான ரோட்னி.

இலங்கைக்கு சுற்றுலா வரும் பயணிகள் அனைவரும் தவறவிடாத ஒரு நகரம் கண்டி. மத்திய மாகாணத்தின் தலைநகரான கண்டி, நாட்டின் பெரிய நகரங்களில் ஒன்று. தம்புள்ள, நுவரெலியா, பொலன்னறுவை என சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு அருகில் அமைந்திருப்பதாலும் புகழ்பெற்ற தலதா மாளிகை எனப்படும் புத்தரின் புனிதப் பல்வைக்கப்பட்டுள்ள கோவில் இருப்பதாலும் ஆண்டு முழுவதுமே சுற்றுலாப் பயணிகள் வந்து குவியும் நகரம் இது.

ஆனால், இந்த மார்ச் மாதம் ஐந்தாம் தேதி மதியத்திற்கு மேல், திகணவில் ஏற்பட்ட கலவரத்தால் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் சுற்றுலா ஏற்பாட்டாளர்களும் சற்று திகைத்துத்தான் போனார்கள். ஆனால், இது வெகு சில மணி நேரங்களுக்கே நீடித்தது. அதிலும் வெளிநாட்டுப் பயணிகள் தங்கள் பாஸ்போர்ட்டுகளைக் காண்பித்தால் அவர்கள் தெருக்களில் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள் என்கிறார் ரோட்னி.

சுற்றுலாத் துறை அதிகாரிகள் இப்படிச் சொன்னாலும், திகண, அக்குறணை ஆகிய இடங்களில் நடந்த வன்முறையும் அதைத் தொடர்ந்த ஊரடங்கு உத்தரவு, நெருக்கடி நிலை ஆகியவையும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மார்ச் ஆறாம் திகதிக்கு மேலும் கலவரங்கள் தொடர்ந்த நிலையில், கண்டியில் ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டிருப்பதால் சுற்றுலாப் பயணிகள் அடுத்த 24 மணி நேரத்திற்கு கண்டி செல்வதைத் தவிர்க்க வேண்டும் என்ற அறிக்கை ஒன்றை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபை மார்ச் ஏழாம் திகதியன்று வெளியிட்டது. இது நிலைமையை இன்னும் சிக்கலாக்கியது. கலவரங்கள், நெருக்கடி நிலை ஆகியவற்றைத் தொடர்ந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரிட்டன் ஆகிய நாடுகள் சுற்றுலாப் பயணிகளுக்கான அறிவுறுத்தல்களையும் வெளியிட்டன.

கடந்த மார்ச் 11ஆம் தேதியன்று விழா ஒன்றில் பேசிய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் இது தொடர்பான கவலையை வெளியிட்டார். கொழும்புநகருக்கு அடுத்தபடியாக அதிக சுற்றுலாப் பயணிகள் வரும் நகரம் கண்டி. அங்கு சுற்றுலாவை நம்பியிருப்பவர்கள், உடனடியாக நிலைமையை சீரமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார். வன்முறை சம்பவங்கள் முடிந்து சில நாட்களுக்குப் பிறகும் பிரதமர் இவ்வாறு கூறியது, இந்த நிகழ்வுகள் கண்டியின் சுற்றுலாத் துறையில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தை சுட்டிக்காட்டியது.

தாங்களாகவே திட்டமிட்டு வரும் சுற்றுலாப் பயணிகள் கண்டிக்கு தொடர்ந்து வந்துகொண்டிருந்தாலும், சுற்றுலா நிறுவனங்களின் மூலம் ஏற்பாடு செய்தவர்கள் தங்கள் பயணங்களை மாற்றிக் கொண்டார்கள். கண்டிக்கு வராமலேயே, தம்புள்ள, பொலன்னறுவை ஆகிய நகரங்களுக்கு செல்ல ஆரம்பித்தார்கள்.

இப்படி சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்தது, கண்டியின் சுற்றுலா தகவல் மையப் பதிவேட்டைப் பார்த்தாலே தெளிவாகத் தெரிகிறது. மார்ச் 4 ஆம் திகதியன்று இந்த மையத்திற்கு 47



வெளிநாட்டுப் பயணிகள் வருகைதந்த நிலையில், ஐந்தாம் திகதியன்று இந்த

## தலதாமாளிகைக்கு நாளாந்தம் 15 ஆயிரம் பேர் வரை வருகை

எண்ணிக்கை 38ஆகவும் ஆறாம் திகதி 30ஆகவும் குறைந்தது. ஏழாம் தேதி 25 பேரும் பத்தாம் திகதி 5 பேருமே இங்கு வந்தனர்.

ஆனால், இப்போது நிலைமை மேம்பட்டிருக்கிறது. 40இற்கும் மேற்பட்டவர்கள் இப்போது மீண்டும் வர ஆரம்பித்திருக்கிறார்கள் என்று பெருமூச்சு விடுகிறார் ரோட்னி.

தற்போது இங்கு வரும் ஐரோப்பியர்களிடம், கண்டி வன்முறை குறித்த எந்த கவனமும் இல்லை என்றே சொல்லலாம். பேராதனையில் உள்ள தாவரவியல் பூங்காவில் ஜேர்மனியிலிருந்து வந்திருந்த மார்க்வெஸ், அந்த வன்முறைகளைப் பற்றிக் கேள்விப்பட்டேன். ஆனால், பெரிதாக ஏதும் இருக்குமென்று தோன்றவில்லை. அதனால் வந்தோம் என்று பி.பி.ஸியிடம் கூறினார்.

அங்கு சந்தித்த சில சுற்றுலா வழிகாட்டிகள், மார்ச் ஏழு, எட்டு ஆகிய தினங்களில் வருகை குறைந்ததை ஒப்புக்கொண்டாலும், இப்போது சுற்றுலாப் பயணிகள் மீண்டும் அதிகரிக்கின்றமையை சுட்டிக்காட்டுகிறார்கள். ஒரு பயமும் இல்லை. எதற்குப் பழைய கதையையே பேசுகிறீர்கள். நீங்கள் தான் பார்க்கிறீர்களே, எவ்வளவு வெளிநாட்டவர் இங்கு இருக்கிறார்கள் என்பதை? என்கிறார் வழிகாட்டியான மெர்வின்.

கண்டியின் பிரதான சுற்றுலாத் தலமான தலதாமாளிகையின் சர்வதேச ஊடகப்பொறுப்பாளர், சுற்றுலாப் பயணிகளின் வருகை 20 சதவீதம் அளவுக்குக் குறைந்தது என்கிறார். ஆனால், கோவிலில் பூஜைகள் தொடர்ந்து நடைபெற்றன. வெளிநாட்டுப் பயணிகளும் வந்தார்கள். ஊரடங்கு உத்தரவு இருந்தாலும் யாரும் அவர்களை ஏதும் சொல்லவில்லை என்கிறார் அவர்.

ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலானவர்கள் பயணங்களை ரத்துச்செய்யவில்லை. சீனாவிலிருந்து வரும் பயணிகளின் எண்ணிக்கையே வெகுவாகக் குறைந்தது என்கிறார் அவர். தினமும் 15 ஆயிரம் பேர்வரையில் இந்தக் கோவிலுக்கு வருவார்கள். மார்ச் 6 முதல் 9ஆம் திகதி வரையிலான நாள்களில் இந்த எண்ணிக்கை வெகுவாகக் குறைந் தது என்றாலும் இப்போது நிலைமை சரியாகிவிட்டது என்கிறார் அவர். சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவின் காரணமாக, இங்குள்ள ஹோட்டல்களும் பாதிக்கப்பட்டன. இங்கே 100 அறைகள் இருக்கின்றன. பொதுவாக வருடம் முழுவதும் 80 சதவீத அறைகள் நிறைந்திருக்கும். மார்ச் வன்முறையைத் தொடர்ந்த நாளில் 20 சதவீதம் அளவுக்கு ஆள்கள் வருவது குறைந்தது என்கிறார் கண்டியில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலான தி ரோயல் கண்டியின் மேலாளரான சமரவீர.

கண்டி தொடர்பான செய்திகளின் காரணமாக, அதற்கு அருகில் உள்ள நுவரெலியா, ஹட்டன், எல்ல ஆகிய பிரதேசங்களை நோக்கி சுற்றுலாப் பயணிகளின் கவனம் திரும்பியிருப்பதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.







புனித வார பெரிய வெள்ளியான நேற்று நாட்டின் பல பாகங்களிலும் உள்ள கத்தோலிக்க தேவாலயங்களில் சிலுவைப்பாதை இடம் பெற்றுள்ளது. நேற்று வெள்ளிக்கிழமை காலை மன்னார் மறை மாவட்டத்தில் உள்ள அனைத்து கத்தோலிக்க தேவாலயங்களிலும் இந்தச் சிலுவைப் பாதை நிகழ்வுகள் இடம்பெற்றன.

மன்னார் மறைமாவட்டத்தின் தாய் பங்காக திகழும் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்தில் புனித வார பெரிய வெள்ளியான நேற்று காலை 6.30 மணியளவில் விவிலிய சிலுவைப்பாதை இடம் பெற்றது.

பேசாலை இணை பங்குத்தந்தை அருட்திரு சாந்தன் அடிகளார் தலைமையில் இடம் பெற்ற விவிலிய சிலுவைப் பாதை சடங்கில் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-112)



காலைக்கதிர் Kalaikkathir



# ஐ.தே.கவினர் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

**கொழும்பு, மார்ச் 31**

**பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சியினர் எவராவது வாக்களித்தார்கள் என்றால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவ டிக்கை எடுக்கப்படுவதுடன் கட்சியில் இருந்து நீக்கப்படுவர் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.**

**அத்துடன், நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக் கெடுப்பு தினத்தன்று ஐக்கிய தேசியக் கட்சியினர் அனைவரும் நாடாளுமன்றத்திற்கு வருகை தரவேண்டும். அதற்கான ஆலோசனைகள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் அந்தக் கட்சி குறிப்பிட்டது.**

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டம் நேற்றுமுன்தினம் சிறிகொத்தாவில் நடைபெற்றது. இந்த கூட்டத்தின் பின்னர் கட்சியின் எம்.பிக்கள் பலர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர்.

இதன்போது கட்சியின் பிரதி பொதுச்செயலாளரும் அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சியினர் எவராவது வாக்களித்தார்கள் எனில் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து கட்சியில் இருந்து நீக்குவோம்.

அத்துடன், எவரும் பிரதமருக்கு எதிராக வாக்களிக்க மாட்டார்கள். ஐக்கிய தேசியக் கட்சியினர் அனைவரும் பிரதமருக்கு ஆதரவாகவே வாக்களிப்பர். ஆகவே பிரதம ருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாம் தோற்கடிப்போம். இந்த வாக்கெடுப்பின் போது நாட்டு மக்கள் எதிர்பார்க்காதவர்கள் பலர் பிரதமருக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள்.

அத்துடன், நம்பிக்கையில்லா பிரேரணை மீதான வாக்கெடுப்பு நாளன்று ஐக்கியதேசியக்கட்சியினர் அனைவரும் நாடாளுமன்றத்திற்கு வருகை தரவேண்டும். அதற்கான ஆலோசனைகளை நாம் வழங்கியுள்ளோம் என்றார்.

இதன்போது ரவி கருணாநாயக்க எம்.பிஊடகங்களுக்குதெரிவித்தவை வருமாறு:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிக்க வேண்டியது எமது கடமையாகும். அதனை நாம் செய்ய வேண்டும்.

ஆகவே, எதிர்வரும் நான்காம் திகதியன்று பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்குஎதிரானநம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்பதை நாட்டு மக்கள் கண்டு கொள்வர். அதன்பின்னர் எமது பலம் அதிகரிக்கும்.

அத்துடன், மத்திய வங்கி பிணை முறி மோசடி நடந்துள்ளதாக கூறுகின்றனர். அவ்வாறாயின் என்ன மோசடி நடந்துள்ளது என்பதனை நிரூபித்துக் காட்டுங்கள். மோசடி நடந்துள்ளதாக கூறுகின்றவர்கள் அதனை ஆதாரபூர்வமாக நிரூபிப்பது கிடையாது.

ஆகவே, முன்னைய ஆட்சியின் போது நடந்தமோசடிகள் குறித்து எந்தவொரு நடவடிக்கையும் எடுப்பதாக இல்லை என்று தெரிவித்துள்ளார்.

அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தவை வருமாறு:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடித்ததன் பின்னர் கட்சியில் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

அத்துடன், கட்சியின் தலைமை பொறுப்பை ஏற்குமாறு யாரும் என்னிடம் கோரவில்லை. இந்த பொறுப்பை ஒப்படைத்தால் உரிய வகையில் நான் செயற்படத் தயாராக உள்ளேன். எனினும் தற்போதைக்கு கட்சி தலைவர் ஒருவர் உள்ளார்.

ஆகவே, அவருக்கு கட்டுப் பட்டு நடக்க வேண்டும். மேலும் தெல்தெனிய சம்பவத்திற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கதான் காரணம் என்று கூட்டு எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கூறியுள்ளனர்.

அப்படியாயின் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கூட்டு எதிர்க்கட்சிக்கு எதிராகவே கொண்டு வர வேண்டும். ஏனெனில் தெல்தெனிய சம்பவத்தின் சூத்திரதாரியை கண்டறிய கூட்டு எதிர்க்கட்சியினர் கண்ணாடி முன் நின்றால் உண்மை தெரியவரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பரீட்சை எழுத முன் வினாத்தாளை வாசிக்க 15 நிமிடம் வழங்கப்படும்



இனிமேல் மாணவர்கள் பொதுப் பரீட்சைகளுக்கு தோற்றும்போது பரீட்சை எழுதமுன் வினாத்தாளை வாசிக்க 15 நிமிடங்கள் வழங்கப்படும். அதாவது வாசிக்கும் நேரம் ஒதுக்கப்படும். அதன் பிறகே பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவர் என்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும், பல புதிய யுக்திகளை, மாற்றங்களை பரீட்சைகள் திணைக்களம் இந்த ஆண்டிலிருந்து முன்னெடுக்கவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2001 ஆம் ஆண்டிற்குப் பின்னரான பொதுப்பரீட்சைப் பெறுபேறுகளை உறுதிப் படுத்த வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டிலிருந்து தரம் 12 இற்கான பொது தகவல் தொழில்நுட்ப பரீட்சை ஒன்லைனில் நடத்தப்பட வுள்ளது. பகுதி1 பல்தேர்வு வினாக்கள் பகுதி 2 பிரயோகப் பயிற்சி ஆகும். பொதுப் பரீட்சை நடைபெறும் மண்டபங்களுக்கு மேற்பார்வையாளர் மற்றும் நோக்குநர்களுக்கு மேலதிகமாக மேலதிக மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். அவர்கள் நோக்குநர்களை மேற்பார்வை செய்வார்கள்.

ஓகஸ்ட் புலமைப் பரீட்சை முற்பகுதியில் நடத்தப்படவுள்ளது. அதேபோல க.பொத. சாதாரணதரப் பரீட்சை டிசெம்பர் முதல்வாரத்திலே ஆரம்பிப் பதுடன் அந்த மாதத்திலேயே மதிப்பீட்டையும் நடத்தி முடிக்க ஏற்பாடு செய்யப்படும்.

இனிமேல் க.பொ.த. சா.த மற்றும் உயர்தர சான்றிதழ்களின் பிரதிகளைப் பெறவிரும்பினால் ஒன்லைனில் விண்ணப்பிக்கமுடியும். அதற்கான கட்டணத்தைஅருகிலுள்ளவங்கியில் செலுத்தி அதன் இலக்கத்தை ஒன்லைனில் அறிவித்தால் பிரதிகளை கையில் கிடைக்குமாறு அல்லது கூரியர் தபாலில் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தரம் 6- 9 வரை ஒதுக்கப்படாத பாட வேளை என்று ஒன்றிருந்து வந்துள்ளது. இனிமேல் அப்பாடவேளைக்கு தகவல் தொழில்நுட்ப சான்றிதழ் பாடத்தினை இடுமாறு கேட்கப்பட்டுள்ளது. அப்பாடத்திற்கு கல்வியியற்கல்லூரி பயிற்சி முடித்தவர்களை நியமிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வெலிமடை பிரதேச சபையும் ஐ.ம.சு. கூட்டமைப்பு வசம்



கொழும்பு, மார்ச் 31

வெலிமடை பிரதேச சபை யும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வசமாகியுள்ளது.

வெலிமடை பிரதேச சபைக்கு தெரிவான உறுப்பினர்களின் தலைவர், உப தலைவர் தெரிவு நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணியளவில் வெலிமடை பிரதேச சபையின் புதிய கட்டடத்தில் நடைபெற்றது.

வெலிமடை பிரதேச சபைக்கான தலைவர் மற்றும் உப தலைவர் ஆகிய தெரிவுகள் ஊவா மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் மங்கள விஜயநாயக தலைமையில் இடம்பெற்றது. பிரதேச சபையின் தலைவராக, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பாக போட்டியிட்டு தெரிவான எஸ்.ஏ.ஆர்.பந்துசேனவும், உப தலைவராக ஐக்கியதேசியக்கட்சிசார்பில்போட்டியிட்டு தெரிவான சீத்தா சமரவீரவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர் தெரிவுக்கான வாக்களிப்பு திறந்தமுறை வாக்கெடுப்பாகவே நடைபெற்றது.

இந்தச் சபைக்கு தலைவரை தெரிவு செய்வதற்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டு தெரிவான இந்திக சம்பத் மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற எஸ்.ஏ.ஆர். பந்துசேனவும் போட்டியிட்டனர்.

இதில் 20 வாக்குகளைப் பெற்று எஸ்.ஏ.ஆர்.பந்துசேன தலைவர் பதவிக்குத் தெரிவானார். இதற்கு எதிராக போட்டியிட்ட இந்திக சம்பத் 18 வாக்குகள் பெற்றுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக போட்டியிட்டு வெற்றிபெற்ற சீத்தா சமரவீர உப தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

# அதிகமான ஆபாசப் படங்களை இணையத்தில் இணைத்த நாடு இலங்கை

*கொழும்பு, மார்ச் 31*

உலகில் அதிகமான ஆபாசப் படங்களை இணையத்தில் இணைத்த நாடாக இலங்கை காணப்படுகிறது என கூகிள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் இந்த நிலைமை காணப்பட்டது என ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மென்பொருள் பொறியியலாளர் பெத்தும் புத்திக தெரிவித்துள்ளார். இலங்கையர்களின் கணினி அறிவு நூற்றுக்கு 38 வீதம் காணப்படுகின்றது.

அதில் நூற்றுக்கு 89 வீதமானவர்கள் ஆண்கள் எனவும், இலங்கை தொழில் நுட்ப வளர்ச்சியடையாத நாடுகளில் ஒன்றாகவும் உள்ளதென அவர் குறிப் பிட்டுள்ளார்.

இணையத்தளத்தைப் பாதுகாப்பாக பயன்படுத்தும் முறைமை தொடர்பிலும் கணினி குற்றங்கள் தொடர்பிலும் சிறுவர்களுக்கு இணையத்தள பயன்பாட்டிற்கு இடமளிக்கக் கூடிய முறையையும் அவர் தெளிவுப் படுத்தியுள்ளார்.

விசேடமாக சைபர் தாக்குதல்கள் தொடர்பிலும், சமூக வலைத்தளங்கள் பயன்பாடு தொடர்பிலும் அவதானமாக இருக்கு மாறு அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

(க)

காலைக்கதிர் Kalaikkathir



# மனித உரிமை கவுன்ஸிலில் கொடுத்த வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை!



## சரத் அமுனுகம தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 31

ஜெனீவா மனித உரிமை கவுன்ஸிலிலும்சர்வதேசஅமைப்புகளுக்கும் கொடுத்த வாக்குறுதிகளை முழுமையாக நாட்டில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றஅவசியம்எமக்கு இல்லை. அரசமைப்பின் பிரகாரமே எமது நகர்வுகளை நாம் முன்னெடுப்போம்.

அத்துடன், சர்வதேச புலி ஆதரவு அமைப்புகளுடன் எந்த பேச்சுக்கும் இடமில்லை என அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் குற்றவாளி யாக இலங்கை நிற்கும் இறுதி விஜயம் இதுவாகவே இருக்க வேண்டும். இனியொரு போதும் சாட்சிக் கூண்டில் நிற்கும் பயணங்களுக்கு இடமில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கட்சித் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐக்கியநாடுகள்மனிதஉரிமை கவுன்ஸிலின் 37 ஆவது கூட்டம் இடம்பெற்றுள்ளது. இதில் இலங்கை விவகாரங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இம்முறை இலங்கைப் பிரதிநிதிகள் குழாமில் வெளிவிவகார அமைச்சின் குழுவுடன் நாமும் கலந்து கொண்டிருந்தோம்.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடரில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்கள் இலங்கை அரசாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமையவே தொடர்ச்சியாக இலங்கை விவகாரங்கள் குறித்து ஆராயப்பட்டும் வருகின்றன.

இதில் மனித உரிமை கவுன்ஸிலின் நிலைப்பாடு, அங்கத்துவ நாடுகளின் நிலைப்பாடு, இலங்கை அரச பிரதிநிதிகளின் நிலைப்பாடு மற்றும் சிவில், அரச சார்பற்ற நிறுவனங்களின் நிலைப் பாடுகள் என்பன ஆராயப்படும்.

நாம் கடந்த காலங்களில் கொடுத்த வாக்குறுதிகளுக்கு அமைய சில முக்கியமான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். குறிப்பாக, காணாமற்போனோர் குறித்த காரியாலயம் அமைக்கப் பட்டது. வலுக்கட்டாயமாக காணமற்போனோர் குறித்த சர்வதேச சமவாய சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான நஷ்டஈடு வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கபட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில், இலங்கையின் செயற்பாடுகளில் மந்தகதியான போக்கே முன்னெடுக்கப்பட்டு வருவதாக மனித உரிமைகள் கவுன்ஸிலும் சர்வதேச நாடுகளும் குற்றம் சுமத்தியுள்ளன. அதனை நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

அத்துடன், மனித உரிமை கள் கவுன்ஸிலின் அவசரத்திற்காகவோ அல்லது சர்வதேச சிவில் அமைப்புகளின் தேவைக்காகவோ எம்மால் துரிதமாக எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாது. இது ஜனநாயக நாடு எனினும் தீர்வுகள் குறித்து தீர்மானங்கள் எடுக்கும்போது ஆழமாகச் சிந்தித்து மெதுவாகவே தீர்மானங்களை முன்னெடுக்க வேண்டும்.

அதேபோல், இதற்கு முன்னர் ஜெனீவாவில் என்ன தீர்மானம் எடுக்கப்பட்டிருந் தாலும், என்ன வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் அவற்றையெல்லாம் இலங்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அவசியம் எமக்கு இல்லை. நாம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளை இலங்கை அரசமைப்பின் பிரகாரமே முன்னெடுப்போம்.

சர்வதேசம் கூறியதற்காக எம்மால் இங்கு தீர்மானங்களை நடைமுறைப்படுத்த முடியாது. இம்முறை ஜெனீவா கூட்டத் தொடரில் அரசின் நிலைப்பாட்டினை தெளிவாக முன்வைத்துள்ளோம்.

மேலும், சர்வதேச நீதிமன்ற கட்டமைப்புகளை அனுமதித்து அதன்மூலமாக உண்மைகளை கண்டறியும் செயற்பாடுகளை முன்னெடுப்பதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. உண்மைகளை கண்டறிய உள்ளக பொறிமுறைச் செயற்பாடுகளை கையாள முடியும். சர்வதேச தொழில்நுட்ப உதவிகளை நாம் மறுக்கவும் இல்லை.

எனினும், நீதி விசாரணைகள் இலங்கை மூலமாக மட்டுமே இடம்பெற முடியும். இதில் சர்வதேச நீதிபதிகளுக்கு இடமில்லை. இந்த விடயத்தில் சிவில் அமைப்புகளும், சர்வதேச அமைப்புகளும் தமது கருத்துக்களை கூறி எம்மை விமர்சிக்க முடியும். எனினும் அரசாங்கமாக நாம் இந்தக் கருத்துகளை செவிமடுக்கத்தயாராக இல்லை. இதில் வாத விவாதங்களுக்கும் ஒரு போதும் இடமில்லை.

அதேபோல், இந்த நாட்டில் பயங்கரவாதம் நிலவிய காலத்தில் பல நெருக்கடிகளுக்கு நாம் முகங் கொடுக்க நேர்ந்தது. இலங்கையின் பயங்கரவாதமே சர்வதேச பயங்கரவாத வளர்ச்சிக்கு கூட துணைநின்றது எனலாம். அவ்வாறான ஒரு நிலையில் எமது இராணுவம் பயங்கரவாதத்தை தோற்கடித்து இன்று யுத்தம் நிறைவடைந்து பத்து ஆண்டுகளாகின்றன.

மக்கள் அமைதியாக வாழ்கின்றனர், இனரீதியிலானநெருக்கடிகள் எவையும் இல்லாது நாடு அமைதியான பயணத்தினை முன்னெடுத்துச் செல்கின்றது. அவ்வாறு இருக்கையில் சர்வதேச நாடுகளில் உள்ள பயங்கரவாத ஆதரவு அமைப்புகள் இலங்கையை நெருக்கடிக்குள் தள்ளும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

இந்த பயங்கரவாத அமைப்புகள் எம்மை பேச்சுவார்த்தைகளுக்கு அழைக்கின்றன. எமக்கு அவர்களுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க எந்த அவசியமும் இல்லை. தமிழ் பயங்கரவாத ஆதரவு அமைப்புகளை சந்திக்க நாம் தயாராகவும் இல்லை. அவர்களுடன் பேச்சும் இல்லை.

மேலும், இம்முறை இலங்கை அரசாக நாம் மிக முக்கிய தீர்மானம் ஒன்றை முன்னெடுத்துள்ளோம். இலங்கையில்யுத்தம் முடிவுக்கு வந்து 10 ஆண்டுகள் ஆகின்றன. இந்த பத்து ஆண்டுகளில் பல்வேறு மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. யுத்த மனோ நிலையில் இருந்து மக்கள் விடுபட்டு இன்று அமைதியான நாட்டுக்குள் இணைந்து வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் நாம் தொடர்ந்தும் மனித உரிமைகள் கவுன்ஸிலில் குற்றவாளியாக நிற்க முடியாது. மனித உரிமைகள் குறித்து ஜெனீவாவில் நாம் குற்றவாளியாக நிற்கும் இறுதி சந்தர்ப்பம் இதுவாகே அமைய வேண்டும்.

நாம் இன்று பொறுப்புக் கூறவும் நெருக்கடிகளை சந்திக்கவும் பயங்கரவாதிகளே காரணமாகும். அவர்கள் முன்னிலையில் குற்றவாளிகளாக நாம் நிற்கவேண்டிய அவசியம் இல்லை. இலங்கையை ஒரு சாட்டாக வைத்து கொண்டு சர்வதேச அமைப்புகளும் மனித உரிமைகள் கவுன்ஸிலிலும் அவர்களின் இருப்பினை தக்க வைக்க முயற்சித்து வருகின்றன .

ஆகவே இனியும் நாம் மனித உரிமைகள் கவுன்ஸிலில் சாட்சியாளர்களாக நிற்க வேண்டிய நிலைமையை இந்தத் தடவையுடன் நிறுத்திக்கொள்ள வேண்டும். வெளிவிவகார அமைச்சின் ஊடாக அதற்கான பரந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

சர்வதேச நாடுகளில் இருக்கும் எமது நாட்டின் தூதுவர்கள் மூலமாக எமது நிலைப் பாட்டை வெளிபடுத்த வேண்டும். சர்வதேச நாடுகளை எம்பக்கம் ஈர்க்கும் நடவடிக்கைகளை கையாள வேண்டும். அதை விடுத்து நாம் தொடர்ந்தும் குற்றவாளியாக நிற்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார். (கு)

# தமிழ் இனத்தின் இணையற்ற தலைவர் தந்தை செல்வா

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பதவியைத் துறந்த தந்தைசெல்வா தள்ளாத வயதில், தளர்ச்சிய டைந்த தனது உடல் நிலையுடன் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலுள்ள எல்லாத் தொகுதிகளுக்கும், சென்று மக்களைச் சந்தித்தார். ஊரூராக அவர் பவனிவந்த போது வீதிகளின் இரு பக்கங்களிலும் கூடிநின்ற மக்கள் ஆனந்தக்கண்ணீர் சொரிந்து வரவேற்றார்கள், வாழ்த்துக் கூறினார்கள். தந்தையின் முகத்தைக் கண்டதும் தாங்கொணாத உணர்ச்சிப் பெருக்கால் ஆயிரக்கணக்கான மக்கள் அழுத காட்சிகளை என்றும் மறக்க முடியாது.

அரசு கிட்டத்தட்ட மூன்று வருடங்களாகத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடித்தது. இறுதியில் 1975 பெப்ரவரி 6ஆம்திகதிநடைபெற்றஇடைத்தேர்தலில் தந்தை செல்வா 15 ஆயிரத்திற்கும் அதிகப்படியான வாக்குக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுத் தமிழ் மக்களின் அங்கீகாரத்தை முழு உலகுக்கும் தெரியப்படுத்தினார்.

**தமிழர் கூட்டணி உதயம்**

1972 ஆம் ஆண்டு இலங்கை அரசியலில் மிகவும் இக்கட்டான காலகட்டமாக வந்த போது, 25 வருடங்களாகத் தன்னை அரசியல் எதிரியாக எண்ணிச் செயல்பட்டவரான தமிழ்காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களையும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர், சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களையும் தமிழ் மக்களின் நலன் கருதி ஒருங்கிணைத்து தமிழர் கூட்டணி என்னும் அமைப்பை தந்தை செல்வா உருவாக்கினார்.

1976 இல் இவ்வமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டுக்கோட்டையில் ஒரு மாநாட்டை நடத்தியது. அதில் வட்டுக்கோட்டைத் தீர்மானம் எனப்படும் வரலாற்று முக்கியம் வாய்ந்த தீர்மானத்தை நிறைவேற்றியது.

அத் தீர்மானத்தின் மூலம் இலங்கையில் தமிழ்த் தேசத்தின் இருப் பைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், சுதந்திர, இறைமையுள்ள, மதச்சார்பற்ற, சோசலிசத் தமிழீழ நாட்டை மீள்விக்க வேண்டுமெனப் பிரகடனம் செய்யப்பட்டது.

அரசியல் ரீதியாக தமிழர் தாயகம் என்ற சொற்பிரயோகத்தை முதன் முதலில் பயன்படுத்தியவர் தந்தை செல்வா அவர்களே. தமிழ் இனம் ஒரு தேசிய இனம் என்றும், வடக்குக் கிழக்கு மாகாணங்கள் அவர்களின் தாயகம் என்றும், சுயாட்சியுடன் வாழத் தகுதியுடைய தமிழர்கள் இந்த நாட்டில் வாழ்கின்ற ஏனைய மக்களோடு சரிநிகர் சமமாக வாழ வேண்டும் என்றும் 1950 களிலேயே வலியுறுத்திக் கூறியிருந்தார் தந்தை செல்வா.

இலங்கை மக்களுக்கு இணைப்பு (சமஷ்டி) ஆட்சிமுறையே உகந்தது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர் தந்தை செல்வா அவர்கள். அதன் காரணமாகவே எத்தனையோ இடர்கள் வந்தபோதும், எத்தனையோ தடவைகள் ஏமாற்றப்பட்ட போதும் இலங்கையில் மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களுடன் மீண்டும் மீண்டும் பேச்சுக்களை நடத்தினார்.

அரசுகளின் நடவடிக்கைகளுக்காகத் தனது கொள்கையில் அவர் சமரசம் செய்துகொள்ளவில்லை. இறுதியில், எதுவுமே சரிப்பட்டு வராது, எந்த உரிமையும் கிடக்காது, இருப்பதும் இழந்து போகின்றது என்ற நிலைமை ஏற்பட்டபோதுதான் தமிழ் ஈழக் கோரிக்கையை முன்மொழிந்தார்.

அதனை வென்றெடுப்பதில் மிகக் கடுமையான இடர்களும், தடைகளும் இருக்கின்றமையை அவர் உணர்ந்திருந்தமையால்தான், இனிமேல் தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று வேதனையின் விளிம்பில் நின்று மொழிந்தார்.

தந்தை செல்வா ஒரு சகாப்தம். இலங் கைத் தமிழ் இனத்திற்காகத் தன்னை முழுதாக அர்ப்பணித்து, தான் ஈட்டிய சொத்துக்கள் முழுவதையும் செலவிட்ட தன்னலமற்ற ஒரு தலைவர்.

தமிழரசுக்கட்சிக்காக அவர் நடத்திய சுதந்திரன் பத்திரிகை நட்டத்தில் இயங்கியபோது அந்த நட்டத்தை ஈடுசெய்வதற்காக, மலைநாட்டிலிருந்த அழகிய பங்களாவுடன் கூடிய தேயிலைத் தோட்டத்தையே விற்றவர், தந்தை செல்வா அவர்கள்.


தந்தை செல்வா அவர்களின் சமஷ்டிக் கோரிக்கையை சிங்கள அரசுகள் அன்றே ஏற்றுச் செயற்படுத்தியிருந்தால் இதுவரை ஏற்பட்ட அழிவுகள் தவிர்க்கப்பட்டிருக்கும். முழு நாடுமே சுபீட்சமடைந்திருக்கும். எல்லா இனங்களும் ஒற்றுமையாக நல்லெண்ணத்துடன் வாழமுடிந்திருக்கும். உலகத்திற்கே முன்னுதாரணமான நாடாக இலங்கை மிளிர்ந்திருக்கும்.

உலகத்தில்தமிழ்இனம்உள்ளவரை, தந்தை செல்வாவின் புகழ் வாழும். ★

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் - 23 விடைகள் (பகுதி I)

| | | | |
|---|---|---|---|
| 1) 02 | 11) 02 | 21) 01 | 31) 03 |
| 2) 03 | 12) 01 | 22) 02 | 32) 02 |
| 3) 02 | 13) 01 | 23) 03 | 33) 03 |
| 4) 02 | 14) 01 | 24) 03 | 34) 01 |
| 5) 01 | 15) 02 | 25) 03 | 35) 03 |
| 6) 01 | 16) 01 | 26) 02 | 36) 02 |
| 7) 01 | 17) 03 | 27) 01 | 37) 01 |
| 8) 02 | 18) 02 | 28) 02 | 38) 02 |
| 9) 03 | 19) 03 | 29) 02 | 39) 02 |
| 10) 02 | 20) 01 | 30) 03 | 40) 01 |

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் - 23 விடைகள் (பகுதி II)

1) இரவுக்காலம்
2) புத்துணி
3) சேய்மை
4) கடல்
5) கற்பாறை
6) அவை
7) எதையும் ஆராய்ந்துசெய்தல் வேண்டும்
8) கோபம் வருமிடத்துநிதானம் குறைந்தவிடும்
9) 1. ல
   2. ண
   3. ழ
   4. ன
10) நண்பிபாட்டுப் பாடினாள்
11) செய்திகளைவெளயிடுவதில் பத்திரிகைபிரதான இடம் வகிக்கிறது.
12) நான் பூக்கள் கொண்டுவருவேன்
13) என் ஊர் யாழ்பாணம்
14) மெஹிஎன்ன
15) 02
16) 04
17) please give me a pen
18) 01
19) 01
20) 02
21) 03
22) 01
23) 02
24) 12
25) ரூபாய் 50
26) 107
27) 03
28) 01
29) 01
30) 04
31) 02
32) 02
33) 01
34) 02
35) 01
36) 01
37) 04
38) 02
39) 
40) 59 ரூபாய்
41) 50 சதம்
42)
43) 27 kg 750 g
44) 4 m
45) 5/6
46) 20050
47)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 0 | 1 | 3 | 0 | 0 | 0 |

48) 4
49) 0.2
50) 02





# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

தரம்-5

பகுதி - I

வினாத்தாள் **25**

தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப கீழே உள்ள வினாக்களுக்கு விடைதருக

- **சோடிச் சொற்களுக்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க**

1. அறிவு–பொழுதுபோக்கு

 1  2  3

2. **ஒளி – வெப்பம்**

 1  2  3

- **தரப்பட்டுள்ள கவிதையைக் கொண்டு விடைஎழுதுக**

சிறகடிக்கும் பறவைகளின் கீத ஒலி கேட்கும்
வீசும் தென்றல் காற்று உடலுக்கு குளிர்ச்சிதரும்
மலரும் மலர்களோ எங்கும் மணம் பரப்பும்
அதிகாலைப் பொழுதோ இன்பம் ஊட்டும்

3. **கவிதையில் குறிப்பிடப்படுவது, காலையில் வீசும் காற்று**
   1.பறவைகளின் கீத ஒலியை கேட்க செய்யும் என்பதை
   2.உடலுக்கு குளிர்ச்சி தரும் என்பதை
   3.மலர்கள் மணம் பரப்பும் என்பதை
4. **காலையில் நடைபெறும் ஆனால் கவிதையில் குறிப்பிடப்படாத விடயம்**
   1.குளிர்ச்சியான தென்றல் காற்றுவீசுதல்
   2.நறுமணமுள்ள மலர்கள் மலருதல்
   3.ஒளி மெதுவாக பரவுதல்

- **வெற்றிடங்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க**

5. **வெற்றியினால் ................................ அடைந்த இரகசியங்கள் ................................**
   1.மகிழ்ச்சி –கைதட்டினர்
   2.களைப்பு –வாழ்த்தினர்
   3.இன்பம் - கண்ணீர் விட்டனர்

6. **சதுர வடிவமான மரக்கறித் தோட்டம் ஒன்றின் நீளம் 12 மீற்றர் ஆகும். அதன் எல்லை வழியே 3 மீற்றர் இடைத் தூரங்களில் கம்பித் தூண்கள்**


7. **பின்வருவனவற்றுள் ஒருவருடைய மனதிற்கு உவமானமாக அமையாதது எது?**
   1.வெண்ணெய்க்கட்டி போல் மென்மையானது
   2.சிக்குப்பட்ட நூற் பந்து போன்றது
   3.கல் போன்று கடினமானது
   4.மண் கட்டிபோன்று கடினமானது

8. **ஒரு அச்சமடைந்த சந்தர்ப்பத்தைக் காட்டுவதற்கு உகந்த உவமானம் பின்வருவனவற்றில் எது?**
   1.மான் குட்டிபோல் நடுங்கினார்
   2.புறாப் போன்று ஒலியெழுப்புகின்றது
   3.சிங்கம் போல் கர்ச்சிக்கின்றார்
   4.முயல் போன்று ஓடுகின்றார்

9. **ஒரு நகரத்தின் பேருந்துத் தரிப்பிடத்தில் மணிக்கூட்டு கோபுரத்திலிருந்து 60 கிலோமீற்றர் கிழக்கேயும் பொலிஸ் நிலையம் மணிக்கூட்டுக் கோபுரத்தி லிருந்து 80 மீற்றர் தெற்கேயும் பாடசாலை பொலிஸ் நிலையத்திலிருந்து 60 மீற்றர் கிழக்கேயும் உள்ளன. இதற்கேற்பபேருந்துத் தரிப்பிடம் இருப்பது பாடசாலையிலிருந்து**
   1.80 மீற்றர் தெற்கே 2.80 மீற்றர் வடக்கே
   3.60 மீற்றர் தெற்கே 4.60 மீற்றர் வடக்கே

10. **விஜயன் மோகனின் தந்தையாவார். மயூரன் விஜயனின் தம்பி ஆவார். கீதாமோகனின் ஓரேதங்கை ஆவார். கீதாவும் மயூரனும் சந்திக்கும்போது கீதா என்ன உறவுமுறையை கூறிக் கொண்டு மயூரனிடம் பேசுவார்?**
    1.சித்தப்பா 2.பெரியப்பா 3.மாமா 4.அண்ணா

- **ஒவ்வொன்றும் 1 சதுர cm பரப்பளவுள்ள 16 சதுரங்களைப் பின்வரும் உருகொண்டுள்ளது.**







11. **அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை சதுர சென்றிமீற்றர்?**
    1.8 2.10 3.12

12. **அதில் நிழற்றப்பட்டுள்ளபகுதியின் பரப்பளவுமொத்தப் பரப்பளவு மொத்த பரப்பளவில் என்ன பின்னம்?**
    1.1/4 2.1/2 3.3/4

13. **“அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு”என்ற பழமொழியின் கருத்து**
    1.ஒற்றுமையே பலம்
    2.விடாமுயற்சி பலன் தரும்
    3.பலசாலியும் தோல்வியும்

14. **‘மனநிறைவே ஒருவனுக்குச் சிறந்த செல்வமாகும்’ என்ற கருத்தைத் தரும் பழமொழி**
    1.பொறுத்ததார் பூமியாள்வார்
    2.போதுமென்ற மனமேபொன்செய்யும் மருந்து
    3.பேராசைபெருந் தரித்திரம்

- **தரப்பட்டுள்ள வாக்கியங்களிடையே மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க**

15. 1.பெற்றோரிடமும் ஆசிரியர்களிடமும் மிகப் பணிவாகப் பிள்ளைகள் நடந்துகொள்ளவெண்டும்
    2.எப்போதும் பிள்ளைகள் மிகப் பணிவாக நடந்துகொள்ள வேண்டும்
    3.பெற்றோரிடமும் ஆசிரியர்களிடமும் பிள்ளைகள் எப்போதும் மிகப் பணிவாக நடந்து கொள்ளவேண்டும்

16. 1.அங்குமிங்கும் இருந்தஒருமரத்தின் கிளைமீதுகாகம் பார்த்தது
    2.ஒரு மரத்தின் கிளைமீதுஇருந்தகாகம் அங்குமிங்கும் பார்த்தது
    3.அங்குமிங்கும் இருந்தகாகம் ஒருமரத்தின் மீதுபார்த்தது

- **ஆங்கில எழுத்துக்களுக்கு எதிரே இடப்பட்டுள்ள சொற்களுக்கேற்பச் சரியான வாக்கியம் அமையும் ஆங்கில எழுத்து வரிசையை எழுதுக**


17. **A பையை எடுத்துக்கொண்டு B-ஆடையை அணிந்து C-தந்தை**
    D-புறப்பட்டார் E-சைக்கிளில்
    1.A B C E D 2.C B A E D 3.C B D A E

18. **A–அக்கா B–தம்பிக்கு c- தங்கைக்கு**
    D -பாவாடையும் E–காற்சட்டையும் F–வாங்கினர்

# அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் 60 பேரை ரஷ்யா வெளியேற்றம்

60 தூதரக அதிகாரிகளை வெளியேற்றும் ரஷ்யாவின் முடிவு நியாயமற்றது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ரஷ்ய நாட்டின் இராணுவத்துறை உளவுப்பிரிவில் உயரதிகாரியாக பணியாற்றியவர் செர்ஜய் ஸ்கிர்பால் (வயது – 66). சில ரஷ்ய உளவாளிகளை இங்கிலாந்து உளவுத்துறையினரிடம் காட்டி கொடுத்தமைக்காக கடந்த 2004ஆம் ஆண்டு மொஸ்கோவில் இவர் கைது செய்யப்பட்டார். 13 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட அவரை 2010 ஆம் ஆண்டு பிரிட்டன் அரசு மீட்டு அடைக்கலம் கொடுத்தது.



பிரிட்டனில் வசித்து வந்த ஸ்கிர்பால், கடந்த 4ஆம் திகதி சாலிஸ்பரி நகரில் உள்ள ஒரு வணிக வளாகத்துக்கு வெளியே தனது மகள் யூலியாவு டன் (வயது – 33) மயங்கிய நிலையில் கிடந்தார். அவர்களது உடலில் மிகவும் கொடூரமான 'மர்ம விஷம்' ஏறியிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. இருவரும் மருத்துவமனையில் கோமா நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உளவுத்துறை அதிகாரி மற்றும் அவரது மகளுக்கு விஷம் ஏற்றியமை தொடர்பாக பல நாடுகள் ரஷ்யாவைக் கண்டித்து அந்நாட்டு தூதர்களை திரும்ப அனுப்பியுள்ளன. அமெரிக்காவும் சீயாட்டில் நகரில் செயல்பட்டு வந்த ரஷ்ய தூதரகத்தை மூடியதோடு, அந்நாட்டில் பணியாற்றி வந்த 60 ரஷ்ய தூதரக அதிகாரிகளை வெளியேறுமாறும் உத்தரவிட்டது.

இந்நிலையில், அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ரஷ்யாவில் உள்ள அமெரிக்க தூதரகங்களில் பணியாற்றி வரும் 60 அதிகாரிகளை நாட்டைவிட்டு வெளியேற்ற ரஷ்ய அரசு முடிவெடுத்துள்ளது. மேலும் செயிண்ட் பீட்டர்ஸ்போர்க்கில் உள்ள அமெரிக்க தூதரகத்தை மூடவும் ரஷ்ய அரசு முடிவெடுத்துள்ளதாக அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜய் லாவ் ரோவ் தெரிவித்துள்ளார். இந்த நிலையில், ரஷ்யாவின் இந்த நடவடிக்கை முற்றிலும் நியாயமற்றது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

## பபுவா நியூகினியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

பபுவா நியூகினியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவில் 6.9 ஆகப் பதிவாகியுள்ளது.

தென் மேற்கு பசுபிக் நாடுகளில் ஒன்று பபுவா நியூ கினியா. அங்கு உள்ளூர் நேரப்படி 7.25 மணியளவில் நில நடுக்கம் உணரப்பட்டுள்ளது. நிலநடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கின.

இதனால், மக்கள் பீதி அடைந்து வீடுகளை விட்டு வெளியே வந்தனர். நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் குறித்து தகவல்கள் இன்னும் வெளிவரவில்லை.

நிலநடுத்தைத் தொடர்ந்து கடலில் அலையின் சீற்றம் அதிகமாக இருந்தது. எனினும், சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை.

கடந்த பெப்ரவரி 26 ஆம் திகதி பபுவா நியூகினியாவில் 7.5 என்ற அளவுக்கு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் அங்குள்ள இங்கா மாகாணம் கடும் சேதம் அடைந்தது. நிலநடுக்கத்தை தொடர்ந்து மிகப் பெரிய நிலச்சரிவும் ஏற்பட்டது. இதில் ஒரு கிராமமே நிலச்சரிவில் சிக்கியதில் சுமார் 100 பேர் கொல்லப்பட்டனர்.

தற்போதைய நிலநடுக்கத்தின் மையப்புள்ளியில் இருந்து 300 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கடற்கரைப் பகுதிகளில் சுனாமி ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், அலைகள் வழக்கத்தை விட சுமார் ஒரு மீற்றர் வரை அதிகமாக மேலெழும்ப வாய்ப்புள்ளதாகவும் பசிபிக் சுனாமி எச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது.

பல பகுதிகளில் வீடுகள் இடிந்து விழுந்துள்ளன. சேத விவரங்கள் முழுமையாக தெரியவரவில்லை. இதனையடுத்து பப்புவா நியூ கினியா மற்றும் சொலமன் தீவுகளின் கடற்கரைப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்புடன் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## தாய்லாந்தில் பஸ்ஸில் தீ: 20 பேர் உடல் கருகிச் சாவு!



பாங்கொக், மார்ச் 31

தாய்லாந்தில் பஸ் தீ விபத்துக்குள்ளானது. இந்த தீ விபத்தில் சிக்கி 20 பேர் சம்பவ இடத்திலேயே கருகிப் பலியாகினர்.

தென் கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்று தாய் லாந்து. இந்த நாட்டின் மேற்குப் பகுதியில் மியன்மார் எல்லையை ஒட்டியுள்ள தாக் மாகாணத்தில் இருந்து தொழிற்சாலையில் பணி புரியும் தொழிலாளர்கள் பஸ் ஒன்றில் சென்று கொண்டிருந்தனர். தலைநகர் பாங்கொக் அருகே உள்ள தொழிற்சாலைக்குப் பயணிகள் சென்று கொண்டு இருந்த போது உள்ளூர் நேரப்படி அதிகாலை 1.30 மணியளவில் பஸ்ஸில் திடீரெனத் தீ பிடித்தது.

பஸ்ஸின் நடுப்பகுதியில் ஏற்பட்ட தீ மளமளவென பஸ் முழுவதும் பரவத் தொடங்கியது. இதில், பஸ்ஸில் இருந்த தொழிலாளர்கள் அலறி அடித்தபடி பஸ்ஸை விட்டு வெளியேற முயற்சித்தனர். 27 பேர் பஸ்ஸில் இருந்து வெளியேறிவிட்ட போதிலும் பின்பகுதியில் அமர்ந்து இருந்த 20 பேர் தீ விபத்தில் சிக்கி உயிரிழந்தனர். இந்தத் தீ விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்துள்ள தாய்லாந்துப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## சிரியாவிலிருந்து விரைவில் அமெ. இராணுவம் வாபஸ்!


### அதிபர் ட்ரம்ப் கூறுகிறார்

சிரியாவில் இருந்து அமெரிக்க ராணுவம் மிக விரைவில் வாபஸாகும் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஒகியோவில் அடிப்படை உள் கட்டமைப்பு விழா நடந்தது. அதில் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியவை வருமாறு :-

சிரியாவில் அமெரிக்க ராணுவம் முகாமிட்டு ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் போரிட்டு வருகிறது. தற்போது அவர்களை நரகத்தின் கதவைத்தட்டவைத்துஇருக்கிறோம். எனவே நாம் சிரியாவில் இருந்து வெளியேறுவோம்.

ஐ.எஸ். பயங்கரவாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்ட 100 சதவீத பகுதிகளையும் மீட்கும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. இதனால் சிரியாவில் இருந்து நமது ராணுவம் மிக விரைவில் வாபஸ் பெறப்படும்.



மத்திய கிழக்கு நாடுகளில் அமெரிக்க இராணுவம் முகாமிட்டு போரிட்டு வருகிறது. இதனால் அங்கு 7 டிரில்லியன் டொலர் (இந்தியப் பணத்தில் ரூ.450 லட்சம் கோடி) வீணாகச் செலவிடப்பட்டுள்ளது.

அங்கு நாம் ஒரு பள்ளியை கட்டுவோம். அவற்றை அவர்கள் வெடிவைத்து தகர்ப்பார்கள். நாம் மீண்டும் கட்டுவோம். அதை அவர்கள் இடிப்பார்கள். நாம் மறுபடியும் கட்டுவோம். இதேபோன்று அங்கு தொடர்ந்து நடைபெறுகிறது.

ஒகியோ, பென்சில்வேனியா அல்லது லோவாவில் பள்ளிகள் கட்டினால் பயனுள்ளதாக இருக்கும். ஆனால் மத்திய கிழக்கு நாடுகளில் 7 டிரில்லியன் டொலர் (ரூ. 450 லட்சம் கோடி) வீண டித்துள்ளோம்.

பெரும்பாலான எண்ணெய் வளத்தை ஐ.எஸ். பயங்கரவாதிகள் பெறுகின்றனர். அவர்களுக்காக நாம் ஏன் அங்கு பணத்தை முதலீடு செய்ய வேண்டும்? அது முட்டாள்தனமானது. நமது ராணுவம் மிக பலம் வாய்ந்தது. அது மீண்டும் வலுப்பெற்றுள்ளது.

நாம் நமது நாட்டில் வலுவான கட்டுமானத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்கு குடியரசு மற்றும் ஜனநாயக கட்சிகளைச் சேர்ந்த எம்.பிக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். – என்றார்.

## புகழ்பெற்ற நூறு பிரமுகர்கள் 'டைம்' வெளியிட்ட பட்டியல்

### மோடி,புடின், ட்ரம்ப் ஆகியோரும் உள்ளனர்

அமெரிக்காவின் புகழ் பெற்ற 'டைம்' இதழ் வெளியிட்ட புகழ்பெற்ற 100 பேர் பட்டியலில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இடம்பெற்றுள்ளார்.

'டைம்' இதழ் சார்பில் ஆண்டுதோறும் அந்த ஆண்டுக்கான சிறந்த மனிதர் தேர்வு செய்யப்பட்டு வருகிறார்கள். இதற்கு முன்னோட்டமாக உலகம் முழுவதும் பல்வேறு துறைகளில் பிரபலமான 100 பேர் பட்டியலை அந்த இதழ் வெளியிடும்.

அதன்படி இந்த ஆண்டுக்கான சிறந்த மனிதரை தேர்வு செய்வதற்காக உலகம் முழுவதும் பிரபலமான 100 பேர் பட்டியலை 'டைம்' இதழ் வெளியிட்டுள்ளது. இதில் பிரதமர் நரேந்திர மோடி, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மைக்ரோசொப்ட் தலைமை செயல் அதிகாரி சத்யநாதெள்ள ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், சீன அதிபர் ஜி ஜின் பிங், வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன், ட்ரம்பின் மகள் இவாங்கா, பேஸ்புக் நிறுவனர் மார்க் ஜுகர்பெர்க், பிரிட்டன் இளவரசர் வில்லியம், அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பராக் ஒபாமா, கால்பந்து வீரர் ரொனால்டோ உள்ளிட்டோரின் பெயர்களும் பட்டியலில் இடம் பிடித்துள்ளன.

உலகம் முழுவதும் இருந்து டைம் இணையத்தில் பதிவு செய்யப்படும் வாக்குகள் மற்றும் டைம் இதழின் ஆசிரியர் குழு பரிசீலனை அடிப்படையில் 100 பேரில் ஒருவர் இந்த ஆண்டுக்கான சிறந்த மனிதராக தேர்வு செய்யப்பட உள்ளார்.

# இந்தியாவில் மீள மூன்றாவது அணி



## மம்தா, சந்திரசேகராவ், சந்திரபாபு நாயுடு ஆதரவு

திரிபுரா, மேகாலயா, நாகாலாந்து மாநில தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து அகில இந்திய அளவில் 3ஆவது அணி அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருகிறது. சமீபத்தில் நடைபெற்ற மக்களவைத்தொகுதி இடைத்தேர்தல்களிலும் பாரதீய ஜனதாக் கட்சி பலத்த அடி வாங்கியது. இதனையடுத்து பாரதீய ஜனதா, காங்கிரஸ் அல்லாத 3ஆவது அணி அமைக்க, தெலுங்கானா முதல்வர் சந்திரசேகர ராவ், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஆகியோர் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்தசிலநாள்களுக்கு முன் திமுகசெயல்தலைவர்மு.க.ஸ்டாலினுடன் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி இது குறித்து தொலைபேசி மூலம் பேசினார். அப்போது அகில இந்திய அளவில் 3ஆவது அணி அமைக்க ஆதரவு அளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

மத்திய அரசுக்கு எதிராக ஒரு புறம் எதிர்க்கட்சிகள் நம்பிக் கையில்லாப் பிரேரணையை கையில் எடுத்துள்ள நிலையில் மறுபுறம் திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி 3ஆவது அணி அமைக்கும் முயற்சியில் தீவிரம் காட்டி வருகிறார். 4 நாள் டெல்லி சென்று தங்கி பல்வேறு கட்சித் தலைவர்களைச் சந்தித்து தீவிர ஆலோசனை நடத்தினார்.

இந்நிலையில் ஏப்ரல் 10 மற்றும் 11 ஆகிய திகதிகளில் மம்தா பானர்ஜி சென்னைக்கு வர உள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. மூன்றாவது அணியில் சேர ஏற்கனவே தி.மு.க.விற்கு அழைப்பு விடுத்துள்ள மம்தாவின் சென்னை வருகை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

சென்னை வரும் மம்தா பானர்ஜி தி.மு.க தலைவர் கருணாநிதியை நேரில் சந்தித்து நலம்விசாரிப்பார் என்றும்,தி.மு.க. செயல்தலைவர்மு.க.ஸ்டாலினுடன் அரசியல் நிலைவரம் குறித்து ஆலோசனைநடத்துவார்என்றும் எதிர்பார்க் கப்படுகிறது


இந்த விவரங்கள் பா.ஜ.க., மற்றும் காங்கிரஸ் தலைவர்களை எட்டியுள்ளது. இதையடுத்து, காங்கிரஸ் தரப்பு, தமிழகத்தில் தி.மு.க.வைத் தனது கூட்டணியில் இருந்து விட்டு விடக் கூடாது என்பதில் தீவிரமாக இருக்கிறது.

இதற்காக, காங்கிரஸ் தலைவர் ராகுலிடம் பேசிய காங்கிரஸ் தலைவர்கள், நீங்களே தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலினிடம் பேசுங்கள். தொடர்ந்து தொடர்பிலும் இருங்கள் என யோசனை சொல்லியிருக்கின்றனர்.

இதற்கிடையில், தி.மு.க., தலைவர் கருணாநிதியை உடல் நிலைகுறித்துவிசாரிக்கவருவது போல வந்து, தி.மு.க.,வுடன் நெருக்கத்தை அதிகப்படுத்திக் கொள்ளலாம் எனவும் ராகுலிடம் யோசனை சொல்ல, அதை அவரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார் எனக் கூறப்படுகிறது. விரைவில், கருணாநிதியைச் சந்திக்க ராகுல் தமிழகம் வருவார் என, காங்கிரஸார் கூறுகின்றனர்.

# உ.பியில் 100 குரங்குகள் அடுத்தடுத்து உயிரிழப்பு

## விஷம் வைக்கப்பட்டதாகச் சந்தேகம்



உத்தரப்பிரதேசத்தில் ஒரு வாரத்திற்குள் 100க்கும் மேற்பட்ட குரங்குகள் இறந்துள்ளமை குறித்து வனத்துறை அதிகாரிகள் விசாரணை செய்து வருகின்றனர்.

உத்தரப்பிரதேசத்தில் அம்ரோகா மாவட்டத்தில் உள்ள டபார்சி கிராமத்தில் கடந்த ஒரு வாரத்திற்குள் 100 க்கும் அதிகமான குரங்குகள் இறந்துள்ளன எனக் கூறப்படுகிறது.

ஆரம்பத்தில் கிராமத்தில் உள்ளவர்கள் கூறிய தகவல்களின்படி பார்க்கும்போது இந்த குரங்குகளுக்கு விஷம் வைக்கப் பட்டு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இருப்பினும், குரங்குகளின் மரணத்திற்கு உண்மையான காரணம் இன்னும் தெரியவரவில்லை. பிரேத பரிசோதனையின் அறிக்கை பெறப்பட்ட பிறகுதான் உண்மையான காரணம் தெரியவரும் என்று கூறப்படுகின்றது. இந்த விவகாரம் குறித்து வனத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தமிழக எம்.பியான மனைவியை கொல்ல முயன்றாராம் கணவர்

## ஈரோடு கோயிலில் சம்பவம்



திருப்பூர் தொகுதியின் அ.தி.மு.கழகத்தின் எம்.பி.சத்யபாமாவை அவரது கணவர் கொலை செய்ய முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டி பாளையம் ஸ்ரீநகரில் திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியபாமா (வயது - 45) வசித்து வருகிறார். திருப்பூர் லோக்சபா தொகுதி எம்.பி.யாக உள்ளவர் அவர்.அவருக்கும் கணவர் வாசுவுக்கும் கடந்த பல ஆண்டுகளாகவே தகராறு இருந்து வருகிறது. இந்நிலையில் அவரைக் கணவர் வாசு கத்தியால் தாக்கி கொலை செய்ய முயற்சித்தார் எனச் சத்தியபாமாவின் சகோதரர் சண்முகபிரபு கோபிசெட்டி பாளையம் காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

புகாரின் பேரில் சத்தியபாமாவின் கணவர் வாசு மீது கொலை முயற்சி செய்தார் எனக் காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்துள்ளனர். சத்தியபாமாவுக்கும், வாசுக்கும் 1990ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. இவர்களுக்கு ஒரு மகன் உள்ளார். கருத்து வேறுபாடு காரணமாக கடந்த 2016ஆம் ஆண்டு முதல் இவர்கள் இருவரும் பிரிந்து வாழ்கின்றனர். இந் நிலையில் கணவர் வாசு, சத்தியபாமாவைக் கொலை செய்ய முயற்சித்தார் என வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# ஈழத் தமிழர்களுக்காக எப்போதும் குரல் எழுப்பிய போராளி நடராஜன்

## நினைவேந்தல் நிகழ்வில் நெடுமாறன் இரங்கலுரை



ம.நடராஜன் பதவிக்கு ஆசைப்படாமல் பலருக்கு ஏணியாக இருந்தவர், ஈழத் தமிழர்களுக்காக என்றும் குரல் எழுப்பியவர் என அவருடைய நினைவேந்தல் நிகழ்ச்சி யில் பங்கேற்ற தலைவர்கள் புகழாரம் சூட்டினர்.

'புதிய பார்வை' ஆசிரியரும் சசிகலாவின் கணவருமான ம.நடராஜனின் நினைவேந்தல் படத்திறப்பு நிகழ்ச்சி நேற்றுக் காலை தஞ்சை தமிழரசி திருமண மண்டபத்தில் நடந்தது. நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய உலகத் தமிழர் பேரமைப்பு தலைவர் பழ.நெடுமாறன் பேசும் போது கூறியவை வருமாறு:–

மறைந்த ம.நடராஜன் எந்தப் பதவிக்கும் ஆசைபடாதவர். மற்றவர்கள் பதவியில் ஏறுவதற்கு ஏணியாக இருந்தவர்.

மொழிப் போராளியாக வாழ்க்கையை தொடங்கி, போராடிய மாணவர்களுக்கு தளபதியாக திகழ்ந்தார். வாழ்நாளின் இறுதி வரைக்கும் மொழி உணர்வு மிக்கவராக வாழ்ந்தார். ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கு வரலாறாக திகழ்ந்த இவர் இது எதையும் எதற்காகவும் ஆசைப்பட்டு செய்யவில்லை.

ஈழத்தமிழர்கள் படுகாயமடைந்த போதும், விடுதலை புலிகளின் மருத்துவ சிகிச்சைக்கும் இவர் பாதுகாப்பாக இருந்து உதவிகள் செய்தார். முள்ளிவாய்க்கால் போராட்டங்கள் அனைத்திலும் இவரது பங்கு இருந்தது. ஒரு போராட்டத்தில் பங்கு கொண்டு நானும், நடராஜனும் கடலூர் சிறைக்குச் சென்றோம். தமிழ் மண்ணில் முள்ளிவாய்க்காலுக்கு நினைவுச் சின்னம் அமைக்க வேண்டும் என்று நாங்கள் முடிவெடுத்தோம்.

அப்போது சொந்த நிலத்தை தந்து தஞ்சையில் முள்ளிவாய்க்கால் அமைப்பதற்கு முழுமையாக துணை நின்றார். எங்கு சென்றாலும் முள்ளிவாய்க்கால் முற்றத்துக்கு நினைவாக ஒன்று வாங்கி வருவார். அவர் மொழி, இனம், நாடு என்று இறுதி வரை கடைபிடித்ததை நாமும் பின்பற்றுவதே அவருக்கு செலுத்தும் வீரவணக்கம்.

– இவ்வாறு அவர் கூறினார்.

பொதுவுடைமைக் கட்சி கட்டுப்பாட்டுக்குழு தலைவர் ஆர்.நல்லக்கண்ணு பேசும்போது கூறியவை வருமாறு:–

கடந்த 10 ஆண்டுகளாக நடராஜனும், நானும் நெருங்கிய நட்பு பழகியவர்கள். மொழிக்காக தன்னை அர்ப்பணித்தார். உலக நாடுகள் தமிழர்களையும், நம் நாடு பற்றியும் சிந்திக்க வைக்க இவர் அறிஞராக வாழ்ந்தார்.

முள்ளிவாய்க்கால் முற்றத்திற்கு எதை எங்கு வைப்பது. எப்படி சிலைகள் அமைக்க வேண்டும் என்று அவர் கலந்து பேசி செய்தார். கல்லணைக்கு வரும் மக்கள், பெரியகோவிலுக்கு வரும் மக்கள், முள்ளிவாய்க்கால் முற்றத்திற்கும் வருகிறார்கள். இதுவே அவரது வரலாற்று சின்னமாக அமைந்துள்ளது.

புதிய பார்வை இதழில் அரசியல் கருத்துகளையும், இலக்கிய கருத்துகளையும் வேறுபாடு பார்க்காமல் படைத்தார். அவர் எழுதிய பல எழுத்துக்கள் பல நூலக பதிப்பாகி எத்தனையோ தலைவர்களிடத்தில் உள்ளது. உலக தமிழ் மக்களின் வரலாறு. மொழி வரலாறு போன்று மக்களின் உணர்வு பூர்வமான அவரது நூல் தொகுப்புகள் நான் இங்கு வரும் போதெல்லாம் என்னிடத்திலும் கொடுத்துள்ளார்.

எங்கள் வயதுக்கும் அவருக்கும் வித்தியாசம் உண்டு. இருந்தாலும் அவரது நூல்களும், முள்ளிவாய்க்கால் முற்றமும் அவர் மறைந்த பிறகு அவருடைய அடையாளமாகத் திகழும்.

திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி பேசும் போது கூறியவை வருமாறு:–

தமிழர் போராளி என்பது மட்டும் இல்லாமல் தமிழின போராளியாக திகழ்ந்தார். பெரியார், அண்ணாவை தன்னுடைய வாழ்க்கையாக வாழ்ந்து வந்தார்.

எத்தனையோ பேருக்கு இவரது தோள் பயன் பட்டது. எல்லாரையும் பதவியில் நிர்ணயிக்கக் கூடிய இடத்தில் இவர் இருந்தார். அரசியலில் விஞ்ஞானத்தை படைத்து புவி கவர்ச்சியை ஏற்படுத்தினார். இவர் மறைய வில்லை. நம் நெஞ்சங்களில் உறைந்து உள்ளார். தற்போது உள்ள மிக முக்கிய கட்டத்தில் அவர் இல்லாதமை நமக்கு வருத்தம் அளிக்கிறது.

இவரது மறைவு பெரியார் கூறியது போன்று இயற்கையின் கோணல் புத்தி என்று கூறலாம். அவர் மறையவில்லை என்பதற்கு வரலாறு முள்ளிவாய்க்கால். கடைசிவரை போராடிகொண்டே இருந்தார். கடைசியில் நோயோடு போராடினார். இன்று படமாக மாறியவர் நமக்கு இன மொழிக்கு பாடமாக வாழ்கிறார். அவர் காணவிரும்பிய மானமுள்ள, அறிவுள்ள சமுதாயத்தை நாம் கொண்டு வருவோம்.

– இவ்வாறு அவர் கூறினார்.

காலைக்கதிர்
Kalaikkathir



# பெரிய தவறு செய்த விட்டேன் என்னை மன்னித்து விடுங்கள்




‘பந்தை தேசப்படுத்திய விவகாரத்தில் பெரிய தவறு செய்து விட்டேன்; மன்னித்து விடுங்கள்’ என்று ஸ்டீவன் ஸ்மித் கண்ணீர் மல்கக் கூறினார்.

**சிக்கிய ஆஸ்திரேலியர்கள்**

கேப்டவுனில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3ஆவது டெஸ்டின் 3ஆவது நாளில் ஆஸ்திரேலிய தொடக்க ஆட்டக்காரர் கேமரூன் பான்கிராப்ட் தனது பேண்ட் பாக்கெட்டில் மறைத்து வைத்திருந்த மஞ்சள் நிற சொரசொரப்பு காகிதத்தால் பந்தை சேதப்படுத்த முயற்சித்தமையும், இதற்கு ஆஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்டீவன் ஸ்மித், துணை அணித் தலைவர் டேவிட் வோர்னர் ஆகியோர் மூளையாக செயல்பட்டமையும் அம்பலமாகின. ஆஸ்திரேலிய வீரர்களின் மோசடி, உலக கிரிக்கெட் அரங்கில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. தவறை வெளிப்படையாக ஒப்புக்கொண்ட ஸ்டீவன் ஸ்மித்தின் அணித் தலைவர் பதவி பறிபோனது.

இது குறித்து விசாரணை நடத்திய ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை ஸ்டீவன் ஸ்மித், டேவிட் வோர்னர் ஆகியோருக்கு சர்வதேச மற்றும் உள்ளூர் போட்டிகளில் விளையாட தலா ஓராண்டு தடையும், பான்கிராப்ட்டுக்கு 9 மாதங்கள் விளையாட தடையும் விதித்தது. அத்துடன் தடைகாலம் முடிந்து மேலும் ஓராண்டுக்கு ஸ்டீவன் ஸ்மித்தின் பெயர் அணித்தலைவர் பதவிக்கு பரிசீலிக்கப்படாது என்றும் அந்த நாட்டு கிரிக்கெட் சபை கூறியுள்ளது.

**கண்ணீர் மல்க ஸ்மித் பேட்டி**

இந்த நிலையில் தென்னாபிரிக்காவில் இருந்து தாயகம் திரும்பிய ஆஸ்திரேலிய முன்னாள் அணித் தலைவரான 28 வயதான ஸ்டீவன் ஸ்மித் சிட்னி விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் நிருபர்களை சந்தித்தார். அப்போது குற்ற உணர்வில் வெதும்பிய அவர் தன்னை மன்னித்து விடும்படி கூறி கண்ணீர் விட்டு தேம்பி தேம்பி அழுதார். அருகில் நின்ற அவரது தந்தை பீட்டர் அவரைத் தேற்றினார்.

கண்ணீர் மல்க 5 நிமிடங்கள் பேசிய ஸ்டீவன் ஸ்மித், தான் தயாரித்து வைத்திருந்த அறிக்கையை தழுதழுத்த குரலில் படித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு:–

அணியின் சக வீரர்களும், உலகம் முழுவதும் உள்ள கிரிக்கெட் ரசிகர்களும், என்னால் கோபமும், ஏமாற்றமும் அடைந்த ஆஸ்திரேலிய ரசிகர்கள் அனைவரும் என்னை மன்னித்து விடுங்கள். கேப்டவுன் டெஸ்டில் நடந்த சம்பவத்துக்கு ஆஸ்திரேலிய அணியின் தலைவன் என்ற முறையில் நானே முழு பொறுப்பு ஏற்கிறேன். வேறு யாரையும் குற்றம் சாட்டப் போவதில்லை. அணியை வழிநடத்தியதில் எனது தலைமைப்பண்பு தோற்று விட்டது. முடிவு எடுப்பதில் நான் மிக மோசமான தவறைச் செய்துவிட்டேன். அதற்குரிய விளைவை இப்போது புரிந்துகொள்ள முடிகிறது. என்னால் ஏற்பட்ட பாதிப்பை சரிசெய்ய என்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்வேன்.

**மீண்டு வருவேன்**

இதன் மூலம் ஏதாவது நல்ல விளைவு ஏற்பட்டால், அது மற்றவர்களுக்கு ஒரு பாடமாக அமைந்தால், அந்த மாற்றத்திற்குரிய கருவியாக நான் இருப்பேன் என்று நம்புகிறேன். நான் இழைத்த தவறு வாழ்நாள் முழுவதும் வருத்தத்தை அளித்துக் கொண்டே இருக்கும் என்பதை அறிவேன். இப்போது மனதளவில் நொறுங்கிப் போய் உள்ளேன்.

ஆஸ்திரேலிய அணிக்காக பங்கேற்றமையும், அணித் தலைவர் பதவி வகித்தமையும் எனக்கு கிட்டிய மிகப்பெரிய கௌரவமாகும். இந்த உலகில் கிரிக்கெட் மிகச் சிறந்த விளையாட்டு. அது தான் எனது வாழ்க்கை. அது திரும்ப கிடைக்கும் என்று நம்புகிறேன்.

காலப்போக்கில் மக்கள் என்னை மன்னிப்பார்கள். இழந்த பெருமையையும் என்னால் மீட்டெடுக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. மீண்டும் ஒரு முறை தவறுக்காக வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு தெரிந்தவரை இதற்கு முன்பு இப்படியொரு சம்பவம் (பந்தை தேசப் படுத்துதல்) நடந்ததில்லை. முதல் முறையாக நடந்து விட்டது. மீண்டும் ஒரு போதும் இது போன்று நடக்காது என்று உறுதி அளிக்கிறேன்.

– இவ்வாறு ஸ்டீவன் ஸ்மித் கூறினார்.

**வோர்னர், பான்கிராப்ட் வேதனை**

பந்தைச் சேதப்படுத்தும் சதி திட்டத்தை வகுத்து, அதை களத்தில் செயற்படுத்த முயற்சித்த டேவிட் வோர்னரும் மௌனத்தை கலைத்துள்ளார். சமூக வலைதளமான இன்ஸ்டாகிராமில் அவர் செய்துள்ள பதிவில் “நான் எனது பங்கிற்கு மன்னிப்பு கேட்டு பொறுப்பு ஏற்கிறேன். இந்த விளையாட்டுக்கும், அதன் ரசிகர்களுக்கும் ஏற்படுத்திய துன்பத்தைப் புரிந்து கொள்கிறேன். சிறுவயதில் இருந்தே நான் மிகவும் நேசித்த கிரிக்கெட்டுக்கு களங்கத்தை ஏற்படுத்தி விட்டேன். என்னை திடப்படுத்திக் கொள்ள எனது குடும்பத்தினரிடமும், நண்பர்களிடம் ஒரு சில நாள்கள் செலவிட உள்ளேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

25 வயதான பான்கிராப்ட் நிருபர்களிடம் கூறுகையில், “ மறைத்து வைத்திருந்த மஞ்சள் நிற காகிதம் குறித்து நடுவர்கள் கேட்டபோது பொய் சொல்லி விட்டேன். அந்தச் சூழலில் நான் மிகவும் பயந்து போனேன். எனது நடத்தைக்காக வேதனை அடைகிறேன். மன்னிப்பு கேட்கிறேன். இந்த தவறுக்காக எனது வாழ்க்கை முழுவதும் நான் வருத்தப்பட வேண்டி இருக்கும்” – என்றார்.

# விஜயரட்ணம் ஞபகார்த்த கிரிக்கெட்












விஜயரட்ணம் ஞாபகார்த்தமாக ஞானம்ஸ் பெயின்ட் ஸ்தாபனத்தார் முதன் மறையாக நடத்தும் 20 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டி நேற்று யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்மானது. இன்றும், நாளையும் அடுத்த சனியன்றும் அதன் ஆட்டங்கள் தொடர்ந்து நடைபெறும். இத்தொடர் நான்கு முனைப் போட்டியாக அமைந்துள்ளது. ஜொலிஸ்ரார், கே.சி.சி.சி. யாழ்.சென்றல். திருநெல்வேலி சி.சி அணிகள் பங்குபற்றுகின்றன. என்பது குறிப்பிடத் தக்கது. இச் சுற்றுப் போட்டியின் மிக முக்கிய நோக்கம் இளம் துடுப்பாட்ட வீரர்களைக் களத்துகுக் கொண்டு வருதல். அவர்களின் சிறந்த பெறுபேறுகளை துடுப்பாட்ட அமைப்புக்களின் கவனத்துக்குக் கொண்டு வருதல், அவர்களின் திறமைளை மேலும் வலுப்படுத்தல் ஆகியன என்று தெரிவிக்கப்பட்டது. இத்தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் 08.04.2018 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

# பயிற்சியாளர் லீமானும் பதவி விலகுவதற்கு முடிவு



ஆஸ்திரேலிய அணியின் பயிற்சி யாளர் பொறுப்பில் இருந்து தாம் விலகுகின்றார் என லீமான் அறிவித்திருந்தார்

பந்தை சேதப்படுத்திய பிரச்சினையால் ஒட்டு மொத்த ஆஸ்திரேலிய அணியே நிலைகுலைந்து போய் விட்டது. ஏற்கனவே ஸ்டீவன் ஸ்மித், டேவிட் வோர்னர், பான்கிராப்ட் ஆகியோர் ஓரங்கட்டப்பட்ட நிலையில், அந்த அணிக்கு மேலும் ஓர் இடியாக தலைமைப் பயிற்சியாளர் டேரன் லீமான் பொறுப்பில் இருந்து விலகப் போகிறேன் என அறிவித்துள்ளார்.

48 வயதான லீமான் நேற்றுமுன்தினம் ஜோகன்னஸ்பர்க்கில் நிருபர்களிடம் கண்ணீர் மல்க பேசினார். ‘‘தென்னாபிரிக்காவுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியே நான் தலைமை பயிற்சியாளராக இருக்கும் கடைசி போட்டியாகும். அதன் பிறகு பயிற்சியாளர் பொறுப்பில் இருந்து விடைபெறுகிறேன். ஊடகங்களின் முன்னிலையில் ஸ்டீவன் ஸ்மித் கண்ணீர்விட்டு அழுததை பார்த்து நான் உண்மையிலேயே நொந்து போய் விட்டேன். அணியின் மற்ற வீரர்களும் வேதனைக்குள்ளானார்கள். செவ்வாயன்று பயிற்சியாளர் பதவியை ராஜினாமா செய்ய மாட்டேன் என்று சொன்னேன். ஆனால் நேற்று முன்தினம் ஸ்டீவன் ஸ்மித், கேமரூன் பான்கிராப்ட் எந்த அளவுக்கு மனரீதியாக காயமடைந்திருக்கிறார்கள் என்பதை பார்த்த பிறகு, பயிற்சியாளர் பதவியை விட்டு விலகுவது மட்டுமே நியாயமான முடிவாக இருக்கும் என்ற நிலைக்கு நான் வந்து விட்டேன். இந்த சம்பவம் நடந்த நாளில் இருந்து என்னால் நிம்மதியாக தூங்க முடியவில்லை’ என்றார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை அணியின் நிலைமையை முழுமையாக ஆராய்ந்து, மறுபடியும் மக்களின் நம்பிக்கையை பெறும் வகையில் தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்றும் லீமான் கேட்டுக் கொண்டார்.

லீமான் 5 ஆண்டுகள் ஆஸ்திரேலிய அணியின் பயிற்சியாளராக இருந்துள்ளார். அவரது பயிற்சியின் கீழ் ஆஸ்திரேலிய அணி 2015ஆம் ஆண்டு உலக கோப்பையை கைப்பற்றியதும், இரண்டு முறை ஆஷஸ் தொடரை வசப்படுத்தியதும் குறிப்பிடத்தக்க வெற்றிகளாகும்.

## யுத்தக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர் மாநாட்டில் அக் கட்சியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர் மு.றெமிடியஸ் இவ்வாறு தெரிவித்தார்.

“ஈ.பி.டி.பி. கட்சியின் தலைமை யுத்தக் குற்றம் புரிந்தது என்று சிறிதரன் கருத்து வெளியிட்டுள்ளார். முதலில் அவருக்கு யுத்தக் குற்றம் என்றால் என்ன என்று தெரிந்திருக்க வேண்டும்.

“அவரைக் கேட்டால் தான் இறுதிப்போரில் முள்ளிவாய்க்கால் வரைக்கும் சென்று வந்தவர் என்று சொல்லுகின்றார். ஆனால் கிளிநொச்சி இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வந்த போது யுத்த பிரதேசத்தில் நின்ற தொண்டு நிறுவனங்களுடன் சேர்ந்து முதன்முதலில் சிறிதரனும் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டார்.

“அவ்வாறு சிறிதரன் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் தான் கேணல் தீபன் உட்பட ஏராளமான தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் ஒரே நேரத்தில் கொல்லப்பட்ட சம்பவம் அரங்கேறியது.

“அவருடைய கடந்த காலத்தைப் பற்றிப் பேசினால் வெட்கக்கேடாக இருக்கும்.” – என்று றெமிடியஸ் மேலும் தெரிவித்தார்.

## அபாண்டமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீண் பழி சுமத்திவந்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் உள்ளூராட்சிமன்றங்களில் ஆட்சியமைப்பதற்காக எங்களை நாடியுள்ளனர். இதன்மூலம் அப்பொய் குற்றச்சாட்டுக்களில் இருந்து எங்களை அவர்கள் விடுவித்துள்ளமையுடன் அதனை கூட்டமைப்பினர் தங்களின் வாயாலேயே சொல்லியும் உள்ளனர் என ஈ.பி.டி.பி. தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்கள் வழங்கிய ஆதரவின் அடிப்படையில் ஈ.பி.டி.பி. கட்சியும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள்தான் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டுள்ளது என்பதே வெளிப்படையான உண்மை. மக்கள் தீர்ப்பின் பிரகாரம் காலம் எங்களை விடுதலை செய்துள்ளது. – என்று அக் கட்சியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர்களான மு.றெமிடியஸ், வி.குகேந்திரன் (ஜெகன்) ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர். இவ்விடயம் தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

உள்ளூராட்சி மன்றங்களின் சில சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி அமைப்பதற்கு ஈ.பி.டி.பி. கட்சி ஆதரவு வழங்கியமையை வைத்து அவர்களுடன் எமது கட்சி கூட்டாட்சி அமைத்துவிட்டது என்று எண்ண வேண்டாம். ஈ.பி.டி.பி. கட்சி எப்போதும் கொள்கைகளை மாற்றிக் கொள்ளாது. தொடர்ந்தும் அதன் கொள்கையின் வழியிலேயே பயணிக்கும்.

ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அரசியல் காழ்புணர்ச்சிகாரணமாக அவ்வப்போது பொய்யான குற்றச்சாட்டுக்களை முன் வைத்து ஈ.பி.டி.பி. மீது வசைபாடுவதையே வேலையாக செய்பவர்கள். இதனை எமது கட்சியின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா பல தடவைகள் கூறியுள்ளார்.

ஈ.பி.டி.பி. மீது யுத்தக்குற்றம், ஒட்டுக்குழு, தமிழ் உறவுகள் காணாமல் போகச் செய்யப்பட்டதற்கு காரணமானவர்கள் என்று பல குற்றச்சாட்டுக்களை முன் வைத்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு, இன்று உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பதற்குஎமதுகட்சியின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பியும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள்தான் என்பதை ஏற்றுக் கொண்டு, இதுவரை காலமும் ஈ.பி.டி.பி. கட்சி மீது சுமத்தி வந்த பொய்யான குற்றச்சாட்டுக்களில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எங்களை விடுவித்துள்ளது. நாமும் தூய்மையான கரங்களை உடையவர்கள் தான் என்ற உண்மையை கூட்டமைப்பு இன்று ஏற்றுக் கொண்டுள்ளது. – என்றனர்.

## சந்திரிகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகை தரவுள்ளார்.

இன்று காலை யாழ். வருகின்ற சந்திரிகா யாழ். மாவட்டச்செயலகத்தில் நடைபெறும் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளார். இந் நிகழ்வில் அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் மத்திய வங்கி ஆளுநர் உட்பட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து நாளை ஞாயிற்றுக்கிழமை அரியாலை, மருதங்கேணி, காரைநகர் உள்ளிட்ட பல இடங்களுக்கும் சென்று பல்வேறு நிகழ்வுகளிலும் அவர் கலந்து கொள்வார். அதேபோன்று மறுநாள் திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்டத்திற்குச்சென்று அங்கும் பல்வேறு இடங்களில் பல நிகழ்வுகளில் கலந்து கொள்வார்.

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளாத வகையில் இந்த அரசிற்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகின்றார் எனக் கூட்டு எதிரணியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார யாழில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயமொன்றை மேற்கொண்டிருந்த வாசுதேவ நாணயக்கார வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். அங்கு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலையே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

திருமண நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதற்காகவே யாழ்ப்பாணத்திற்கு வந்திருக்கின்றேன். அதே நேரம் இங்கு அரசியல் வேலைகளும் எனக்கிருக்கின்றன. யாழ்ப்பாணம் உட்பட வடக்கில் ஏற்பட்டிருக்கின்ற அரசியல் மாற்றங்களும் நன்றாக எனக்குத் தெரியும்.

குறிப்பாக தற்போதைய மைத்திரி – ரணில் கூட்டு அரசாங்கத்தால் கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். அதனால் அவர் அரசாங்கத்திற்கு வேலை செய்து வருகின்றார். அவருடைய இத்தகைய செயற்பாடுகளை வடக்கில் மக்கள் ஏற்காத நிலையிலும் அவர் அரசிற்கு ஆதரவை வழங்கிச் செயற்பட்டு வருகின்றார்.

இதே வேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தற்போது மும்முனைத்தாக்குதல்கள் இடம் பெற்று வருகின்றன. அதாவது அவரது தவறான செயற்பாடுகள் காரணமாக அவர் தலைமைத்துவம் வகிக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சி, கூட்டு எதிரணி, அரச கட்சி ஆகியன அவருக்கு எதிராக எழுந்திருக்கின்றன. – என வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்தார்.

## ஈழத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுகுறித்து ஐ.நா. வெளியிட்ட நியமன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

2012 ஆம் ஆண்டு முதல் ஐ.நாவின் அரசியல் விவகாரத் துறை உதவிச் செயலாளராக இருந்துவரும் ஜெப்ரி பெல்ட்மெனுக்கு அடுத்து, றோஸ்மேரி இந்த பதவியில் பொறுப்பேற்கவுள்ளார்.

ஐ.நாவுக்கான முன்னாள் அமெரிக்க தூதரான றோஸ்மேரி டிகார்லோ, 35 ஆண்டுகளுக்கும் மேலாக, பொதுப்பணி மற்றும் கல்வித்துறையில் பணியாற்றியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் பாலின வேறுபாடுகள் இன்றி, அனைவரும் சமமானவர்கள் என்ற கருத்தை முன்னிறுத்தி இந்த நியமனம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், ஐ.நா. வரலாற்றில், இந்த மிக உயர்வான பதவியில் பொறுப்பேற்கவுள்ள முதல் பெண் றோஸ்மேரி டிகார்லோ என்பது குறிப்பிடத்தக்கது – என்றுள்ளது.

இதேவேளை தற்போது அரசியல் விவகாரத்துறை உதவிச் செயலாளராக இருந்துவரும் ஜெப்ரி பெல்ட்மெனும் இலங்கை போர்க்குற்ற விவகாரத்தில் அதிக கரிசனை கொண்டுள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை நிலைமை தொடர்பில் அண்மையில் நேரில் வந்து ஆராய்ந்த பெல்ட்மனை, தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் உலகத் தமிழர் பேரவையினர் அமெரிக்காவில் சந்தித்திருந்தனர்.

## புதுவருடத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புது வருடத்திற்கு முன்னர் தங்கள் தந்தையை விடுவிப்பதற்கு ஜனாதிபதி இணங்கியுள்ளார் என்று மகிழ்ச்சியுடன் கூறியுள்ள அக்குழந்தைகள், புதுவருடத்துக்கு முன்னர் தங்கள் தந்தையாரை வீட்டில் பார்ப்பதற்கு ஆவலுடன் தாங்கள் காத்திருக்கின்றனர் என்றும் நேற்றுக் கூறினர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே ஆனந்த சுதாகரனின் பிள்கைள் இவ்வாறு தெரிவித்தனர்.

தங்களுக்காகவும் தங்கள் தந்தையாரின் விடுதலைக்காகவும் பல வழிகளிலும் உழைத்த அனைத்துத் தரப்பினருக்கும் தங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறார்கள் எனவும் பிள்ளைகள் கூறியுள்ளனர்.

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கின்றார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை உரிய முறையில் பயன்படுத்துவதற்கான திட்டங்கள் எம்மிடம் இருந்தன. பதவிக்கு வந்த இந்த அரசு முதல் இரண்டு வருடங்கள் அந்தத் திட்டங்களைச் செயற்படுத்தாமல் தடுத்து வைத்திருந்தது. பின்னர் கடன் பொறியில் சிக்கியிருப்பதாகப் பொய்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அந்தத் துறைமுகத்தை சீனாவுக்கு குத்தகை என்ற பெயரில் கையளித்தது.

அதனால் இந்தியா குழம்பிப் போனது. குழம்பிப்போன இந்தியாவைச் சமாளிப்பதற்கு மத்தள விமான நிலையத்தை இந்தியாவுக்குக் கையளிக்க முன் வந்துள்ளது இந்த அரசு.

இதனால் இரண்டு நாடுகளுக்குமான பலப் பரீட்சைக் களமாக இலங்கை மாறியுள்ளது. இனி வரப்போகும் அரசின் தலைவர் மீதுதான் இந்தச் சிக்கலைக் களைய வேண்டிய பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது.

உலகப் பொருளாதாரத்தின் தளம் ஆசியாவிலிருந்து விலகிச் செல்கின்றது. அதனை எதிர்கொள்வதற்கான திட்டங்களை இலங்கை தயாரித்து, தயார் நிலையில் இருக்க வேண்டியது அவசியம்.

அரசைக் கவிழ்க்க விரும்புவோர் அதன் பின்னர் இந்தப் பொருளாதார நெருக்கடிகளை எப்படி எதிர்கொள்வது என்பதற்கான திட்டம் ஒன்றையும் தயாரித்துக் கொண்டிருக்க வேண்டும்.

நீங்கள் அரசை வீழ்த்தி விட்டு அதற்குப் பிறகு அரசியல் குறித்தும் ஏனைய விடயங்கள் குறித்தும் திட்டமிடமுடியாது. ஆகவே, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நீண்ட கால, குறுகிய காலத் திட்டங்களை நேரத்துடனேயே நாம் வகுத்து வைத்திருக்க வேண்டும். – என்றார் அவர்.

கடந்த புதன்கிழமை குளியாப்பிட்டியில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பிரதான உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். (உ)

## சீனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறின. அவரது விரிவுரைப் பயணம் ஒரு மாத காலம் என்றும் கூறப்பட்டது.

கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடுவதற்கு விரும்பியுள்ள புதுடில்லி அதற்காக அவருக்கு அழைப்பு விடுத்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையில், அவர் சீனாவுக்குப் பறந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

புதுடில்லித் தரப்புகளுடன் பேசும்போது தனது பேரம்பேசும் வலிமையை அதிகரித்து கொள்வதற்கான காய் நகர்த்தலாக இந்தச் சீனப் பயணத்தைத் திடீரெனக் கோட்டாபய முன்னெடுத்திருக்கலாம் என்று சில அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது.

## பருத்தித்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க, அதே போன்று படையினர் வசமிருக்கின்ற பொது மக்களின் ஒரு தொகுதி காணிகளையும் விடுவிப்பதற்கும் நடவடிக்கை எடுக் கப்படுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கீரிமலைப் பகுதியில் அமைக்கப்பட்ட நல்லிணக்கபுரம் இரண்டாம் கட்ட வீடுகளைப் பொது மக்களுக்கு வழங்கி வைத்து உரையாற்றுகையிலேயே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

வரவிருக்கின்ற புதுவருடத்திற்கு முன்னதாக படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் சுமார் ஐநூறு ஏக்கர் காணியை விடுவிக்க வேண்டுமென அரச அதிபர் என்னிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றார். அதற்கமைய எடுக்கக் கூடிய நடவடிக்கைகளைத் தேசிய பாதுகாப்பிற்கமைய மேற்கொள்ள இருக்கின்றோம்.

தொண்டமானாறு – பருத்தித்துறைப் பாதை பொது மக்கள் பாவனைக்காக விடுவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகளில் மட்டுமே பொது மக்கள் பயணிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே மக்களது நலன்களுக்காக எதிர்வரும் புத்தாண்டு முதல் அனைத்து வாகனங்களும் சென்று வரக் கூடிய வகையில் அந்த வீதியை முழுமையாக விடுவிக்க உள்ளோம்.

இங்கு நாங்கள் யாரிடமும் வாக்குக் கேட்டு வரவில்லை. நாம் மக்களுக்காகவே செயற்பட்டு வருகின்றோம். ஆகவே இங்குள்ள அரச அதிபர் கோரியமைக்கமைய கலந்துரையாடல்களை மேற்கொண்டு தேசிய பாதுகாப்பையும் கருத்திற்கொண்டு எங்களுடைய நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுப்போம். – என்றார்.

## ரணிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்தல் அல்லது எதிர்த்தல் அல்லது சு.க. உறுப்பினர்களைத் தமது மனசாட்சிப்படி வாக்களிக்க அனுமதித்தல் ஆகிய மூன்று முடிவுகளில் ஒன்றை எடுப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது சுதந்திரக் கட்சியினருக்கு உத்தரவிட முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணிக்கு சார்பான போக்கு சு.கட்சிக்குள் வலுத்து வருகையில், கட்சியின் தலைமையை வலுவாகத் தாம் தொடர்ந்து வைத்திருப்பதற்கு கட்சியின் போக்குக்கு விட்டுப்பிடிக்கவேண்டியகட்டாயத்துக்குள் ஜனாதிபதி மைத்திரிபால தள்ளப்பட்டிருக்கின்றார் என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## காணாமலாக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் தமது போராட்டத் தின் 400 ஆவது நாளை நேற்று அனைவரினதும்கவனத்தையும்ஈர்க்கும் வகையில் கைதடி யில் உள்ள வடக்கு மாகாண சபையின் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர். (உ)

## முதல்வர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண அதிகாரிகளுக்கும் இடையே நேற்றுப் பிற்பகல் சந்திப்பு இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த நிதியமைச்சர் மங்கள சமரவீர மற்றும் மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசாமி ஆகியோர் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனை நேற்று முற்பகல் சந்தித்தனர்.

இந்த நிலையில், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கின் 5 மாவட்ட செயலாளர்களையும் நிதியமைச்சர் நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணத்தில் சந்தித்தார்.

இதன்போது அபிவிருத்தித் திட்டங்களின் முன்னெடுப்புத் தொடர்பில் ஆராயப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நல்லிணக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தால் அமைக்கப்பட்ட நல்லிணக்கபுரம் இரண்டாம் கட்ட வீட்டுத் திட்ட வீடுகள் நேற்றுப் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

கீரிமலைப் பகுதியில் அமைக்கப்பட்ட இந்த 25 வீடுகளையும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க உத்தியோகபூர்வமாகக் கையளித்தார். இடம்பெயர்ந்து முகாம்களில் அகதிகளாக வாழும் மக்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சின் உதவியில் நல்லிணக்கபுரம் என்ற கிராமம் உருவாக்கப்பட்டு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

முதற்கட்டத்தில் நூறு வீடுகள் அமைத்து கொடுக்கப்பட்டன. அவற்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிவைத்திருந்தார். இரண்டாம் கட்டத்தில் 25 வீடுகள் அமைக்கப்பட்டன. இந்த வீடுகள் நேற்று மாவட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு அருகாமையில் உருவாக்கப்பட்ட நல்லிணக்கபுரத்தில் வைத்து வழங்கப்பட்டன.

மீள்குடியேற்ற அமைச்சின் நிதியில் தலா ஒன்பது லட்சம் ரூபா செலவில் இராணுவத்தால் இந்த வீடுகள் அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் இராணுவ அதிகாரிகள், அரச அதிபர் உள்ளிட்ட அரச அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

உடுவில், கோப்பாய், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை ஆகிய பகுதிகளில் முகாம்களில் தங்கியுள்ள 25 பேருக்கே இரண்டாம் கட்ட வீட்டுத் திட்டத்தில் வீடுகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# உலகின் முன்னணி கார் தயாரிப்பு நிறுவனம் இலங்கையில் வர்த்தகத்தை விரிவாக்குகிறது

உலகின் முன்னணி கார் தயாரிப்பாளராகத் திகழ்கின்ற ஸ்லோவாகியா தனது றப்பர் வர்த்தக செயற்பாட்டை இலங்கையுடன் விரிவுபடுத்தவுள்ளது என ஸ்லோவாகியா நிதி அமைச்சர் பீட்டர் கசிமீர் தெரிவித்தார்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் விசேட அழைப்பின் பேரில், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே, ஸ்லோவாகியா நிதி அமைச்சர் பீட்டர் கசிமீர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இந்தக் கலந்துரையாடலில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்தவை வருமாறு:-

எங்கள் றப்பர் உட்கொள்ளலை விரிவுபடுத்த நாங்கள் விரும்புகிறோம். அத்துடன் தற்போதைய எமது ஆபிரிக்க மற்றும் தென்கிழக்கு ஆசிய வழங்குநர்களிடமிருந்து வளங்களை விரிவாக்கவும் விரும்புகிறோம். சோவியத்தின் பிந்தைய பொருளாதார மறுசீரமைப்பின் காரணமாக, ஸ்லோவாக்கியா ஓர் உற்பத்தி பொருளாதார நாடாகியது.

எங்கள் தொழில்துறை ஏற்றுமதியில் 40 சதவீதம் வாகன ஏற்றுமதியாகும். KIA, Volkswagen, Jaguar, Landrover, Audi, and PSA Peugeot Citroenபோன்ற உலகளாவிய ரகங்கள் இப்போதுTier One OEM மட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

400 இற்கும் மேற்பட்ட ஸ்லோவாக்கிய சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறையினர் எமது வழங்குநர் சங்கிலியின் ஒரு பகுதியினர். எங்கள் வாகன உற்பத்தித் தொழில் வேகமாக வளர்ந்து வருகிறது, கடந்த ஆண்டுகளாக நாங்கள் உலகின் முன்னணி கார் தயாரிப்பாளராக திகழ்கின்றோம். இதன் விளைவாக, நாங்கள் இப்போது எங்கள் தொழில்துறை விநியோக மூலங்களை வேறுபடுத்தச் செயலாற்றி வருகின்றோம்.

உதாரணமாக, நமது றப்பர் உட்கொள்ளலை விரிவுபடுத்துவதற்கும், தற்போது ஆபிரிக்க மற்றும் தென்கிழக்கு ஆசிய வழங்குநர்களிடமிருந்து வளங்களை விரிவுபடுத்துவதற்கும் நாம் விரும்புகிறோம்.

ரயர் பொருள்கள் விநியோகம் எங்களுக்கு முக்கியமானது. இலங்கை றப்பர் துறையோடு விரிவுபடுத்துவதோடு, குறிப்பாக ரயர்களையும் கவனத்தில் கொள்கிறோம்.

எமது வர்த்தக பிரதிநிதிகளை இங்கு அனுப்பவும், இலங்கையில் (வாகனத் தொழிற்துறையினருக்கு) கைத் தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு விரும்பினால், எமது தொழில்நுட்ப அறிவை இலங்கைக்கு மாற்றவும் தயாராக இருக்கிறோம்.

இலங்கையிலிருந்து ஸ்லோவாக்கியாவிற்கு வரும் புதிய விநியோகங்கள், தற்போதுள்ள குறைந்த மட்ட இருதரப்பு வர்த்தகத்தை அதிகரிக்கவும் முடியும் என்று தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தவை வருமாறு:-

எமது றப்பர், ரயர்கள் மற்றும் வாகனத் துறைக்கு தொழில்நுட்ப பரிமாற்றத்திற்கு ஸ்லோவாக்கியா நாட்டின் ஆர்வத்தை நான் வரவேற்கிறேன். இந்த நடவடிக்கைகள் எமது உற்பத்தி மற்றும் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

முக்கியமாக, வரலாற்றில் உலகிற்கே இயற்கை றப்பர் வழங்குநராக இலங்கை திகழ்வது என்பது இலங்கைக்கு ஒரு மரியாதை ஆகும். வரலாற்றுப் புகழாக காணப்பட்ட இயற்கை றப்பர் தவிர இந்தத் துறையை அதிகரிக்கச் சமூக பொருளாதாரமும், ஒரு முக்கியமான காரணமாக இருந்தது.

இலங்கை 06 ஆவது பெரிய ஏற்றுமதியாளராகவும் மற்றும் 8 வது இயற்கை றப்பர் உற்பத்தி நாடாகவும் உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

# ஜி.சீ.ஈ. சா/தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 31

2017 ஆம் ஆண்டின் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் கிடைக்கப்பெற்ற மாணவர்களின் பெறுபேறுகளை பாடசாலை அதிபர்கள் 'காலைக்கதிருக்கு' அனுப்பி வைத்துள்ளனர். அந்தப் பெறுபேறுகள் வருமாறு:-

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**

தமிழ்மொழி மூலம் - 9A பெற்றுக் கொண்ட மாணவர்கள் ஜே.அகிலன், ஜி.ஆரோகணன், எஸ்.சகீர்தன், எஸ்.சாருஜன், பி.அபிராம், எஸ்.பிருந்தாவன், எ.ஜதுர்ஷன், ரி.சாருஜன், ஆர்.அபர்ணன், கே.கருசன், வை.கௌரிசங்கர், எஸ்.நிவேதன், கே.பதுஷனன், ரி.சங்கீதன், கே.அனுசன், கே.ஆரூரன், ஜே.சார்ள்ஸ், என்.ஹரிகிருஸ்ணா, ரி.கஜலக்ஷனன், பி.நிலக்ஷன், எம்.பிரகஜன், எஸ்.சஞ் ஜீவன், ஜே.ஸ்ரீவ் நிவேதன், எஸ்.தன லக்ஷன், கே.உமாகாந்தன்.

**ஆங்கிலமொழி மூலம்** - 9A பெற்றுக்கொண்ட மாணவர்கள் பி.அர்ஜுன், எ.டினுஜன், எஸ்.கோபி கிஷன், ரி.ஜதுர்ஷன், எஸ்.லோகஜன், எஸ்.லக்ஷன், ஜே.மாதவன், வி.வினு கரன், பி.பிரவீன சர்மா, கே.ஷரன், எஸ்.துவாரகன்.

**தமிழ்மொழி மூலம்** - 8A பெற்றுக் கொண்ட மாணவர்கள் பி.டயஸ் ஆனோல்ட், எம்.றீகன், ஆர். சாரங்கன், எ.சிவதீவன், எல்.கஜீபன், ஜி.நந்தபாலன், எஸ்.சங்கவன், பி. அஜித், ரி.இனியவன், எஸ்.கஜதீபன், சி. கலாதரன், பி.கவியரசன், எஸ்.பிரவீன், ஜே.பிரின்ஸ், ஆர்.பிரியங்கன், ரி.சமரழகன், எஸ்.சத்யன், எல். துவாரகன், ஜே.அர்ச்சுனன், ரி.ஜீவ சாந்த், எம்.ஹரிகரன், வி.ஜவகர், என்.கஜேந்திரன், ஜே.கிஷோரன், கே.கோமைந்தன், பி.கோபிராம், வை.நிரோஜன், எஸ்.பிரணவன், யூ.சங்கீத், எஸ்.ஸ்ரீ குருபிரசாத், எஸ்.திவிக்ஷனன், வி.துவாரகன், கே.உமா கஜன், ஜி.வாகீசன், எஸ்.வினோஷன்.

**ஆங்கிலமொழி மூலம்** - 8A பெற்றுக் கொண்ட மாணவர்கள் எஸ்.கீர்த்திகன், எஸ்.மன்னமிர்தன், எல்.மதுர்ஷன், பி.மிசோதன், எஸ். பரணிதரன், பி.பவதாரகன், ஆர்.திஷோக், ஜி.விதுஷன், எல்.டிலோஷன்.

**தமிழ்மொழி மூலம்** - 7A பெற்றுக் கொண்ட மாணவர்கள் எஸ்.கோபீசன், என்.லக்ஷன், ரி.மேனு ஜன், ஆர்.பிரணவன், கே.சசிகரன், ஜே.சாதுரியன், எ.சங்கீத், எஸ்.யபிஷேக், எம்.லவதர்ஷன், வி.விதுஷன், ஜே.அனோஜ், என். ஜதுஷனன், எஸ். விதுர்ஷன், எஸ்.ஜெயராம், எஸ்.கஜ னன், வி.கிருஷ்ணவர்ணன்.

**ஆங்கிலமொழி மூலம்** - 7A பெற்றுக் கொண்ட மாணவர்கள் எஸ்.அர்பிந்தா, ஆர்.நிமல், எஸ்.சிவம் சன், யூ.சுதர்சன், வி.தனிகஜன், வி.திலக்ஷன், எம்.திவ்வியகரன், எஸ்.வித்யபவன், கே.ஆர்த்திகன், எஸ்.ஜதுகுலன், வி.ஜயகுலன், வி.கபிலன், எஸ். கிஷோர், எஸ்.குகப்பிரியன், ரி.லகிதர், எஸ்.சாருஜன், எல். ஷமிந்தன், ரி.சிவவருணன், என்.தனுரேஷ், எம்.தீசன், எம்.துவாரகன்.

**கொக்குவில் இந்துக் கல்லூரி**

ரி.கோபிகன் - 9A, கே.சுகிகரன் - 9A, கே.ஜனார்தன் - 9A, ஜெ.கஜவதனா - 9A, ரி.சுனேகா - 9A, எ.பானுஷா - 9A, பி.கிஷானி - 9A, என்.மைவிழி - 9A, ரி.சுந்தரேஸ்வரி - 9A.

எ.அருண் - 8A, B, எஸ்.சுதர்சிகா - 8A, B, எஸ்.கனுசிகன் - 8A, B, ஐ.சங்கீர்த்தனன் - 8A, B, எஸ்.விமர்சன் - 8A, B, பி.சரண்யா - 8A, B, கே.அபிநயன் - 8A, B, பி.அஜூந்தன் - 8A, B, எஸ்.செந்தமிழ்ச்செல்வி - 8A, B, கே.ரகுராம் - 8A, B, ஆர்.பிரனீவா - 8A, B, எஸ்.பிரிந்திகா - 8A, B, ஜே.டினோஜா - 8A, B , பி.கார்த்திகாயினி - 8A, B, எஸ்.லக்ஷாயினி - 8A, B, எஸ்.லக்சிகா - 8A, B , பி.ஷாலினி - 8A, B, எஸ்.மதுசன் - 8A, C, எம்.ஜனுசியா - 8A, C.

எஸ்.கமலராஜா - 7A, 2B, எம்.கௌரிதாஸ் - 7A, 2B , ஆர்.பவித்தனன் - 7A, 2B, கே.பிரவீனயா - 7A, 2B, எஸ்.லோகராஜ் - 7A, B, C, ஆர்.விஸ்வசந்துருஜயர் - 7A, B, C, எஸ்.கம்சாஜினி - 7A, B, C, பி.பிரகாஷ் - 7A, B, C, எஸ்.சுஞ்சிகா - 7A, B, C, எஸ்.ஆதித்தன் - 7A, B, C, கே.மதுஜா - 7A, B, S, ஆர்.நிதர்சனா - 7A, B, S, கே.சஜூகன் - 7A, B, S, வி.தாரகா - 7A, 2C, கே.ரஞ்ஜனி (2 ஆம் அமர்வு) - 7A, 2B.

எஸ்.லினோஜன் - 6A, 3C, எஸ்.சாரங்கன் - 6A, 2B, C, கே.விதுஷன் - 6A, 2B, C, பி.கவிராம் - 6A, 2B, C, பி.நிவேதன் - 6A, 2B, C, பி.ஜெருசன் - 6A, 2B, C, ரி.ஆரணி - 6A, 2B, C, ரி.டினேஷ் - 6A, 2B, C, எம்.திவியா - 6A, 2B, C, எஸ்.குபேந்தினி - 6A, 2B, C, எம்.மதுர்சனா - 6A, B, 2C, எஸ்.பிரியதர்சினி - 6A, B, 2C, ஜி.ஜஸ்மினி - 6A, B, 2C, என்.அபிநயா - 6A, B, 2C, ரி.நிவேதனா - 6A, B, C, S, ஆர்.ஷாலினி - 6A, B, C, S, யூ.கம்சினி - 6A, B, C, S, எஸ்.ராஜீவ் - 6A, 2B, S, கே.சங்கவி - 6A, 2B, S, எ.விதுசனா - 6A, 2C, S, வி.மதுராந்தகி - 6A, 2C, S, எஸ்.பகலவன் - 6A, B, C, W.

எஸ்.தரண்யா - 5A, 4B, என்.விதுஷனா - 5A, 4B, ரி.துபாகரன் - 5A, 3B, C, ஆர்.துவாரகன் - 5A, 3B, C, ரி.டிஷாந் - 5A, 3B, C , ரி.கம்சாயினி - 5A, 3B, C, எஸ்.டெனீசன் - 5A, 3B, C, வி.சுமித்திரா - 5A, 3B, S, ஐ.சதுர்சனா - 5A, 3B, W, ஆர்.தர்மினி - 5A, 2B, 2C, எஸ்.தர்சிகா - 5A, B, 3C, கே.மிதுதர்சன் - 5A, B, 3C, எஸ்.நிலுதிகா - 5A, 2B, C, S, பி.ராதாஞ்ஜலி - 5A, 2B, C, S, எஸ்.சுருதி சாகரன் - 5A, 2B, C, S.

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

தனராஜ் சுந்தர்பவன் 9ஏ, ரவிகரன் அருசன் 9ஏ, சிறீகந்தராஜா சஜீதன் 9ஏ, கிருபாகரசர்மா சுதர்சன் 9ஏ, சந்திரதாஸ் சங்கீத் 9ஏ, உதயகுமார் பவலக்சன் 9ஏ, இராசேந்திரா லக்ஷாயினி 9ஏ, சஞ்சீவன் அபிராமி 9ஏ, கர்ணன் ஆதிகா 9ஏ.

பி.ஸ்ரீராம் 8ஏபி, சி.அஜந்தன் 8ஏசி, சி.நிரோசன் 8ஏசி, த.குபேரன் 8ஏஎஸ், இ.அகலிசன் 8ஏசி, சு.சாருஜன் 8ஏஎஸ், து.யதுசன் 8ஏஎஸ், சி.பிருந்தன் 8ஏஎஸ், ம.துளசிகா 8ஏசி, ம.கீதாஞ்சலி 8ஏசி, ப.சஞ்சிகா 8ஏபி, செ.அஜித்தா 8ஏசி, கு.கம்சிகா 8ஏபி, இ.பாதுஷா 8ஏசி, சி.சங்கவி 8ஏசி, க.சுபாங்கி 8ஏசி, க.சேனுஜா 8ஏசி, மு.சௌமியா 8ஏசி(ஆங்கில மொழி மூலம்), ஸ்ரீ.சைந்தவி 8ஏசி(ஆங்கில மொழி மூலம்)

வி.சிந்துஜன் 7ஏபிசி, சு.லிலக்சன் 7ஏபிஎஸ், சி.பகீதன் 7ஏபிசி, க.கிந்துசன் 7ஏ2பி, இ.பக்சிகா 7ஏபிஎஸ், கு.கம்சாயினி 7ஏபி, சி.கேனுஜா 7ஏ2பி, சி.சாருஜா 7ஏபிசி, க.கௌதினி 7ஏ2சி, கி.மகிழினி 7ஏ2பி, ச.தனுஜா 7ஏபிசி, கோ.அனுசியா 7ஏபிசி, அ.சுரேக்கா 7ஏபிசி, ம.பானுகா 7ஏ2பி(ஆங்கில மொழி மூலம்)

வி.அபிராம் 6ஏ3பி, த.சாகித்தியன் 6ஏ2பிசி, செ.இளங்கதிர் 6ஏ3பி, ந.அருண் சங்கர் 6ஏ2பிசி, ச.லக்சன் 6ஏ2பி, ந.ஜீவராஜ் 6ஏ2பி, ப.நர்மதன் 6ஏ3பி, நி.சங்கீதா 6ஏ3பி, ந.துஷாயினி 6ஏபிசி, அ.யதுர்சனா 6ஏ2பிசி, வி.தமயந்தி 6ஏபிசிஎஸ், மா.செந்தூரி 6ஏ2பிசி, வீ.மதிநிலா 6ஏ2பிசி, சு.சந்தியா 6ஏ2பிசி

ந.சங்கவிதன் 5ஏ3பிஎஸ், சி.இளங்குமரன் 5ஏ2பிசிஎஸ், ச.சிந்துஜன் 5ஏ2பி2சி, ஆ.றோகு லன் 5ஏ3பிஎஸ், க.பிரதீபன் 5ஏ3பிஎஸ், இ.கஜந்தன் 5ஏ3பிஎஸ், க.கலைமொழி 5ஏ2பிசி எஸ், ஜெ.விதுர்சிகா 5ஏபி2சிஎஸ், ந.நிருஷா 5ஏ2பிசிஎஸ், ம.ஆதித்தனா 5ஏ2பி2சி, மு.தேனுஜா 5ஏபி3சி, அ.சர்மிளா 5ஏபி2சிஎஸ்,

க.சஞ்சிகா 5ஏபி3சி, பி.குயின்சா 5ஏ4பி, பி.அகீபன் 4ஏ2பி 2சிஎஸ், இ.ரவிராஜ் 4ஏ3பிசி, ந.கிஷாந் 4ஏ4பிஎஸ், ச.நிலக்ஷன் 4ஏ2பி3சி, தி.தனுசியன் 4ஏ2பி3சி, ச.சகானா 4ஏ4பிஎஸ், ச.கனுஜா 4ஏ3பிசிஎஸ், லி.சகானா 4ஏ3பிசிஎஸ், சி.நிலக்சனா 4ஏ3பி2சி, க.மிதுஷா 4ஏ3பி2சி, கோ.தரணிகா 4ஏ3சிஎஸ், தே.உசா 4ஏ2பி3சி, க.வைஷ்ணவி 4ஏ3பி2சி, ஜெ.பானுஜா 4ஏ2பி3சி, ஜெ.வினு 4ஏ5பி, சி.திலக்சனா 4ஏ3பி2சி.

**சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி**

எஸ்.கோகுலவதனன் 8ஏபி, ரி.யர்சிகா 6ஏ2பிசி, எஸ்.தனுசன் 6ஏ2பிஎஸ், யு.மிதுசனா, 5ஏ4பி, ரி.சுனைனா 5ஏபி3சி, எஸ்.தாரணி 5ஏபி2சி, என்.ஐங்கரன் 4ஏ2பி2எஸ், எஸ்.பாலமுருகன் 4ஏ4பிசி, எஸ்.துசாந்தன் 4ஏ3பிசிஎஸ்.

**மகாஜனக் கல்லூரி - தெல்லிப்பழை**

தமிழ்மொழி மூலம் - ரி.சுஜியேந்திரன் - 9A, எஸ்.தாமிரவரன் - 9A, எஸ்.கார்த்திகா - 9A.

ரி.கஜன் - 8A, B, எம்.கிருஸன் - 8A, B, எ.நிரோசன் - 8A, B, எஸ்.பிரியங்கா - 8A, B, ரி.சோவென்யா - 8A, B, யூ.சருணுகா - 8A, B.

என்.தனிசிகா - 8A, C, ஆர்.தீபிகா - 8A, C, பி.சாருஜன் - 8A, C.

ஆர்.ரிசாந் - 7A, 2B, வை.ஜசித் - 7A, B, C, எஸ்.மகிஸினி - 7A, B, C, எஸ்.சுபாங்கி - 7A, B, C, ஜே.டினுசாந் - 7A, B, C.

பி.திசானா - 6A, 3B, ஜே.பிரியங்கா - 6A, 2B, C, வை.ஐங்கரன் - 6A, 2B, C, எஸ்.நிதுசா - 6A, B, C, S, என்.தரண்யன் - 6A, 2C, S.

என்.மதுசங்கா - 5A, 3B, C, எஸ்.கோசிகா - 5A, 3B, C, ஆர்.பிரியங்கா - 5A, 2B, 2C, வி.விந்துசா - 5A, 2B, 2C, எஸ்.சயனி - 5A, 2B, C, S, எஸ்.நிதுலன் - 5A, 2B, C, வை.யோஜீவன் - 5A, 2B, C, எஸ்.டிலக்சனா - 5A, B, 3C. என். பிரவீனா - 4A, 4B, C, வை.லாவண்யா - 4A, 4B, C, கே.அர்ச்சிகா - 4A, 3B, 2C, ரி.சிந்துசன் - 4A, 3B, 2C, என். விதுர்சிகா - 4A, 3B, C, S, கே.தீபிகன் - 4A, 2B, 3C, பி.கம்சத்வனி - 4A, 2B, C, 2S, பி.துவாரகன் - 4A, 2B, C, 2S, பி.ரதிநிலா - 4A, 2B, C 2S, வி.லேகா - 4A, 2B, C 2S, ரி.இசையரசி - 4A, 2B, C 2S, எம்.ஞானவரன் - 4A, B, 3C, S.ஆங்கிலமொழி மூலம் - எஸ்.கபிலா - 9A, எஸ்.குயின்சிகா - 9A, எஸ்.லக்ஸன் - 8A, B, எஸ்.ஹரிகரன் - 8A, C,.

**காரைநகர் இந்துக் கல்லூரி**

ஏ.கோபிநாத் - 9A, பா.சிவராஜினி - 9A, அ.பிரணவரூபன் - 8A, B, ச.தாரணி - 4A, 3B, C, S, ஆ.அமிர்தா - 4A, 3B, C, அ.ஜீவரங்கன் - 4A, B, 2C, S, கோ.பிருந்தா - 3A, 2B, 3C, S.

**விக்ரோறியாக் கல்லூரி - சுழிபுரம்**

க.சியாமன் - 9A , ஞா.கௌசல்யா - 8A, B ,வி.மதுசாளினி - 8A, B, கி.அபர்ணா - 8A, B, இ.கிருத்திகாயினி - 8A, B, அ.ராதாகிருஸ்ணன் - 8A, B, ஆ.திவ்ஜா - 7A, B, பா.அம்சா - 7A, 2C, ப.தர்மிகா - 6A, 2B, சௌ.திவாகர் - 6A, 2B, சு.யசோதினி - 6A, B, 2C, வி.வைஷ்ணவன் - 6A, B, C, S, ம.யது ஷன் - 6A, B, C, S, இ.வேணுகா - 5A, 3B, S, நீ.கஜன் - 5A, 3B, எ.சாருஜா - 4A, 4B, C, ச.நிருஷா - 4A, 3B, C, S, வி.முரளிதரன் - 4A, 2B, 2C, S, கோ.சிவலக்ஸி - 4A, 2B, 2C, ஞா.கிரிஜா - 4A, 2B, 2C, பா.கேதுஷா - 4A, B, 4C, கு.சுவர்ணா - 4A, B, 3C, கி.சுவேனியா - 4A, B, 3C, S, க.தமிழ்வாணி - 4A, 3C, S

(இ)

# அரசியல் கைதிகள் விடுவிப்பு; நாடு கடந்த அரசு வலியுறுத்து



அரசியல்கைதிகளை விடுதலை செய்ய அழுத்தம் கொடுக்க வேண்டும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசாங் கத்தின் விளையாட்டு, சமூகநல அமைச்சின் பிரதியமைச்சர் சொ.யோகலிங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் Stephen Timms (MP for East Ham) அவர்களை நாடுகடந்த தமிழீழ அரசாங்க East Ham தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஆறுமுகம் தலைமையில் கிழக்கு லண்டன் ஏற்பாட்டாளர் அந்தன் தியாகராஜா மற்றும் தமிழ்த்தேசிய செயற்பாட்டாளர்கள் சந்தித்து இலங்கையிலுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வதற்கு பிரித்தானியா அழுத்தம் கொடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர்.

இந்தச் சந்திப்பில், அண்மையில் பலரது மனங்களைக் கலங்க வைத்த – கிளிநொச்சியைச் சேர்ந்த அரசியல் கைதி ஆனந்தசுதா கரன் அவரது மனைவியின் இறுதிக் கிரியைக்காக 3 மணித்தியாலங்கள் மாத்திரம் அனுமதிக் கப்பட்டிருந்த பின், இலங்கை பொலிஸ் வாகனத்தில் ஏற முற்பட்டபோது அவரது மகளும் தந்தையுடன் செல்ல முற்பட்டமை அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தி உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இதனை நாடாளுமன்ற உறுப்பினரிடம் எடுத்துரைத்தமையோடு இரண்டு பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு ஆனந்தசுதாகரனின் விடுதலைக்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

இவ்விடயத்தை நாடாளு மன்ற உறுப்பினர் Stephen Timms உடனடியாக வெளிவிவகார அமைச்சர் போரிஸ் ஜோன்சனுக்குத் தெரியப்படுத்தினார்.

இதேவேளை இலங்கையிலுள்ள அரசியல் கைதிகளை உடனே விடுதலை செய்ய வலியுறுத்தி நாளை முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாடு கடந்த தமிழீழ அரசால் பிரித்தானிய பிரதமர் அலுவலகத்திற்கு முன் பாக ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவும் அழைப்பும் விடுக்கப்பட்டுள்ளது. (உ–100)




## குத்தகைக்கு / விற்பனைக்கு

மூளாய் வீதி, வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டையிலுள்ள மதுரா அரிசி ஆலை (18 பரப்பு காணியுடன்) வருடக் குத்தகைக்கு கொடுக்கப்படும். அல்லது விலைக்கு வாங்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு: 077 666 0222**

## பதவி வெற்றிடம்

பிரபல நிறுவனத்தில் பணி புரிவதற்கு கணினி அறிவுடைய ஆண் / பெண் இருபாலரும் தேவை.

- Typist - Tamil & English
- Accounts Cleark
- Bill Clerk
- Sales Rep (Boys)
  (மோட்டார் சைக்கிள் லைசன்ஸ் உள்ளவர்கள்)
- Cashier (காசாளர்)

சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும்.
முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
ஓய்வு பெற்றவர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
மே/பா விளம்பர இலக்கம் 1050
காலைக்கதிர்
இல.30, இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

## வட்டு. கிழக்கு - துறட்டிப்பனை அருள்மிகு முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

## நூதன பஞ்ச தள இராஜகோபுர மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்



கும்பாபிஷேகம்:
பங்குனி மாதம்
18ஆம் நாள் நாளை
ஞாயிற்றுக்கிழமை

முகூர்த்தம்:
காலை 9.10 மணி முதல்
10.25 மணி வரை

அன்னை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பெற்ற வில்லு மண்டபத்தோடு கூடிய அதிகம்பீரமாகவும், அழகிய சிற்ப வேலைகளும் வர்ண வேலைகளும் அமையப்பெற்ற பஞ்சதள இராஜகோபுரத்திற்கும் புதிதாக வரவழைக்கப்பெற்ற நாகராஜப்பெருமானுக்கும் புதிய மணிக்கோபுரத்திற்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை சித்திரை நட்சத்திரமும், அமிர்தசித்தயோகமும் கூடிய காலை 9 மணி 10 நிமிடம் முதல் 10 மணி 25 நிமிடம் வரையுள்ள இடப இலக்கின சுப புண்ணிய வேளையில்.

பங்குனித் திங்கள் 17ஆம் நாள் (31.03.2018) சனிக்கிழமை காலை 9 மணி முதல் எண்ணெய்க்காப்பு சாத்துதல் ஆரம்பமாகும்.

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'

இங்ஙனம்:
ஆலய பெறுநரும்
இராஜகோபுர திருப்பணிக் குழுவினரும்.

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி விவேகானந்தன்



பழைய புகையிரத வீதி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி விவேகானந்தன் வியாழக்கிழமை 29.03.2018 இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் நவாலி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற விவேகானந்தனின் (Agricola) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா – இராசம்மா தம்பதியினரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து – பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், நிறைஞ்சலா, நிறைஞ்சன் (பணிப்பாளர்: Euroville, MNyhrfh; Bartleet Religare Securities (Pvt) Ltd) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நிற்குணானந்தன்(Retired Director of Customs,Consultant - Ministry of Finance (Department of Trade & Investment Policy), குலரஜனி (சிரேஷ்ட விரிவுரையாளர், தாவரவியற்றுறை – யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புமாமியாரும், லக்ஷ்மினி , மயூரேஷ், தனுரேஷ் (யாழ்.இந்து மாணவர்கள்) ஆகியோரின் அருமை பேர்த்தியும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, செல்வரட்ணம், புவனேஸ்வரி மற்றும் கனகேஸ்வரி (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.04.2018) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல.46, செட்டித்தெரு நல்லூரில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வி.நிறைஞ்சன் – 077 304 3206

தகவல்: குடும்பத்தினர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.03.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.